

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தினால்
மேற்கொள்ளப்பட்ட ஓர் அய்வு கற்கை

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு

# மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு

ESDF - SRI LANKA

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தினால்
மேற்கொள்ளப்பட்ட ஓர் அய்வு கற்கை

**மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு**

(C) கிழக்கு சமூக அபிவிருத்தி மையம்

முதலாம் பதிப்பு - ஆகஸ்ட் 2018

ISBN 978-955-7170-01-5

ESDF - SRI LANKA

வெளியீடு

**கிழக்கு சமூக அபிவிருத்தி மையம்**

33, புகையிரத வீதி, ஒட்டமாவடி-01, மட்டக்களப்பு, இலங்கை.

+94 652 258 320

esdf.srilanka@gmail.com

www.facebook.com/esdf.srilanka

# சமர்ப்பணம்

இக்குறிப்பிட்ட ஆய்வுக் கற்றலானது, மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை (GBV) பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான மதிப்பீடொன்றைக் கையாளுகின்றது. இந்த ஆய்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட சேவைகளை அணுகியிருந்த பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரையும், அத்தகைய சேவை வழங்குகையின் பயனுறுதன்மை மற்றும் பதிலிறுத்தற்தன்மை பற்றிய அவர்களின் அனுபவங்களையும் உள்ளடக்குகின்றது. அத்துடன் இவ்வாய்வு, அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளில் காணப்படுகின்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையை முன்னேற்றுவதையும் தரமுயர்த்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவ்வாய்வு, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினதும் அத்தகைய வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களினதும் உதவியில்லாது சாத்தியமாகியிருக்க முடியாது. அவர்கள், இவ்வாய்வுக்காகத் தமது நேரத்தையும் அனுபவங்களையும் மனவிருப்புடன் பகிர்ந்துகொண்டனர்.

தரவுகளைச் சேகரிக்கும்பொருட்டு கள மட்டத்தில் பணியாற்றிய கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் (ESDF) பணியாட் தொகுதியினருக்கும் தரவு சேகரிப்பாளர்களுக்கும் நன்றிதெரிவிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்டுத்திக்கொள்கின்றேன். மேலும், பெறுமதிமிக்க உதவியை வழங்கியதனூடாக இப்பண்பறி ஆய்வுக் கற்றலுக்கு (qualitative research study) தொழில்நுட்பரீதியில் உதவியும் வழிகாட்டலும் வழங்கிய திரு. சுடர் தீபன், திருமதி. மரிலின் வீவர், திருமதி. வேலாயுதன் ஜெயச்சித்ரா ஆகியோருக்கும் எமது மனமார்ந்த பாராட்டையும் நன்றிகளையும் உரித்தாக்குகின்றோம். இவர்களின் பங்களிப்பின்றேல் இதனைப் பூரணப்படுத்துவது என்பது சாத்தியமின்றியே இருந்திருக்கும்.

மேலும், இந்த ஆய்வுக்கற்றலின் ஒவ்வொரு படிநிலையிலும், தேவைப்பட்ட ஊக்குவிப்பையும் அவசியமான நிர்வாக உதவியையும் வழங்கிய கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு. புஹாரி முஹம்மட் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெறுமதிமிக்க இந்த ஆய்வை நிறைவேற்றுவதற்கு PADEM நிறுவனத்தின் பங்காண்மையுடன் நிதியுதவியளித்த எமது நன்கொடையளிப்பாளரான லக்சம்பேர்க் நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**திருமதி. ரேணுகாராணி சௌந்தரராஜ்**

தொழில்நுட்ப ஆலோசகர்

# கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் (ESDF) செய்தி

“மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வு” என்ற அறிக்கையை வெளியிடும் சந்தர்ப்பத்தில் இச்செய்தியை வழங்குவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான சேவைகளை வழங்கியுள்ள, அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட, பல நிறுவனங்கள் காணப்படுகின்றன. அதேவேளை, சுனாமி அனர்த்தத்தின் பின்னர் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் பற்றிய விடயம் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கிடையே மிக முக்கியமான, கருத்திற்கொள்ளத்தக்க விடயமொன்றாக உருவானது. ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நன்கொடையளிக்கும் முகவரமைப்புக்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் சிவில் சமூக நிறுவனங்கள் என்பன பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு பதிலிறுப்பதற்கும், அத்தகைய மீறுகைகளைத் தடுப்பதற்கும் பல்வேறுபட்ட வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களையும் செயற்பாடுகளையும் தொடக்கிவைத்தன.

அதேநேரம், அரசசார்பற்ற நிறுவனத்துறை மீது காணப்பட்ட முன்னைய அரசாங்கத்தின் அழுத்தமும் கட்டுப்பாடும் இலங்கையில் உரிமைகள் சார்ந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான தடைகளாக அமைந்தன. முன்னைய அரசாங்கம், இலங்கையானது ஆசியப் பிராந்தியத்தில் நடுத்தர அளவில் அபிவிருத்தியடைந்த நாடுகளுள் ஒன்றாக உள்ளதெனச் சுட்டிக்காட்டியது. ஆதலால், மேற்சொல்லப்பட்ட காரணங்களின் விளைவாகப் பல அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது நிகழ்ச்சித்திட்டங்களை இடைநிறுத்திவிட்டு இலங்கையிலிருந்து சென்றன. இத்தகைய நிலைமை காரணமாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரான பலிக்குட்படுத்தப்பட்டோர், விசேடமாக வறிய மற்றும் இலகுவில் பாதிப்புறத்தகு தன்மையைக் கொண்ட பெண்கள், சேவை வழங்குகைக்கான கூடுதலான அணுகுகையை இழந்துள்ள நிலையில், இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து தேவையான உதவிச் சேவைகளைப் பெறுகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்தத்திற்குப் பின்னரான சூழலினுள் ஒருசில உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களே, மிகவும் வரையறுக்கப்பட்ட வளங்களுடனும் கால எல்லையினுள்ளும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் பணியாற்றி, அத்தகைய வன்முறையினால் பலிக்குட்படுத்தப்பட்டோருக்கு உதவி வருகின்றன. கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் அவற்றுள் ஒன்றாகவுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள பலிக்குட்பட்ட பெண்கள், தமக்கான சேவை வழங்குகை குறித்துத் திருப்தியடையவில்லை என்பதை மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையில் நிலவுகின்ற சவால்களையும் இடைவெளிகளையும் அடையாளம் காண்பதற்கான ஆய்வினூடாகவும், எமது பணியாற்றுகை மற்றும் சேவை வழங்குகை அனுபவங்களினூடாகவும் கண்டுணர்ந்தோம்.

குறிப்பாக, கிடைக்கக்கூடிய சேவைகளை அணுகுதல் தொடர்பில் அவர்களுக்குச் சவால்களுள்ளன என்று நிறுவனங்களும் அத்தகைய பலிக்குட்பட்டோரும் கருதுகின்றனர். ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவனங்களின் சேவை வழங்குகையில் காணப்படுகின்ற உண்மையான இடைவெளிகளையும், அத்தகைய வன்முறைக்குப் பலியான பெண்கள் இலகுவான அணுகுகையுடன் தமக்கான மிகச்சிறந்த சேவை வழங்குகையைப் பெற்றுக்கொள்வதற்கான தேவைகளையும் அடையாளங்காணும் குறிக்கோளுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான ஆய்வொன்றை முன்னெடுப்பதற்கு கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் கருதியது. இதற்கு மேலதிகமாக, ஆய்வின் கண்டறிதல்களை அரச சேவை வழங்குநர்கள், தீர்மானங்களை மேற்கொள்வோர், கொள்கை வகுப்பாளர்கள், நன்கொடையளிக்கும் முகவரமைப்புக்கள் மற்றும் உள்ளூர் சமூக சேவை நிறுவனங்கள் (CSOs) என்போருக்கிடையே பரப்புவதற்கும் அது கருதியது. இந்த ஆய்வறிக்கையானது வெற்றிகரமான ஆதரித்துவாதிடுதற் கருவியொன்றாகச் செயற்படும் என்றும், மிக முக்கியமாக, அரச மற்றும் அரசசார்பற்ற சேவை வழங்குநர்களுக்கு மத்தியில் மிகச்சிறந்த சேவை வழங்குகை தொடர்பில் யதார்த்தமானதும் கண்ணுக்குப் புலப்படத்தக்கதுமான அதிகரிப்புக்கு வழிவகுக்கின்ற உறுதியான நடவடிக்கையைத் தூண்டும் என்றும், நான் எதிர்பார்க்கின்றேன்.

இந்த ஆய்வானது, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் ஈடுபடுதலும் அவற்றுக்காக ஆதரித்துவாதிடுதலும் என்னும் செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டத்திற்கு, PADEM நிறுவனத்தின் பங்காண்மையுடன், லக்சம்பேர்க் நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு நிதியுதவி அளித்தது. ஆகவே, இந்த ஆய்வை மேற்கொள்வதற்கென நிதிசார் உதவியை வழங்கியமைக்காக லக்சம்பேர்க் நாட்டின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு நன்றி தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துகின்றேன். மேலும்,

எமது முயற்சிகளில் பங்காளராகவிருந்து இந்த உத்தேசிக்கப்பட்ட செயற்றிட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்குப் பங்குவகித்த PADEM நிறுவனத்திற்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மேலும், மாவட்ட செயலகத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவினூடாக சகல அரசாங்க நிறுவனங்களுடனும் ஒருங்கிணைவதற்கு எம்முடன் ஒன்றிணைந்து பணியாற்றி எமக்கு உதவியமைக்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் மாவட்ட செயலகத்துக்கு நன்றி தெரிவிக்க விரும்புகின்றேன். அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த ஆய்வை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கான தகவல்களையும் தரவுகளையும் வழங்கிய மகளிர் நிறுவனங்களுக்கும் எமது நன்றிகளை உரித்தாக்குகின்றோம்.

கிழக்கு சமூக அபிவிருத்தி மைய குடும்பத்தின் சார்பில்,

**திரு. புஹாரி முஹம்மட்,**
நிறுவுனர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர்
கிழக்கு சமூக அபிவிருத்தி மையம்

# சுருக்கம்

பால்நிலை அடிப்படையிலான வன்முறை என்பது இன்று உலகம்பூராவும் காணப்படுகின்ற பாரதூரமானதொரு பிரச்சினையாகும். இதன் மூலம் அதிகம் பாதிக்கப்படுகின்றவர்களாக ஆண்களும் ஆண்பிள்ளைகளும் காணப்படுகின்றபோதிலும், மிக அதிகமாகப் பெண்களும் பெண்பிள்ளைகளுமே இத்தகைய உரிமை மீறல்களுக்கு உள்ளாகின்றனர். எவ்வாறாயினும், ஒப்பீட்டளவில் பாலியல் வன்முறைக்குப் பலியாகின்றவர்களாக இதுவரை பெண்களும் பெண்பிள்ளைகளுமே உள்ளனர். ஆகவே, இந்த ஆய்வின் நோக்கங்களுக்காக, இந்த ஆய்வுக் கற்றலானது மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமைகளை அணுகுவதில், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள பெண்களினதும் பெண்பிள்ளைகளினதும் அனுபவங்கள் பற்றி அவர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களின் மீது கவனக்குவிவைச் செலுத்தியுள்ளது.

இலங்கையில், அதிலும் குறிப்பாக அதன் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில், பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் மீதான பல அக்கறைகள் இருந்து வருகின்றன என்பது இந்த ஆய்வுக் கற்றலின்போது உறுதியாகியுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் பற்றிய சேவைகளின் உந்துதலானது, அத்தகைய சேவைகளை வழங்குகின்ற குறித்தசில அமைப்புக்களினதும் அரசாங்க நிறுவனங்களினதும் குறிப்பிட்டவொரு அக்கறையாகக் காணப்படுகின்றது. அதேபோன்று, பால்நிலைச் சமத்துவம் பற்றி அத்தகைய சேவை வழங்குநர்களுக்குள்ள ஒட்டுமொத்த மனப்பாங்குகள் பொதுவானவையாக அமைந்துள்ளன. இந்த ஆய்வுக் கற்றலானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் மீதான புலனுணர்தன்மை என்பன பற்றிய பண்பறி மதிப்பீடொன்றின் மீது (qualitative assessment) கவனக்குவிவைச் செலுத்தியுள்ளது.

இந்த ஆய்வுக் கற்றலில், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள 122 பேர் பங்குபற்றியிருந்தாலும், அவர்களுள் 106 பேர் மாத்திரமே சம்பந்தப்பட்ட சேவைகள் குறித்துத் தம்மிடமுள்ள

தகவல்களை வழங்குவதற்கும் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் விரும்பினர். எஞ்சிய 16 பேரும், அத்தகைய அனுபவங்களையும் தகவல்களையும் பகிர்ந்துகொள்வதற்கு விரும்பவில்லை. இது, அவர்கள் முன்னைய வன்முறை பற்றிக் கதைப்பதற்கு அசௌகரியப்பட்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றது. மேலதிக விபரங்களைப் பகிர்ந்துகொள்வது தங்களுக்கு தேவையற்ற மன அழுத்தங்களைக் கொண்டுவரக்கூடுமென அவர்கள் கருதியதுடன், அவர்கள், அக்குறிப்பிட்ட அசம்பாவிதத்தினால் மீளவும் மன அதிர்ச்சிக்குள்ளாகின்றமை குறித்தும் அச்சமடைந்தனர். எனவேதான் அவர்கள் இவ்வாய்வின் நோக்கத்திற்குரித்தான விபரமான தகவல்களை வழங்குவதற்கு மறுத்தனர். அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளிலிருந்து, குறிப்பாக பொலிஸ் துறையிலிருந்து, உரிய சேவைகளை அணுகியிருந்த பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் பகிர்ந்துகொண்ட தகவல்கள் முக்கியமானவையாக அமைந்தன. ஏனெனில், அவற்றுள் 87 சதவீதமான குடும்ப வன்முறைச்செயல் வழக்குகள், குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் கோப்பிடப்பட்டிருந்தன. இத்தகைய வன்முறை அசம்பாவிதங்களுள் 95 சதவீதமானவை பெண்களின் சொந்த வீடுகளிலேயே இடம்பெற்றுள்ளன. இது, பெண்களும் பெண்பிள்ளைகளும் தமது சொந்த வதிவிட எல்லையினுட்கூட காப்பு மற்றும் பாதுகாப்பு பற்றிய நம்பிக்கையை உணர முடியாத நிலையில் உள்ளமையைச் சுட்டிக்காட்டுகின்றது. இந்தக் கருத்தாய்வு முழுவதும் பதின்மூன்று பொதுச் சேவைகள் மதிப்பிடப்பட்டன. இதன்மூலம், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் ஆகக்குறைந்தது இத்தகைய உரிய சேவைகளுள் ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட சேவைகளை அணுகியிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டது.

வினாக்கொத்தை அடிப்படையாகக்கொண்டு பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினால் வழங்கப்பட்ட தரவுகள் மற்றும் விபரமான தகவல்களைப் பற்றி அவர்கள் மேலதிகமாகப் பகிர்ந்துகொண்ட விடயங்கள் என்பன, பெண்கள் உரிய சேவைகளை அணுகியபோது, அவர்கள் வித்தியாசமான முறையில் நடாத்தப்பட்டனர் என்பதற்கான உறுதியான ஆதாரமாக அமைகின்றன. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை வழங்குவதற்கானவை என அடையாளம் காணப்பட்ட நிறுவனங்கள் திருப்திகரமான மட்டத்தில் செயலாற்றியிருக்கவில்லை. மேலும், அத்தகைய வன்முறை பற்றிய குறித்தசில சேவைத் துறைகள், பால்நிலைச் சமத்துவம் தொடர்பிலான

மனப்பாங்குசார் மாற்றங்களையும் நடத்தைகளையும் தரமுயர்த்துவதற்கும் முன்னேற்றுவதற்குமான தேவைப்பாட்டைக் கொண்டுள்ளன.

நடுநிலையைப் பேணும் நோக்கங்களுக்காக, தரவு பற்றிய கண்டறிதல்களும் பகுப்பாய்வுகளும் அந்தந்த பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களுடன் பகிரப்பட்டன. நேர வரையறைகள் மற்றும் முன்கூட்டித் திட்டமிடுவதிலான சிரமங்களின் நிமித்தம் வரையறுக்கப்பட்ட பின்னூட்டங்களை மாத்திரம் வழங்கிய சுகாதாரத் துறையினர் தவிர, ஏனைய ஒவ்வொரு துறையினரிடமிருந்தும் பின்னூட்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒட்டுமொத்தக் கண்டறிதல்களும் பின்னூட்டங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் மீது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள ஆதரித்துவாதிடல் மற்றும் இடையீடுசெய்தற் பணிகளை முன்னேற்றும் பொருட்டு இங்கு முக்கியத்துவப்படுத்திக் குறிப்பிடப்படுகின்றன.

# உள்ளடக்கம்


சமர்ப்பணம் ........ v

சுருக்கம் ........ vii

உள்ளடக்கம் ........ x

சுருக்கக் குறியீடுகள் ........ xviii

**அத்தியாயம் 1: அறிமுகம்**

1.1 பின்னணி ........ 19

1.2 ஆய்வுக்குரிய பிரச்சினை ........ 24

1.3 பொருத்தப்பாடும் முக்கியத்துவமும் ........ 28

1.4 ஆய்வின் குறிக்கோள்கள் ........ 29

1.5 கருதுகோள் ........ 29

1.6 ஆய்வு வினாக்கள் ........ 30

1.7 முறைமையியல் ........ 30

1.7.1 ஆய்வின் வடிவமைப்பு ........ 32

1.8 ஆய்வின் வரையறைகள் ........ 32

**அத்தியாயம் 2: தனித்துறைசார் வெளியீடுகள் பற்றிய மீளாய்வு**

2.1 அறிமுகம் ........ 35

2.2 பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வரைவிலக்கணம் ........ 37

2.3 பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளின் வரைவிலக்கணம் ........ 39

2.3.1 சுகாதாரச் சேவைகள் ........ 40

2.3.2 மருத்துவச் சட்டச் சேவைகள் ........ 40

2.3.2.1 பாலியல் தாக்குதலிலிருந்து/வன்புணர்விலிருந்து உயிர்தப்பி வாழ்வோரைப் பரிசோதனை செய்வதற்கான மரபொழுங்கு ........ 43

2.3.3 பொலிஸ் சேவைகள் ........ 44

2.3.4 சட்ட உதவிச் சேவைகள் ........ 45

2.3.4.1 வன்புணர்வு பற்றி இலங்கைச் சட்டம் கூறுவதென்ன? ........ 47

2.3.4.2 பாலியல் தாக்குதலுக்கு எதிராக/பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள ........ 48

2.3.5 உளசமூக சேவைகள் ........ 49

2.4 மேலதிகச் சேவைகள் - மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நிவாரண சகோதரிகள், நன்னடத்தை அலுவலர்கள், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம், உளவளத்துணையாளர்கள் ....................50

**அத்தியாயம் 3: தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருள்கோடல்**

3.1 மாதிரிகள் பற்றிய மீள்பார்வை....................53

3.1.1 மாதிரிப் பிரிப்பீடு ....................56

3.2. சுகாதார சேவைகள் ....................59

3.3. பொலிஸ் சேவைகள் ....................63

3.4. பெண்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களினால்.·.சமூக சேவை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சேவைகள் ....................66

3.5. சட்டச் சேவைகள் ....................67

3.6. மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் ....................69

3.7. நன்னடத்தை அலுவலர்கள் ....................70

3.8. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்/பிரதேச/ மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் ....................72

3.9. சமூக சேவை அலுவலர்கள் ....................73

3.10. மத்தியஸ்த சபை ....................74

3.11. காதி நீதிமன்றம் ....................76

3.12. பாதுகாப்பு இல்லம் பற்றிய சேவையானது....................78

3.13. வேறு தகவல்கள் ∴ கண்டறிதல்கள் ....................78

**அத்தியாயம் 4: நேர்காணல் வினாக்கொத்துக்களுக்கான பதிலிறுத்தல்களுக்குப் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களின் பின்னூட்டம்**....................81

**அத்தியாயம் 5: முடிவுரையும் பரிந்துரைகளும்**

5.1 முடிவுரை ....................91

5.2 பரிந்துரைகள் ....................98

மேற்கோள் குறிப்புக்கள் ....................103

# அட்டவணைகள் பற்றிய நிரல்


அட்டவணை 1.1 வயதை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு........................56

அட்டவணை 1.2 அசம்பாவிதத்தை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு.......57

அட்டவணை 1.3 அசம்பாவிதம் நிகழ்ந்த இடத்தை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு..........................................................................58

அட்டவணை 1.4 பெறப்பட்ட சேவைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு .......................................57

அட்டவணை 1.5 அசம்பாவிதம் நிகழ்ந்த ஆண்டை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு..........................................................................58

அட்டவணை 1.6 பெறப்பட்ட சேவைகளின் வகைகளை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு..........................................................................59

அட்டவணை 2.1 சுகாதார சேவை வழங்குநர்களுடனான ஒட்டுமொத்தத் திருப்திகரத்தன்மை.....................................................................60

அட்டவணை 2.1.1 சுகாதாரச் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்............................................60

அட்டவணை 2.1.2 சுகாதாரச் சேவைகள் மீதான விழிப்புணர்வு பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்........................................................................62

அட்டவணை 3.1 பொலிஸ் சேவைகள்...................................................................63

அட்டவணை 3.1.1 பொலிஸ் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்............................................64

அட்டவணை 4.1 பெண்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களினால் / சமூக சேவை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சேவைகள்.............................................................66

அட்டவணை 4.1.1 அரசசார்பற்ற நிறுவனங்களினது / சமூக சேவை நிறுவனங்களினது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்........................................................................66

அட்டவணை 5.1 சட்டச் சேவைகள்.......................................................................67

அட்டவணை 5.1.1 சட்டச் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்............................................68
அட்டவணை 6.1 மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்.......................................................69
அட்டவணை 6.1.1 மகளிர் அபிவிருத்தி அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்......70
அட்டவணை 7.1 நன்னடத்தை அலுவலர்கள்.....................................................................71
அட்டவணை 7.1.1 நன்னடத்தை அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்......71
அட்டவணை 8.1 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் / பிரதேச / மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள் .........................................72
அட்டவணை 8.1.1 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்......72
அட்டவணை 9.1 சமூக சேவை அலுவலர்கள்...................................................................73
அட்டவணை 9.1.1 சமூக சேவை அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்......74
அட்டவணை 10.1 மத்தியஸ்த சபை .......................................................................................75
அட்டவணை 10.1.1 மத்தியஸ்த சபையினது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்......75
அட்டவணை 11.1 காதி நீதிமன்றம்..........................................................................................76
அட்டவணை 11.1.1 காதி நீதிமன்றத்தின் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்.............................................77
அட்டவணை 13.1 பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் விருப்பங்கள் ...................................................78

# சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| ADS | - | Additional District Secretariat |
| CBO | - | Community Based Organisation |
| CEDAW | - | Convention on the Elimination of All Forms of Discrimination Against Women |
| CRPO | - | Child Rights Promotion Officer |
| DEVAW | - | Declaration on the Elimination of Violence Against Women |
| DS | - | District Secretariat |
| ESDF | - | Eastern Social Development Foundation |
| GBV | - | Gender Based Violence |
| HRC | - | Human Rights Commission |
| ICCPR | - | International Covenant on Civil and Political Rights |
| ICESCR | - | International Covenant on Economic, Social and Cultural Rights |
| INGO | - | International Non-Governmental Organisation |
| JMO | - | Judicial Medical Officer |
| LNGO | - | Local Non-Governmental Organisation |
| MHU | - | Mental Health Unit |
| MOH | - | Ministry of Health |
| MPL | - | Muslim Personal Law |
| NGO | - | Non-Governmental Organisation |
| PO | - | Probation Officer |
| SSO | - | Social Service Officer |
| UNSCR | - | United Nation Security Council Resolution |
| WHH | - | Women Headed Household |

— அத்தியாயம் 1 —

# அறிமுகம்

## 1.1 பின்னணி

ஒப்பீட்டளவில் இலங்கை வினைத்திறனான நலன்புரி முறைமைகளைக் கொண்டுள்ளது. குறிப்பாக, பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கெனச் சேவையாற்றுகின்ற சுகாதாரரக் கவனிப்பு, சட்ட உதவி மற்றும் நிர்வாக முறைமைகளைக் குறிப்பிடலாம். பால்நிலைச் சமத்துவமும் பெண்கள் மீதான பாரபட்சமின்மையும் இலங்கையில் அரச பொறிமுறைகள் மற்றும் செயற்பாடுகளின் வழிகாட்டுநெறிகளாக அமைந்துள்ளன. இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 12(2)ஆம் உறுப்புரையானது, பால் மற்றும் ஏனைய குறித்துரைக்கப்பட்ட ஏதுக்கள் மீதான பாரபட்சமின்மை பற்றிய நெறிகளைத் தருகின்றது. 12(4)ஆம் உறுப்புரையானது, பெண்களின் முன்னேற்றத்துக்காக அரசினால் செய்யப்படுகின்ற விசேட ஏற்பாடுகளை மேலும் உறுதிப்படுத்துகின்றது.[1] பால் என்ற ஏதுவின் மீதான பாரபட்சத்தை மனித உரிமை மீறலொன்றாகத் தெளிவுற வேறுபிரித்துக்காட்டுகின்ற, பெண்களுக்கெதிரான சகல வடிவங்களிலுமான பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான சமவாயம் (CEDAW), குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து (ICCPR) அத்துடன் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேசக் கட்டுறுத்து (ICESCR) போன்ற சர்வதேச சமவாயங்களையும் பிரகடனங்களையும்கூட இலங்கை ஒப்புறுதிப்படுத்தியுள்ளது. பெண்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிப்பது பற்றிய வியன்னா பிரகடனம் (DEVAW), பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கெதிராகப் போராடுவது பற்றிய, நாட்டின் கவனக்குவிவுக்குரிய கடப்பாட்டுநிலையைத் தோற்றுவிக்கின்றது. இப்பிரகடனம், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தீர்மானம் (UNSCR) 1325 மற்றும் UNSCR 1820 என்பவற்றுடன் சேர்ந்து, பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதுடன், எவ்வடிவங்களிலுமான பாலியல் வன்முறை தொடர்பில் பெண்கள் மீதான, யுத்தத்தின் தாக்கத்தையும் விளித்துரைக்கின்றது.

1 Article 12 - Rights to Equality; Article 12(2) - All persons are equal before the law and are entitled to the equal protection of the law; Article 12(2) - No citizen shall be discriminated against on the grounds of race, religion, language, caste, sex, political opinion, place of birth or any one such grounds; Article 12(4) - Nothing in this article shall prevent special provision being made by law, subordinate legislation or executive action for the advancement of women, children or disabled persons.

இலங்கை பெண்கள் பட்டயமானது, ஏழு முக்கிய விடயப்பரப்புக்களின் மீதான கவனக்குவிவைச் செலுத்தி 1993 மார்ச் மாதம் அரசினால் வரையப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள், குடும்பத்தினுள் காணப்படுகின்ற உரிமைகள், கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமைகள், பொருளாதாரச் செயற்பாட்டுக்கும் நலன்களுக்குமான உரிமைகள், சுகாதாரக் கவனிப்புக்கும் போஷாக்கிற்குமான உரிமை, சமூக ரீதியிலான பாரபட்சத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை என்பனவே அவ்வேழு முக்கிய விடயப்பரப்புக்களாகும். இக்கடப்பாட்டுநிலையை அடிப்படையாகக்கொண்டு, இலங்கை அரசாங்கம் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு பதிலிறுப்பதற்கென ஆணைக்குழுக்களை அறிமுகப்படுத்தியதுடன் அலுவலர்களையும் நியமித்துள்ளது. தேசிய மகளிர் குழு, பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான கருமபீடங்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய வைத்தியசாலைக் கருமபீடங்கள் போன்றவற்றை அவற்றுக்கு உதாரணங்களாகக் கூறலாம்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறை ஒரு குற்றமாகும் என்பதுடன் அது தண்டிக்கப்படத்தகு தவறொன்றுமாகும். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய பிரச்சினைகள் பெண்கள், பெண்பிள்ளைகள், ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் ஆகியோரைப் பாதிக்கின்றன. படிநிலைமுறையிலான அதிகாரக் கட்டமைப்புக்களும் பால்நிலைசார் மாறா உருப்படிவங்களும் (Hierarchical power structures and gender stereotypes) பெண்கள், பெண்பிள்ளைகள், ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் ஆகியோருக்கெதிரான வன்முறைக்கு வழிவகுக்கின்ற காரணிகளில் பெரும்பாலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. இலங்கைக் கலாசாரத்தில் அத்தகைய மாறா உருப்படிவங்கள்சார் பால்நிலை நடைமுறைகள், குறைந்த அதிகாரத்துடனுள்ள ஏனையவர்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அவர்கள் மீதான ஆதிக்கத்தைச் செலுத்துவதற்கும் அனுமதிக்கின்ற வகையிலான ஆணாதிக்கக் கருத்தியல் ஒன்றிலேயே வேரூன்றியுள்ளன. பல்வேறு காரணங்களினால் பால்நிலை அடிப்படையிலான வன்முறை அசம்பாவிதங்கள் பெரும்பாலும் அறிக்கையிடப்படுவதில்லை. சமூகரீதியில் ஏற்படுகின்ற களங்கம் பற்றிய அச்சம், உயிர்தப்பிவாழ்வோர் மற்றும் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் என இருதரப்பினர் மீதும் காட்டப்படும் பாரபட்சம், இத்தகைய அசம்பாவிதங்கள் அறிக்கையிடப்படவேண்டியதன் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வின்மை, உயிர்தப்பிவாழ்பவரின் உரிமை மீறல்கள் பற்றியும் அவருக்கெதிராகப் புரியப்பட்ட வன்முறை பற்றியும் போதியளவில் அவர் அறிந்திராமை மற்றும் சட்டம் பற்றிய விழிப்புணர்வின்மை என்பன அவற்றுள் சில காரணங்களாகும். பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்கான செயற்பாடற்ற பதிலிறுப்புக்களில் அதிகாரப் படிநிலைமுறைகள் (Power hierarchies) பாரிய வகிபாகத்தை வகித்துள்ளன. உதாரணமாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் குற்றங்கள், குறிப்பாக வன்புணர்வு மற்றும் பாலியல் தாக்குதல் அசம்பாவிதங்கள், பால்நிலைச் சமத்துவ

நடைமுறைகள் குறித்து, சேவை வழங்குநர்களுக்குள்ள ஆணாதிக்க மனப்பாங்குகள் காரணமாகப் பெரும்பாலும் பொருத்தமற்ற முறையிலேயே விளித்துரைக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, கிடைக்கக்கூடியனவாகவுள்ள சேவை வசதிகளின் பற்றாக்குறை மற்றும் சேவை வழங்குகைகள் பற்றிய விழிப்புணர்வின்மை என்பன ஏனைய முக்கிய காரணிகளாகும்.

வன்முறைக் குற்றங்களுக்குக் குற்றவழக்குத் தொடுப்பதற்குரிய இயைபான சட்டங்களையும் சட்டக் கட்டமைப்புக்களையும் இலங்கை கொண்டிருந்தும்கூட, சாதாரண ஆளொருவர் சட்ட நடவடிக்கையைத் தொடர்வதற்கு விரும்புவதில்லை. உயிர்தப்பிவாழ்வோர், நீதி முறைமையில் நம்பிக்கையற்றிருக்கின்றனர். அவர்கள், பால்நிலை அடிப்படையிலான வன்முறை அசம்பாவிதங்களுக்குக் குற்றவழக்குத்தொடுப்பது தொடர்பிலும் ஒட்டுமொத்த விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் இப்பிரச்சினைகள் தொடர்பில் சமூகரீதியில் ஏற்படுகின்ற களங்கம் பற்றிய அச்சத்தையும் கொண்டுள்ளனர். ‘‘வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்முறை போன்ற பால்நிலை அடிப்படையிலான குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரின் புள்ளிவிபரங்கள் கிடைக்கக்கூடியனவாக உள்ளபோதிலும், கிடைக்கக்கூடியனவாக உள்ள அவ்வறிக்கைகள் மறுப்புக்கிடமின்றி யதார்த்த நிலையைப் பிரதிபலிக்கவில்லை. பெரும்பாலும் அசம்பாவிதங்கள் முதலிடத்திலேயே அறிக்கையிடப்படுவதில்லை. அத்துடன், பலிக்குட்படுத்தப்பட்டோர் (*victims)*, பரிகாரங்களுக்கும் நிவர்த்திப்புக்களுக்குமென தோதான அரச முகவர்களை நாடிச்செல்கின்றபோதிலும் (பொலிஸ், நீதிமன்றம் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் உட்பட) சம்பந்தப்பட்ட முகவரமைப்புக்கள் குறித்த விடயம் பற்றிய புள்ளிவிபரங்களை அல்லது விரிவான அறிக்கைகளைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை அவ்விடத்தே கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. குறித்த விடயப்பரப்புக்கள் தொடர்பில் கருத்தாய்வுகளை நடாத்திய சுயாதீன ஆய்வாளர்கள் பொலிஸ் மற்றும் நீதிமன்றம் என்பவற்றின் உத்தியோகபூர்வ பதிவேடுகளிலிருந்து பரந்தளவில் வேறுபடுகின்ற தரவுகளையே பெரும்பாலும் முன்வைத்துள்ளனர்.[2] உயிர்தப்பிவாழ்வோர்கூட, பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் கோப்பிடப்படுவதற்கென எத்தோதான சட்டங்கள் காணப்படுகின்றனவோ அத்தோதான சட்டங்கள் பற்றிப் பெரும்பாலும் அறியாதவர்களாகவே உள்ளனர். அதாவது, குடும்ப வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம், குற்றவியல் சட்டங்கள் - குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை அல்லது 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்கச் சட்டம் போன்றன.[3]

2 Jayasundere, Ramani (August 2009), Understanding Gendered Violence Against Women in Sri Lanka, A Background Paper, *Women Defining Peace*, pg. 2.

3 Parliament of the Democratic and Socialist Republic of Sri Lanka (July 19, 2002), Penal Code Amendment Act No. 12 of 2002, a *Supplement to Part II of the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka*, pg. 1.

பாலியல் தாக்குதல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் சமூகத்தில் ஊடுருவிப்பரவுகின்ற பிரச்சினைகளாகும் என்பதுடன், அவை பாரதூரமான உடல்சார், உளஞ்சார், உணர்வுசார் மற்றும் சமூகஞ்சார் விளைவுகளையும் கொண்டுள்ளன. பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளையும் பாலியல் தாக்குதல் அசம்பாவிதங்களையும் அறிக்கையிடுதலானது, சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்கள், நீதித்துறை மற்றும் சமூக சேவை வழங்குநர்கள் ஆகியோரை உள்ளடக்குகின்ற ஒரு பல்துறைநெறிசார் பதிலிறுத்தலைத் (multi-disciplinary response) தேவைப்படுத்துகின்றது.

ஆகவே இவ்வாய்வு, இத்தகைய இயைபான துறைகளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைவழங்குநர்களிடமிருந்தான சேவைகளை மதிப்பிடுபவர்களின் திருப்தி மற்றும் இருந்துவருகின்ற இடைவெளிகள் என்பவற்றின் ஒட்டுமொத்த அளவுகளையும் விளித்துரைப்பதைக் குறிக்கோளாகக் கொள்கின்றது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் சேவைகளை ஒரே இடத்தில் அணுகிப்பெறுவதற்குப் பெரும்பாலும் இயலாதவர்களாக உள்ளனர். மாறாக, அவர்கள் பல சேவை வழங்குநர்களிடமிருந்து பல்வேறு வடிவங்களிலான உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக, ஆரம்பத்தில் பொலிஸ் நிலையத்தில் கொடுக்கப்பட்ட முறைப்பாடுகள், வைத்தியசாலையிலுள்ள மருத்துவச்சட்ட அலகுக்கான, குறிப்பாக வைத்தியசாலையிலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய கருமபீடத்தின் சேவைகளுக்கான விஜயமொன்றின் மூலமும், அதனைத்தொடர்ந்து பாதுகாப்பு இல்ல வசதிகளை (safe housing facilities) அணுகுவதற்கான தேவையின் மூலமும் பின்தொடரப்படுகின்றன. மருத்துவச்சட்ட அலுவலர்கள் (Medico-legal Officers) சிறியளவிலான சில சம்பவங்களைச் சமாளிக்கின்றனர். எனினும், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நிரந்தரமானதொரு சட்டமருத்துவ அலுவலர் (Judicial Medical Officer) இல்லாத காரணத்தினால், பாலியல் தாக்குதல் சம்பவங்கள் பற்றிய பரிசோதனைகள் வேறு மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. உயிர்தப்பிவாழ்வோருக்கான இவ்வாறான சவால்கள், மொழி ரீதியிலான தடைகள், இனம், கட்டமைப்புசார் படிநிலைமுறைகள், ஆணாதிக்க மனப்பாங்கு, நேரக் கட்டுப்பாடுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என்பவற்றினால் சூழப்பட்டுள்ளன.

அண்மைய ஆண்டுகளில் கிழக்கு மாகாணத்தில் பாலியல் தாக்குதல் குற்றத்தின் அதிகரிப்பு சமூக அபிவிருத்திக்கும் சமாதானத்திற்கும் தடையாக இருந்துள்ளதாக சமூகத்தவர்கள் கூறியுள்ளனர். 2009 இல் வடக்குக் கிழக்கில் யுத்தம் முடிவுற்றதிலிருந்து சுதந்திரம், அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு பற்றிய புதியதோர் உணர்வை மக்கள் பொதுவாகவே அனுபவித்துள்ளனர். எவ்வாறாயினும் மக்கள், சிவில் நிருவாக நடவடிக்கைகளை அணுகுவதற்கும், பாலியல் வன்முறைக் குற்றங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் நம்பிக்கையற்றவர்களாகவும் அத்துடன் பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகள் பற்றிய

விழிப்புணர்வற்றவர்களாகவும் உள்ளமைக்கான சான்றாக, சமூக மற்றும் மனித அபிவிருத்தி தொடர்பிலான வீழ்ச்சி அமைந்துள்ளது. ''மேலும், மொழித் தடைகள் போன்ற நாளாந்த நிருவாக ரீதியிலான விரக்திகளுங்கூட குற்றவியல் நீதி முறைமையில் காணப்படுகின்ற முக்கியமானதொரு குறைபாடாக வழக்குரைஞர்களினால் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை மனித உரிமைகளின் துஷ்பிரயோகத்துக்கான வகைகூறலிலான முயற்சிகளை விரக்திக்குள்ளாக்குகின்றன''.[4] இலங்கையர்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மோதல் மற்றும் யுத்தம் என்பவற்றினால் ஏற்பட்ட இன்னல்களுடனும், அவற்றைச் சகித்துக்கொண்டும் வாழ்ந்துள்ளனர். சுகாதாரக் கவனிப்பு வசதிகள் பாதிக்கப்பட்டன, ஊரடங்குச் சட்டங்கள் நடமாட்டத்தைக் குறைத்தன, அத்துடன் அச்சம் மக்களை விழுங்கியது. ஆகவே, பாலியல் துஷ்பிரயோகக் குற்றங்களும் குடும்ப வன்முறை போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளும் அரிதாகவே அறிக்கையிடப்பட்டன. எனினும், யுத்தம் முடிவுற்றதிலிருந்து மக்கள், குறிப்பாக இளைஞர்கள், போதைப்பொருட்கள் மற்றும் மதுபானம் என்பவற்றை அணுகுகின்ற போக்கும், ஆபாசப்படங்களை, குறிப்பாக இணையச் சேவையகங்களில், அணுகிப்பெறுகின்ற போக்கும் அதிகரித்துள்ளதாக எமது ஆய்வில் பங்குபற்றிய பங்குபற்றுனர்கள் குறிப்பிட்டனர். இத்தகைய செயல்விளைவுகள் பாலியல் தாக்குதல் குற்றங்களின் அதிகரிப்புக்கு, குறிப்பாக கிழக்கு மாகாணத்தில், தாக்கம் செலுத்துகின்ற காரணிகளாக அமைந்தன என்று அவர்கள் உணர்ந்தனர்.

குடும்ப உறுப்பினர்களுக்கிடையேயான பிணக்குகள், பால்நிலைசார் மாறா உருப்படிவங்கள் மற்றும் பெண்கள் மீதான ஆணாதிக்கம் என்பன காரணமாகவும், குடும்ப வன்முறை அசம்பாவிதங்கள் எழுந்துள்ளன. இன்று அதிகளவிலான ஆண்களும் பெண்களும் வெளிநாட்டுத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இத்தகைய நகர்வும் வீட்டிலில்லாத நிலையும், பொதுவாகக் குடும்ப வாழ்வின் மீது பாரிய தாக்கமொன்றைச் செலுத்தியுள்ளது. எப்போதாவது விவாகரத்துக்கு வழிவகுக்கக்கூடிய, திருமணத்துக்குப் புறம்பான தொடர்புகளை (extra-marital affairs) ஆண்கள், பெண்கள் என இரு தரப்பினரும் கொண்டுள்ளமையினால் குடும்பங்கள் பிளவுற்றுள்ளன. சிறுவர்கள், வீட்டில் குறைந்தளவிலான காப்பையும் பாதுகாப்பையும் கொண்டுள்ளமையானது குறிப்பிட்ட சிறுவர் உரிமை மீறல்களுக்கும் துஷ்பிரயோகத்துக்கும் வழிவகுக்கின்றது. இத்தகைய எல்லாக் காரணிகளும் குடும்பத்திலும் சமூக மட்டத்திலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளின் அதிகரிப்புக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆகவே, இப்பிரச்சினைகளுள் சிலவற்றை நிவர்த்திக்க, பயனுள்ளதும் வினைத்திறனானதுமான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை பதிலிறுப்புக்களின் வழங்குகை அவசியமாகவுள்ளது.

4 Challenges to Accountability for Human Rights Violations in Sri Lanka - A Discussion Paper (March 2017), International Commission of Jurists, pg. 1.

## 1.2 ஆய்வுக்குரிய பிரச்சினை

பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது, பாரதூரமான உடல்சார், உணர்வுசார் மற்றும் சமூகஞ்சார் விளைவுகளைக் கொண்டுள்ள ஒரு குற்றச்செயலாகவும் உரிமை மீறல் பிரச்சினையாகவும் உள்ளது. அறிக்கையிடப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள், சுகாதாரக் கவனிப்பு வழங்குநர்கள், பொலிஸார் மற்றும் நீதித்துறை உட்பட பல்வேறு துறையினரிடமிருந்து பல்துறைநெறிசார் பதிலிறுத்தலைத் தேவைப்படுத்துகின்றன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள பெண்களும் பெண்பிள்ளைகளும் இடம்பெயர்வு, புலம்பெயர்வு மற்றும் பாரம்பரியமாக குடும்பத்துக்கென உழைக்கும் ஆணை இழந்தமை என்பன காரணமாக யுத்தத்தின் பின்விளைவாகவும், குடும்ப மோதல்கள் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் நிமித்தமும் அதிகரித்தளவில் இலகுவில் பாதிப்புறும் தன்மையினால் பீடிக்கப்படுகின்றனர். காப்பு மற்றும் பாதுகாப்பு உணர்வை மீட்டளிப்பதற்கென பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளானவை, அவசியமான உதவியை வழங்குவதற்கும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்கெதிராக ஆக்கத்திறனாகவும் தகுதிவாய்ந்த முறையிலும் குற்றவழக்குத் தொடுப்பதற்கும் அதிமுக்கியமாக உள்ளன. பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்கு பதிலிறுக்கின்ற மருத்துவ மற்றும் சட்டத் துறைசார் தொழில்வாண்மையாளர்களுக்காக சர்வதேசளவிலான மிகச்சிறந்த நடைமுறைகளை வழங்குகின்ற வளப்பொருட்களை மதிப்பீடு செய்வதில் பாரிய இடைவெளி ஒன்று தொடர்ந்தும் இருந்துவருகின்றது.

வடகிழக்கில்[5] மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களிலும் இலங்கையில் இடம்பெற்ற ஆயுத மோதலின்போதும் அதன் பின்னரும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன என்றும், எவ்வகையிலுமான அனர்த்தத்தைத் தொடர்ந்து இது உலகளாவிய பிரச்சினை ஒன்றாக உள்ளதென்றும் பதிலிறுப்போர் உறுதிப்படுத்தியதுடன், மருத்துவச்சட்டத் தொழில்வாண்மையாளர்கள் இதனை ஆமோதித்தும் உள்ளனர்.[6]

அறிக்கையிடப்படாதுபோன பெரும்பாலான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் நீதிமுறைமையிலும், பொதுவாக சட்டவாட்சியிலுமான நம்பிக்கையின்மை காரணமாக இருந்தன.[7] மேலும், மொழியும் பால்நிலைசார் கூருணர்வின்மையும் அறிக்கையிடப்படுவதற்கான பாரிய தடைகளாக இருக்கின்றன. இதன் விளைவாக, குறைந்த எண்ணிக்கையிலான சம்பவங்களுக்கு எதிராகவே குற்றவழக்குத் தொடுக்கப்படுகின்றது.

---

5 Living with Insecurity: Marginalisation and Sexual Violence Against Women in North and East (2013), *Sri Lanka Minority Rights Group International,* pp. 2, 4, 7.

6 Violence and Disasters (2005), Department of Injuries and Violence Prevention, *World Health Organization,* Geneva, Switzerland, pg. 1.

7 Edirisinghe, Anuruddhi, and L.B.L. de Alwis (January-April 2011), Medico-Legal Journal of Sri Lanka, *College of Forensic Pathologists of Sri Lanka***,** Vol. 1, No. 1.

பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமையினுள் மருத்துவச்சட்டச் சேவையானது குற்றவியல் தவறுகளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு அதிகளவில் பயனுள்ள வழிவகையாகக் காணப்படுகின்றது.[8] சட்டமருத்துவ அலுவலர்களையும் குற்றவழக்குத்தொடுநர்களையும் கொண்டுள்ள பல்துறைநெறிசார் குழுவினர் வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவுவதற்கும், சட்ட நீதிமன்றம் ஒன்றில் போதிய சான்றையும் அபிப்பிராய அறிக்கைகளையும் வழங்கும் பொருட்டு ஒருமித்துச் செயற்படுகின்றனர். எவ்வாறாயினும், வன்புணர்வையும் பாலியல் துஷ்பிரயோகத்தையும் நிரூபிப்பதற்கு அவசியமாகவும் கிடைக்கக்கூடியனவாகவும் உள்ள மருத்துவச்சட்டச் சேவைகள் பற்றியும், தேவைப்பட்ட விஞ்ஞான ரீதியிலான சான்று பற்றியும் உயிர்தப்பிவாழ்வோர் வலுவாக அறிந்திருப்பதில்லை.

பொலிஸாரின் சேவை வழங்குகைகள் ஆரம்பத் தொடர்புப் புள்ளியாகவும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களில் குற்றவழக்குத் தொடுப்பதுடன் சம்பந்தப்பட்டவையாகவும் இருப்பதனால், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் பாதுகாப்பதற்கு அவை அதிமுக்கியமானவையாக உள்ளன. ஆதலால், தோதான சட்டத்தின்கீழ் இவ்வழக்குகளைக் கோப்பிடுவதில் பொலிஸ் அலுவலர்கள் பாரிய வகிபாகத்தை வகித்தல் வேண்டும். அத்துடன், அத்தகைய வழக்குகளுக்குப் பதிலிறுப்பதற்குள்ள சட்டங்கள் பற்றிய தெளிவான புரிந்துணர்வையும் அவர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்காகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கு சட்ட உதவி இன்னுமோர் அத்தியாவசியமான சேவையாக உள்ளது. வன்புணர்வும் பாலியல் தாக்குதலும் உட்பட, இச்சம்பவங்களுள் பெரும்பாலானவை சான்றில்லாமை மற்றும் குற்றவழக்குத் தொடுக்கும் குழுவினரிடமிருந்தான பலவீனமான உதவி என்பன காரணமாக, சட்ட நீதிமன்றமொன்றில் தள்ளுபடி செய்யப்பட்டன. பால்நிலை அடிப்படையிலான வன்முறை வழக்கொன்றைக் கோப்பிடும்போது பின்பற்றுவதற்கு அவசியமான முதன்மை நடவடிக்கைகள் பற்றி உயிர்தப்பிவாழ்வோர் அறிந்திருக்கவில்லை என்பதை முழுமையாக அறிந்துகொண்டு, தவறிழைப்பவர்கள் வழக்குகளில் வெற்றியீட்டுவதற்கெனச் சட்டத்தரணிகளுக்குப் பெரும்பாலும் இலஞ்சங்களைக் கொடுத்தனர். உதாரணமாக, ஒரு வழக்கை நிரூபிப்பதற்கு மருத்துவச் சான்று தேவைப்படுகின்றமை பற்றி குடும்ப வன்முறை மற்றும்/அல்லது வன்புணர்விலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அறிந்திருக்கவில்லை. அவர்கள் பிந்திய திகதியொன்றில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்பதுடன், அவர்களுக்கு 72 மணித்தியாலக் காலப்பகுதியினுள்ளான சட்டமருத்துவச் சான்று பற்றி அறிவுரை வழங்கப்படவில்லை, அத்துடன் அதனை அவர்கள் பெற்றுக்கொள்ளவுமில்லை. குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பால்நிலை

8 The Law on Sexual Offence: A Discussion Paper (1998), *Department of Justice, Equality and Law Reform, Government of Ireland*, pg. 39.

அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர், ஏதேனும் பாலியல் வன்முறை பற்றிய சம்பவத்தை சட்ட நீதிமன்றமொன்றில் நேரடியாக அறிக்கையிடுவதன் மூலம் பாதுகாப்புக் கட்டளையொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். பொலிஸில் அறிக்கையொன்றைத் தொடக்கத்தில் கோப்பிடுவது தேவையாக இருக்காது. எவ்வாறாயினும், உயிர்தப்பிவாழ்வோருள் அநேகமானோர் இந்நிகழ்வு பற்றி அறியாதவர்களாகவே உள்ளனர். மேலும், சட்ட உதவி ஆணைக்குழு அத்தகைய வழக்குகளுக்காகக் கட்டணமின்றி உதவுகின்றதென்பதையும் குறிப்பாக, அரசசார்பற்ற நிறுவனங்களும் இலவசச் சட்ட சேவைகளை வழங்குகின்றன என்பதையும் அநேகமானோர் அறியாதவர்களாகவே உள்ளனர்.

முஸ்லிம் சமூகத்திலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் பொதுவாக காதி நீதிமன்றங்களில் கோப்பிடப்படுகின்றன. சொத்துக்களைப் பகிர்தல் உட்பட, திருமணம் மற்றும் விவாகரத்துப் பிரச்சினைகள் முஸ்லிம் தனியார் சட்டத்தின்கீழ் அடங்குகின்றன. எவ்வாறாயினும், குடும்ப வன்முறை, வன்புணர்வு மற்றும் பாலியல் தாக்குதல் போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் குற்றச் செயல்களாகவும் உரிமை மீறல்களாகவும் உள்ளன. அத்தகைய சம்பவங்கள் பொலிஸாரினாலும் நீதிமன்றங்களினாலும் கையாளப்படுதல் வேண்டும். அதனால் பொலிஸார், சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் வேறு இயைபான அதிகாரிகளிடமிருந்து பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை அணுகுவதன் மூலம் முஸ்லிம் சமூகத்திலுள்ள தனிநபர்கள் நன்மை பெறுவர்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களையும், நன்னடத்தை அலுவலர்களையும், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களையும், உளவளத்துணையாளர்களையும், சமூகசேவை அலுவலர்களையும் நியமித்துள்ளது. எவ்வாறாயினும், இவ்வலுவலர்களின் வகிபாகங்களும் பொறுப்புக்களும் பற்றிச் சாதாரணமான ஆளொருவர் அறிந்திருப்பதில்லை. அரசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களும் முறைமைப்படுத்தப்பட்ட வழிமுறையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை வழங்கியுள்ளன. ஆனால், பால்நிலைச் சமத்துவம் தொடர்பில் அலுவலர்களுக்குள்ள ஆற்றல், திறன்கள் மற்றும் மனப்பாங்குகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளைப் பயனுற விளித்துரைப்பதற்கென மேலும் முன்னேற்றம் காணப்படவேண்டிய தேவை உள்ளது.

மத்தியஸ்த சபையானது, இரு தரப்பினர்கள் சார்பிலும் மத்தியஸ்தம் செய்வதற்கும் பேச்சுவார்த்தை மூலம் இணக்கங்களைச் செய்வதற்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் உரிமை மீறல்களாக உள்ளன. அத்துடன் அவை பால்நிலைச் சமத்துவத்தின் மீது விசேட கவனக்குவிவுடன் உரிமைகள் சார்ந்த அணுகுமுறையில் கையாளப்படுதலும் வேண்டும்.

மத்தியஸ்த சபையானது, பெரும்பாலும் தனது ஆதிக்கம் செலுத்தும் அதிகாரத்தைப் பாகுபாடற்ற வகையில் பயன்படுத்துகின்ற வயதுமுதிர்ந்த ஆண் உறுப்பினர்களையே தொடர்ந்தும் கொண்டுள்ளது. இதன்விளைவாகப் புலனாய்வின்போது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு பெரும்பாலும் நியாயமான தீர்ப்புக் கிடைப்பதில்லை.

தாபிக்கப்பட்டுள்ள மன்றங்களினால் பெரும்பாலான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளும் பதிலிறுத்தல்களும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் செயலணி என அறியப்படும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல அரசசார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்கிய வலையமைப்பொன்று மாவட்ட மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் பணியாற்றுகின்றது. சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOs), சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் (INGOs), உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் (LNGOs) மற்றும் பொலிஸ், சுகாதாரத்துறை, உளச்சுகாதாரக் கூறு (MHU) போன்ற அரசாங்க நிறுவனங்கள், மாவட்ட செயலகம் (DS), பிரதேச செயலகம், பாடசாலைகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு (HRC) என சகலரும் இம்மன்றங்களில் அக்கறைகொண்டுள்ளோராக உள்ளனர். அரசாங்க அதிபர், ஆகக்குறைந்தது மூன்று மாதங்களுக்கொரு தடவையேனும் மாவட்ட மட்டச் செயலணிக்குத் தலைமை வகிக்கின்றார். அத்துடன் பிரதேச மட்டச் செயலணி, மாதாந்த அடிப்படையில் பிரதேச செயலாளரினாலும், மேலதிக மாவட்டச் செயலாளரினாலும் வசதிப்படுத்தப்படுகின்றது. மகளிர் அபிவிருத்தி அலுவலர்களும், நிவாரண சகோதரிகளும், சமூக சேவை அலுவலர்களும், சமுர்த்தி அலுவலர்களும், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களும் மற்றும் நன்னடத்தை அலுவலர்களும் தீர்வுகளை நாடுவதற்கென பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களை இம்மன்றங்களுக்குத் தொடக்கத்தில் ஆற்றுப்படுத்தி, உரிய அக்கறைகொண்டுள்ளோரிடமிருந்து உதவியைப் பரிந்து கேட்கின்றனர்.

மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நிவாரண சகோதரிகள், சமூக சேவை அலுவலர்கள், உள சமூக மற்றும் உளவளத்துணை அலுவலர்கள் போன்ற அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களும் பிரதேச மட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்குப் பதிலிறுக்கின்ற சேவைகளை வழங்குகின்றனர். எவ்வாறாயினும் அநேகமான பெண்கள், குறித்த அலுவலர்களின் தொழில்வாண்மைசார் நற்பெயர் பற்றி பரிச்சயமற்றவர்களாக இருந்தபடியினால், தமது பிரச்சினைகளை இவ்வலுவலர்களுக்கு அறிக்கையிடுவதில் தமது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தினர். மேலும், இவ்வலுவலர்கள் வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் பகிர்வதில் சமூகத்துடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தவறினர். இதன்காரணமாக, சமூகத்தினருக்கும் இவ்வலுவலர்களுக்குமிடையே பாரிய இடைவெளிகள் உருவாகின.

ஆகவே, மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான சேவை வழங்கல் முறைமைகளை அணுகுவதிலுள்ள இடைவெளிகளையும், அத்தகைய சேவைகளைத் தரமுயர்த்துவதற்கு மிக வினைத்திறனானதும் பயனுள்ளதுமான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய ஏற்பாடுகளையும், இனங்காண்பதற்கென இவ்வாய்வுக் கற்றல் நடாத்தப்பட்டுள்ளது.

## 1.3 பொருத்தப்பாடும் முக்கியத்துவமும்

இந்த ஆய்வு, பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்காக, புதிய சட்டங்களையும் மரபொழுங்குகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் கொள்கை மறுசீரமைப்புக்களை முன்னெடுத்துச் செல்வதனையும் கொள்கைசார் பரிந்துரைகளுக்குப் பயனளிப்பதையும் இலக்காகக் கொண்டுள்ளது. வினைத்திறனானதும் பயனுள்ளதுமான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமையொன்று, சட்டமருத்துவச்[9] சான்று உட்பட, சான்று சேகரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும். அத்துடன் வலுவான அபிப்பிராய அறிக்கையொன்று, வெற்றிகரமான குற்றவழக்குகளுக்குப் பங்களிக்கும்.

மேலும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களை அறிக்கையிடுவதற்கான விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அதிகரிப்பதற்கு, சமூகங்களில் விழிப்புணர்வை உருவாக்குவதனை இது இலக்காகக் கொண்டுள்ளது. தவறிழைப்பவர்கள் தமது குற்றச் செயல்களின் பாரதூரத்தன்மையை விளங்கிக்கொண்டு, சான்றுக்கிணங்கத் தோதான தீர்ப்புக்களைப் பெறுதல் வேண்டும். ஆய்வானது, சேவைகளை முன்னேற்றுவதனையும் வெளிப்படையான தீர்ப்புக்களுக்காகக் கடந்தகாலச் சம்பவங்களை அறிக்கையிடுவதற்குப் பலர் முன்வரும் வகையிலான சூழலொன்றை உருவாக்குவதையும் இலக்காகக் கொண்டுள்ளது. அதன்மூலம் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைத்துறையானது, அறிக்கையிடப்பட்டதும் வசதிப்படுத்தப்பட்டதுமான சம்பவங்கள் குறித்த முறையான ஆவணப்படுத்தலைப் பேணுவதற்கு இயலுமாகவிருக்கும். இவ்வாறான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களின் முறைமையான ஆவணப்படுத்துகை மூலம் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் சூழல்சார் நிலைமைகள் உட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், கிழக்கு மாகாணத்திலுள்ள ஒட்டுமொத்த நிலைமையைச் சிறந்த முறையில் புரிந்துகொள்ளலாம்.

---

9 Harris, Lauren and Julie Freccero (May 2011), Sexual Violence: Medical and Psychosocial Support*,* A Working Paper of the Sexual Violence and Accountability Project, *Human Rights Center, University of California*, Berkeley, pg. 6.

எனவே இவ்வாய்வு, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமைகளை அணுகுவதிலுள்ள சவால்களையும் தடைகளையும் பரீட்சிப்பதுடன், அச்சேவைகளைத் தரமுயர்த்துவதற்கான பரிந்துரைகள் பற்றியும் கருத்துரைக்கின்றது.

## 1.4 ஆய்வின் குறிக்கோள்கள்

சேவைகளை அணுகும்போது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினாலும், அவர்களுக்குச் சேவைகளை வழங்கும்போது சேவை வழங்குநர்களினாலும் எதிர்நோக்கப்பட்ட சவால்களையும் இடைவெளிகளையும் இனங்காண்பதே இவ்வாய்வின் அடிப்படைக் குறிக்கோள்களாக அமைந்துள்ளன. இவற்றுக்கு மேலதிகமாக, அரசாங்கம் சார்ந்த சேவை வழங்குநர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான சேவைகளின் தரத்தையும், வழங்குகையையும் மேம்படுத்தி, கொள்கைமட்ட மாற்றங்களைச் செய்வதற்குச் சாத்தியமான பரிந்துரைகளை முன்மொழிவதும் இதன் குறிக்கோளாக உள்ளது.

## 1.5 கருதுகோள்

பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளை அனுபவித்தோருக்கு உதவியளிக்கின்றமை தொடர்பில், அத்தகைய வன்முறை பற்றிய சேவைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் திருப்திகரமான மட்டத்தில் இல்லை. பெண்கள் சமாதானத்தை வரையறுப்பதற்கான பின்னணிப் பத்திரமொன்றாகவுள்ள (Background Paper), இலங்கையிலுள்ள பெண்களுக்கெதிரான பால்நிலை வன்முறைகளைப் புரிந்துகொள்ளுதல் என்னும் ஆவணத்தில், ''நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் தெற்கில் இடம்பெற்ற கொடூரமான அரசெதிர் எழுச்சியும், அதிகாரமானது விடுபாட்டுரிமையுடன் செலுத்தப்படுகின்ற சூழல் ஒன்றை உருவாக்கியுள்ளன. இது சாதாரண மக்களின் வாழ்வினுள் ஊடுருவி, சட்டம் ஒழுங்கினதும், நல்லாட்சியினதும், உயிருக்கான மதிப்பினதும் நிலைகுலைவை விளைவித்துள்ளதுடன் இவற்றினால் பெண்கள் அளவுக்கு மீறிய வகையில் பீடிக்கப்பட்டும் உள்ளனர். தனியார் மற்றும் அரச துறைகளில் ஆணாதிக்கம் தொடருகின்றதாகவுள்ள சமூக, கலாசாரக் கட்டமைப்புக்களில் இது அமைந்துள்ளது''.[10] எனக் கூறப்பட்டுள்ளவாறு, பால்நிலை அடிப்படையிலான வன்முறை அசம்பாவிதங்களை அறிக்கையிடுதல் வேறு மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்திலும் குறைவாகவுள்ளது. இதற்கான காரணங்களுள் சிலவற்றைக் குறிப்பிடுவதாயின், நீதி முறைமையிலான நம்பிக்கையின்மையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளுக்கான அணுகல் குறித்த விழிப்புணர்வின்மையும் அவற்றுள் உள்ளடங்குகின்றன.

10 Jayasundere, Ramani (August 2009), Understanding Gendered Violence Against Women in Sri Lanka, A Background Paper, *Women Defining Peace*, pg. 3

ஆகவே தவறிழைப்பவர்கள், பாலியல் துஷ்பிரயோகம், வன்புணர்வு மற்றும் ஏனைய பால்நிலை அடிப்படையிலான வன்முறை அசம்பாவிதக் குற்றங்களைத் தொடர்ச்சியாகப் புரிகின்றனர். ஆனால் அவர்கள் எப்போதேனும் அரிதாகவே குற்றவாளியாகக் காணப்படுகின்றனர். ஆகவே, பால்நிலை அடிப்படையிலான வன்முறையை உட்படுத்திய அசம்பாவிதக் குற்றச்செயல்களின் வீதங்கள் அதிகரிக்கின்றன.

## 1.6 ஆய்வு வினாக்கள்

ஆய்வானது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு வழங்கப்பட்ட சேவைகளின் பயனுறுதன்மையையும் வினைத்திறனையும் பகுப்பாய்வுசெய்ய முனைகின்றது. சேவைகளின் பயனுறுதன்மையானது, உயிர்தப்பிவாழ்வோர் எதிர்நோக்கிய பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளை விளித்துரைப்பதற்கெனச் சேவை வழங்குநர்களினூடாக வழங்கப்பட்ட தீர்த்துவைத்தல் மற்றும் தணித்தல் நடவடிக்கைகளின் அளவை உள்ளடக்குகின்றது. பயனுறுதன்மை என்பது, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குத் தோதான முறையில் பதிலிறுப்பதில் வழங்கப்பட்ட சேவைகளின் கால அளவு என வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

இந்த ஆய்வைப் பயனுள்ள முறையில் நெறிப்படுத்துவதற்கென பின்வரும் வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன:

1. அவை திருப்திகரமான மட்டத்தில் உள்ளனவா மற்றும் இல்லையெனின், ஏன்?
2. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை வழங்குகின்ற அலுவலர்களின் திறன்களும் அறிவும், பால்நிலைசார் கூருணர்வு, தொழில்வாண்மை அத்துடன் பயனுள்ள வழிமுறை போன்றவற்றுடன் நிறைவேற்றப்படுகின்றனவா?
3. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களை குற்றவழக்குக்காகவும், தவறிழைப்பவர்களுக்கான தீர்ப்புக்களுக்காகவும் அறிக்கையிடுவதில் எதிர்நோக்கப்பட்ட சவால்கள் எவை?
4. மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை அணுகும் பொருட்டு காணப்படுகின்ற இடைவெளிகள் யாவை?

## 1.7 முறைமையியல்

ஆய்வாளர், பல முக்கியமான தரவுச் சேகரிப்பாளர்களை நியமித்து, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் தொடர்பான நேர்காணல் நுட்பங்கள் பற்றி அவர்களுக்குப் பயிற்சியளித்தார். ஏலவேயுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள் குறித்து அவர்களின் திருப்தி மற்றும் அதிருப்தி மட்டத்தை மதிப்பீடு செய்வதற்கும் அத்தகைய சேவைகளை மதிப்பீடு செய்வதில்

அவ்விடைவெளிகளை இனங்காண்பதற்கும் வினாக்கொத்தொன்று தயாரிக்கப்பட்டது. தரவுச் சேகரிப்பாளர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் வீடுகளுக்கு விஜயம் செய்து அவர்களின் வதிவிடங்களில் நேர்காணல்களை நடாத்தினர். பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை ஆக்கக்கூறுகள் அனைத்தையும் கொண்டிருந்தது. அதாவது, சுகாதாரம் (சுகாதார மருத்துவ அலுவலர், வைத்தியசாலை, சட்டமருத்துவ அலுவலர், உளச்சுகாதாரக் கூறு), பொலிஸார், சட்ட அலுவலர்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், சமூக சேவை அலுவலர்கள், மத்தியஸ்த சபை, சட்ட உதவி ஆணைக்குழு, ஏனைய நீதித்துறை (காதி நீதிமன்றங்கள்), அரசசார்பற்ற நிறுவனங்கள்/ சமூக சேவை நிறுவனங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் (Safe Houses) போன்றவை. உயிர்தப்பிவாழ்வோர், இச்சேவைகளுக்கும் துறைகளுக்குமான அவர்களின் அணுகுதல் பற்றிய அடிப்படையில் நேர்காணல் செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளின் வினைத்திறனானதும் பயனுள்ளதுமான வழங்குகையை ஆய்வுசெய்து மதிப்பிடுவதற்குப் பின்வரும் ஆய்வு முறைமையியல் பயன்படுத்தப்பட்டது.

- பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை அணுகும்போது, அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் எதிர்நோக்கிய அவர்களின் சொந்த அனுபவப் பிரச்சினைகளை இனங்காண்பதற்கென வீட்டு விஜயங்களின்போது அவர்களுக்கு வழங்கப்பட்ட சுய பதிலளிப்பு வினாக்கொத்துக்கள் (Self-administered questionnaires)
- பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பங்களுக்கான குற்றவழக்குத் தொடுப்பிலும், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் புனர்வாழ்வு அளிப்பதிலும் சம்பந்தப்பட்டிருந்த, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்கும் அலுவலர்களுடனான, பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட முக்கிய தகவல்தருநர் நேர்காணல்கள்.
- மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நிவாரண சகோதரிகள், நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், சமூக சேவை நிறுவனங்கள், பொலிஸார், வைத்தியசாலை, காதி நீதிமன்றம், மத்தியஸ்த சபை, சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள்/சமூக சேவை நிறுவனங்கள் போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களுடனான சந்திப்புக்கள்.

- இவ்விடயம் பற்றி ஏலவே இருந்துவருகின்ற வேறு வெளியீடுகள் பற்றிய குறிப்பீடுகள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவனங்களின் எண்ணிக்கையும் அலுவலர்களின் கிடைக்கத்தகு தன்மையும் திறன்களும் அறிவும் பற்றிய மதிப்பீடு, வசதிகளின் நிலை, பல்துறைநெறிசார் குழுவினரின் பணி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்கு பதிலிறுப்பதற்குச் சேவைகளுக்குள்ள இயலுமை மற்றும் குற்றவழக்குகள் போன்ற அதிகமான பண்பறி மற்றும் அளவறித் தகவல்களை (qualitative and quantitative information) இந்த ஆய்வு சேகரித்துள்ளது.

நேர மட்டுப்பாடுகள் மற்றும் முற்கூட்டித் தீர்மானிப்பதிலுள்ள சவால்கள் என்பன காரணமாக, ஆய்வுக் கற்றலினது கண்டறிதல்களின் பகிர்வு அமர்வுகளில் பங்குபற்றுவதற்குக் குறிப்பாக சுகாதார சேவையினருக்கு இயலாதிருந்தன. இதனைப் பொருட்படுத்தாது, உளச்சுகாதாரத் துறையும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்தின் பின்னூட்டமும் அபிப்பிராயங்களும் இவ்வாய்வில் சுகாதாரச் சேவைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டன. எவ்வாறாயினும், சுகாதார மருத்துவ அலுவலர் மற்றும் சட்டமருத்துவ அலுவலர் போன்ற வேறு சுகாதாரத் துறையினரின் பின்னூட்டங்களையும் அபிப்பிராயங்களையும் இவ்வாவணத்தில் உள்ளடக்குவதற்கு ஆய்வாளருக்கு இயலாதிருந்தது.

### 1.7.1 ஆய்வின் வடிவமைப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்குரிய சேவை பதிலிறுத்தல்களின் நேர்த்தியான தன்மையையும், அத்துடன் அவை பயனுள்ள வகையில் பதிலிறுப்பதற்கு இயலுமாக உள்ளனவா என்பதையும் புரிந்துகொள்வதற்கு, முறைமைகளையும் நடவடிக்கைமுறைகளையும் பகுப்பாய்வு செய்து ஒப்பீடு செய்யப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகைப் பதிலிறுத்தல்களின் மதிப்பீடு பூர்த்திசெய்யப்பட்ட பின்னர், உள சமூகப் பதிலிறுத்தல்கள் மற்றும் புனர்வாழ்வளித்தல் போன்ற இயைபான குறிப்பீட்டு முறைகள், சட்ட முறைமையினுள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கான குற்றவழக்குத் தொடுப்புடன் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டன.

## 1.8 ஆய்வின் வரையறைகள்

ஆய்வானது 2017 மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை ஆறு மாத காலப்பகுதியொன்றுக்கு வரையறுக்கப்பட்டது. ஆனால், உயிர்தப்பிவாழ்வோரின் தரவுகளைச் சேகரிப்பதிலுள்ள தாமதங்களும் சேவை வழங்குநர்களுடன், குறிப்பாகச் சுகாதாரத் துறையினருடன் கூட்டங்களை முற்கூட்டித் தீர்மானிப்பதிலான நேர மட்டுப்பாடுகளும் காரணமாக,

ஆய்வானது 2017 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு, 2018 மே மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டது. ஆய்வானது, மட்டக்களப்பு மாவட்டத்தைக் கவனக்குவிவாகக் கொண்டது. ஆகவே, ஒப்பீட்டு நோக்கங்களுக்காக ஏனைய மாவட்டங்களில் ஆழ்ந்த மதிப்பீடொன்று நிறைவேற்றப்படவில்லை.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள், பொதுவில் கூடுதலாக சமூக ரீதியிலும் கலாசார ரீதியிலும் தனிப்பட்ட ரீதியிலும் கூருணர்வுள்ளவையாக உள்ளன. ஆதலால், சமூக மற்றும் உளவியல்சார் காரணங்களுக்காக உயிர்தப்பிவாழ்வோரை அணுகுவது சிரமமாக இருந்தது. பெரும்பாலான உயிர்தப்பிவாழ்வோர் தமது தற்போதைய குடும்ப வாழ்க்கையின் மீதான தாக்கம் காரணமாக வன்முறைத்தன்மை வாய்ந்த கடந்தகால அசம்பாவிதங்களை மீள நினைவுகூர்வதற்கு விரும்பவில்லை. அதனால், தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றவர்களும், எதிர்மாறான முறையில் தாக்கத்துக்கு உட்படாதவர்களுமான உயிர்தப்பிவாழ்வோருக்கு மாதிரித் தெரிவின் நோக்கெல்லை வரையறுக்கப்பட்டது. மாதிரிகளைக் கற்றுக்கொள்வதற்கென சேவை வழங்குநர்களுடன் தொடர்புகொள்ளப்பட்டதுடன் அவர்கள் வழங்கிய நிரல்களில் இருந்து மாதிரித் தெரிவு நிறைவேற்றப்பட்டது. அத்தகைய ஆய்வின் பெறுபேறுகள் சேவை வழங்குநர்கள் தொடர்பிலான பக்கச்சார்பைப் பிரதிபலிக்கக்கூடியதாக இருக்கும் அதேவேளை, நேர்காணல் வினாக்கொத்திலுள்ள குறுக்குச் சரிபார்த்தல் வினாக்களின் மூலம் (cross-verification questions) இது மிகக் குறைவாக்கப்பட்டது. பதிலளிப்போர்களுக்கான தளர்வுற்ற நிலையையும் பாதுகாப்பான சூழலையும் உருவாக்கும்படி தரவு சேகரிப்பாளர்கள் எச்சரிக்கப்படுவது முக்கியமாக இருந்தது. அத்துடன், பதிலளிப்பவர்கள், பதிலளிக்க விரும்பாத ஏதேனும் வினாவுக்கு பதிலளிக்கும்படி எப்போதேனும் அவர்கள் வலுக்கட்டாயப்படுத்தப்படக் கூடாதென அத்தகைய தரவு சேகரிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

— அத்தியாயம் 2 —

# தனித்துறைசார் வெளியீடுகள் பற்றிய மீளாய்வு

## 2.1 அறிமுகம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகையின் பயனுறுதன்மையும் வினைத்திறனும், இன்றுவரை இலங்கையில் நிகழ்த்தப்பட்டிராத ஒரு புதிய ஆய்வுத்துறையாக உள்ளது. அத்துடன், நாட்டிலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு பதிலிறுப்பதற்கான அரச மற்றும் அரசசார்பற்ற சேவைப் பதிலிறுத்தல்களை மதிப்பீடு செய்தல் என்பது சகல மட்டங்களுக்கும் அத்தியாவசியமாக உள்ளது. தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள் குறித்த பல்வேறு வரைவிலக்கணங்கள், மேலதிக அறிவு மற்றும் தகவல்களைத் தேடிக்கண்டறிவதற்கு இவ்வாய்வு பல எண்ணிக்கையிலான புத்தகங்களையும் கட்டுரைகளையும் குறிப்பீடு செய்கின்றது.

இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தின் பின்விளைவாக, குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் துரிதமான அபிவிருத்தி இடம்பெறுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளினால் பல எண்ணிக்கையிலான அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான பதிலிறுத்தல்களுக்கும் சேவை வழங்குகைக்கும், நுட்பத்துறைகளிலும் அறிவு மற்றும் திறன்களைத் தரமுயர்த்துவதிலும் மேலதிக மேம்படுத்துகை தேவையாகவுள்ளது. இந்தக் குறிப்பிட்ட ஆய்வானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைப் பதிலிறுத்தல்களின் பயனுறுதன்மையை மதிப்பீடு செய்வதனையும், அந்தந்தச் சேவைத் துறைகளிலான அறிவையும் திறன்களையும் தரமுயர்த்துவதற்கான வழிகளை இனங்காண்பதனையும் இலக்காகக் கொண்டுள்ளது. இவர்களுள் பெரும்பாலானோர் சேவை வழங்குநர்களாக மட்டுமே இருக்கின்றரென உரிமை கோரினர். ஆனால், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு, இழப்புக்கான எதிரீடுகளை (reparation) ஒழுங்குபடுத்துகின்றவர்களாகவும், உதவுகின்றவர்களாகவும்

அத்துடன் அவற்றை வழங்குகின்றவர்களாகவும் காணப்படும் அலுவலர்களினால் சேவைகள் வழங்கப்படலாம் என ஊகிக்கப்படவில்லை. இவ்வலுவலர்கள் நல்லுறவுகளைக் கட்டியெழுப்புவதற்கும், ஏனைய சேவைகளுக்கான தனிப்பட்ட கவனிப்பையும் இணைப்புக்களையும் வழங்குவதற்கும், உதவிக்கான ஆற்றுப்படுத்துகைகளுக்கும், நேர்மைக்கும் மற்றும் சமூகத்திலுள்ள தற்போதைய ஒப்புரவின்மைகளின் (inequities) நோக்கில் பெண்களின் உரிமைகளும் பால்நிலைச் சமத்துவமும் பற்றிய நேர்மறையான மனப்பாங்கைப் புகட்டுவதற்கும் பொறுப்பாகவுள்ளனர்.[11]

பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் கோட்பாட்டுடன் தொடர்புபடுகின்றதனால், இந்த ஆய்வு அதன் வரைவிலக்கணத்தை உருவரைகின்றது. இவ்வாய்வானது, சுகாதாரத் துறை, மருத்துவசட்டத் துறை, பொலிஸாரின் பதிலிறுத்தல்கள், சட்ட உதவி, புகலிடம் மற்றும் உளசமூக வசதிகளில் அளிக்கப்பட்ட சேவைகளுக்கும், நாட்டிலுள்ள, குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள, காதி நீதிமன்றம், மத்தியஸ்த சபை, நன்னடத்தை அலுவலர்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், சமூக சேவை அலுவலர்கள் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் என்போரிடமிருந்தான ஏனைய பதிலிறுத்தல்களுக்கும் இடையேயான நேரடி இணைப்புக்களை இனங்காணவுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான சேவை வழங்குகைக்கான அணுகுகை, மேலேயுள்ள துறைசார் சேவைகளை உள்ளடக்குகின்றது; அதாவது, இழப்புக்கான எதிரீடுகள், உடலூறுபாடுகள் மற்றும் வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கான மருத்துவ உதவி போன்ற உடல்சார் மற்றும் உணர்வுசார் ஆதரவு, சட்ட ஆலோசனையும் உதவியும், சட்ட உதவிச் சேவைகளும் குற்றவழக்குத்தொடுப்பும், உளசமூக உதவியும் உளவளத்துணையும், புகலிட மற்றும் சிறுவர் பராமரிப்பு வசதிகள், வாழ்வாதார உதவி மற்றும் வேறு பொருளாதாரத் தேவைகள் என்பவற்றுக்கான உதவி தேவையாகவுள்ள பெண்களின் உடனடித் தேவைகளை இவை சுட்டிக்காட்டுகின்றன.[12] இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கும் குடும்ப வன்முறைக்குமான சேவையை வழங்குகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களின் எண்ணிக்கையில், 89.6 சதவீதமானவை உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களாகவும், 34 சதவீதமானவை சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களாகவும், 4.5 சதவீதமானவை அறக்கொடையளிப்பு நிறுவனங்களாகவும், 1.2 சதவீதமானவை கிறிஸ்தவ மத அடிப்படையிலான நிறுவனங்களாகவும், 1.2 சதவீதமானவை அரச நிறுவனங்களாகவும் இருந்தன.[13]

11 Kodikara, Chulani and Thiagi Piyadasa (2012), An Exploratory Mapping of Domestic Violence Intervention Services in Sri Lanka: Revised Edition, *International Centre for Ethnic Studies (ICES) and Women Defining Peace (WDP),* pg. 18.

12 Kodikara, Chulani and Thiagi Piyadasa (2012), An Exploratory Mapping of Domestic Violence Intervention Services in Sri Lanka: Revised Edition, *International Centre for Ethnic Studies (ICES) and Women Defining Peace (WDP),* pg. 18.

13 Ibid. pg. 13.

## 2.2 பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் வரைவிலக்கணம்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது, பெண்களினதும் ஆண்களினதும் பால்நிலையின் அடிப்படையில் அவர்களை உட்படுத்துகின்ற எல்லா வடிவங்களிலுமான வன்முறைகளையும் உள்ளடக்குகின்றது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது, கருவறை வாழ்க்கையில் தொடங்கி தனிநபர் ஒருவரின் வாழ்க்கைச் சுழற்சிபூராவும் அனுபவிக்கப்படலாம். பெண்களுக்கெதிரான சகல வடிவங்களிலுமான பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான சமவாயம் பற்றிய ஐ.நா. பிரகடனத்தின் (CEDAW) உறுப்புரை 1 இல், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது: ''பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம்பெறுகின்றவையாயினுஞ்சரி, உடல்சார், பாலியல் அல்லது உளவியல்சார் தீங்குகளை அல்லது துன்பத்தை ஏற்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள், வலுக்கட்டாயம் அல்லது தன்னிச்சையான சுதந்திர இழப்புக்கள் போன்ற செயல்களுட்பட, அத்தகைய செயல்களை விளைவிக்கின்ற அல்லது விளைவிக்கக்கூடிய பால்நிலை அடிப்படையிலான வன்முறை தொடர்பான ஏதேனும் செயல்''. அப்பிரகடனத்தின் 2ஆம் உறுப்புரை பின்வருமாறு கூறுகின்றது: ''குடும்பத்தில், சமூகத்தில் அல்லது எங்கு இடம்பெறினும் அரசினால் இழைக்கப்பட்ட அல்லது மன்னிக்கப்பட்ட உடல்சார், பாலியல்சார் மற்றும் உளவியல்சார் வன்முறைச் செயல்களை வரைவிலக்கணமானது அடக்குதல் வேண்டும், ஆனால், அவற்றுக்கு வரையறுக்கப்படுதலாகாது. இச்செயல்கள், பொது அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இடம்பெறுகின்றனவாயினுஞ்சரி, வாழ்க்கைத்துணையை அடித்தல், பெண்பிள்ளைகள் உள்ளடங்கலான துஷ்பிரயோகங்கள், சீதனம் தொடர்பான வன்முறை, திருமணஞ்சார் வன்புணர்வு உட்பட வன்புணர்வு, பெண் பாலுறுப்புக்களைச் சிதைத்தல்/வெட்டுதல் மற்றும் பெண்களுக்குத் தீங்கேற்படுத்தும் வேறு பாரம்பரிய செயல்முறைகள், வாழ்க்கைத்துணைசாரா வன்முறை, சுரண்டுதல் தொடர்பான பாலியல் வன்முறை, பணியிடத்திலும் பாடசாலைகளிலும் வேறெங்கேனும் இடம்பெறுகின்ற பாலியல் தொந்தரவு மற்றும் அச்சுறுத்தல், வலுக்கட்டாயமாக விபச்சாரத்துக்குட்படுத்துதல் மற்றும் தன்னிச்சையாகச் சுதந்திரத்தை இழக்கச்செய்வித்தல் என்பவற்றை உள்ளடக்கும்.''

முறைமைப்படுத்தப்பட்ட வன்புணர்வுட்பட ஆயுத மோதல் நிலைமைகளில் பெண்களின் உரிமைகள் மீதான வன்முறைகள், பாலியல் அடிமைத்துவம் மற்றும் வலுக்கட்டாயக் கருத்தரிப்பு, வலுக்கட்டாய மலடாக்கம், வலுக்கட்டாயக் கருச்சிதைவு, வலுக்கட்டாயமாக அல்லது வலோற்காரமாகக் கருத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தச் செய்தல், பிறப்புக்கு முன்னர் சிசுவின் பாலைத் தெரிவுசெய்தல் மற்றும் பெண் சிசுக்களைக் கொலைசெய்தல் என்பவற்றை உள்ளகப்படுத்துவதனைக் குறித்துரைப்பதன் மூலம், செயற்பாட்டுக்கான பீஜிங் தளமானது (The Beijing Platform for Action), இவ்வரைவிலக்கணத்தை

விரிவுபடுத்தியுள்ளது. அது, சிறுபான்மையினரைச் சேர்ந்த பெண்கள், வயதானவர்களும் இடம்பெயர்ந்தோரும், சுதேச, அகதி மற்றும் புலம்பெயர் சமூகங்களைச் சேர்ந்தவர்கள், வறுமைக்குட்பட்ட கிராமிய அல்லது பின்தங்கிய பிரதேசங்களில் அல்லது தடுப்புக்காவலில் வாழ்கின்ற பெண்கள் ஆகியோரை மேலும் ஏற்றங்கீகரித்துள்ளது.

உலக வங்கி கலந்துரையாடற் பத்திரமானது (The World Bank Discussion Paper), பால்நிலை அடிப்படையிலான வன்முறையைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றது: ‘‘பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரின் சூழலினுள் இரு பால்நிலைகளுக்கும் இடையேயான சமத்துவமற்ற அதிகாரத் தொடர்புகளுடன் சேர்த்து, ஒவ்வொரு பால்நிலையுடனும் இணைந்துள்ள தரநெறிசார் வகிபாக எதிர்பார்ப்புக்களின் விளைவாக இடம்பெறுகின்ற வன்முறையைக் குறித்துக்காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பொதுவான பதமாகும்.’’

பெண்கள், பெண்பிள்ளைகள், ஆண்கள் மற்றும் ஆண்பிள்ளைகள் என்போர் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளினால் பலிக்குட்படுத்தப்பட்டோராக இருக்க முடியுமாகவுள்ள அதேவேளை, இவ்வாய்வுக் கற்றலின் முக்கிய கவனக்குவிவு பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்முறைகள் பற்றியதாகவே உள்ளது. ஆண்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் நிலவவில்லை என இது கூறவரவில்லை. உதாரணமாக, ஆண்கள் ஆண்களுடன் பாலியல் தொடர்புகளை வைத்திருப்பதன் காரணமாக, ஆண்மைத்துவம் பற்றி மேலோங்கிநிற்கும் கருத்தேற்புக்களை மீறியமைக்காக, ஆண்களும்கூட உடல்சார் அல்லது வாய்மொழிமூலமான தாக்குதல்களுக்கு இலக்கானவர்களாக வர முடியும். ஆண்களும் - சேர்ந்துவாழ்பவர்களின் அல்லது பிள்ளைகளின் மூலம் - குடும்பத்தில் வன்முறையினால் பலிக்குட்படுத்தப்பட்டோராக வர முடியும்.[14]

பால்நிலை அடிப்படையிலான வன்முறையானது, ஒன்றில் பெண்களுக்கு அல்லது ஆண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை, வன்புணர்வு மற்றும் பாலியல் தாக்குதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. எவ்வாறாயினும், ஆண்களுடன் ஒப்பிடுகையில், சதவீத ரீதியில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளிலிருந்து பெண்களுக்கே கூடுதலான சேதமும் ஊறுபாடுகளும் ஏற்படுத்தப்படுகின்றன. ‘‘பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளினால் பெண்களே மிகவும் பாதிக்கப்படுகின்றனர் எனச் சொல்லப்படுவதுடன், நெருங்கிச் சேர்ந்துவாழ்பவரின் (intimate partner) மூலமான வன்முறையே பெண்களுக்கெதிரான பால்நிலை அடிப்படையிலான வன்முறையின் முக்கிய வடிவமாக உள்ளது’’[15]

14 http://www.health-genderviolence.org/training-programme-for-health-care-providers/facts-on-gbv/defining- gender-based-violence/21

15 http://restlessdevelopment.org/file/res-sa-men-and-boys-gbv-oct2014-pdf

இது தொடர்பில், ஆய்வுக் கற்றலானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் வரைவிலக்கணத்தை ஏற்றுள்ளதுடன், இந்த நோக்கினூடாகவே அது எமது கண்டறிதல்களைப் பகுப்பாய்வுசெய்தும் உள்ளது.

## 2.3 பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய சேவைகளின் வரைவிலக்கணம்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவிகளை விளித்துரைக்கும்போது, சேவைகளானவை, குணமாக்குதல், உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகளை விளித்துரைத்தல், உடல்சார் மற்றும் உளசமூக சிகிச்சை, இழப்புக்கான எதிரீடுகள் மற்றும் புனர்வாழ்வளித்தல் என பல ஆக்கக்கூறுகளைக் கொண்டுள்ளன. இச்சேவைகள், வாழ்க்கைச்சுழற்சி பூராவும், குடும்ப வன்முறை, உடல்சார் வன்முறை, பாலியல் வன்முறை, தீங்கு மற்றும் வன்முறை பற்றிய அச்சுறுத்தல்கள் போன்ற உளவியல்சார் வன்முறை, உணர்வுசார் வன்முறை, பாரபட்சம் மற்றும் தனிமைப்படுத்துகை, சிறுவர்களின் பாலியல் பாவனை, பொருளாதார வன்முறை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறை வடிவங்களுக்குப் பதிலிறுக்கின்றன. இற்றைவரை, இலங்கையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் பற்றிய சேவைகளுக்கும் பதிலிறுத்தல்களுக்கும் ஏதேனும் தெளிவான வரைவிலக்கணம் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆதலால்,

அத்தகைய ஓர் உறுதியான வரைவிலக்கணத்தைப் பெறுவதற்கு இந்த ஆய்வுக்கு இயலாதிருந்தது. எவ்வாறாயினும், இந்த ஆய்வுக் கற்றலின் நோக்கங்களுக்காக மட்டுமே, ஆய்வாளர், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளைப் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துவதற்கு முயற்சித்தார்: ''ஒரு மருத்துவ, சட்ட, சமூக, பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் சூழல்சார் தன்மையுடையவையும், பால்நிலைச் சமத்துவத்தின் மீது குறிப்பான கவனக்குவிவுடையவையுமான பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளை விளித்துரைத்து அவற்றுக்குப் பதிலிறுக்கின்ற பல்துறைசார் சேவைகள்.''

இவ்வழங்குநர்கள், சேவை வழங்குகையின் பொதுவானவொரு வடிவமைப்பைக் கொண்டிருப்பதில்லை. எவ்வாறாயினும், பரந்துபட்டவொரு பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமையயைப் பூர்த்திசெய்வதற்கு, அவர்கள் எல்லோரும் துறைசார் தேவைகளுக்கிணங்கப் பதிலிறுக்கின்றனர். இந்த ஆய்வானது, இச்சேவை வழங்குகை முறைமைகளின் இடைவெளிகளையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு அவை பயனுள்ளதும் வினைத்திறனானதுமான பதிலிறுத்தல்களாக உள்ளனவா என்பதையும் விளித்துரைத்துள்ளது. ஆய்வாளருக்கும் தரவு சேகரிப்பாளருக்கும் இருந்த பாரிய மட்டுப்பாடு

யாதெனில், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் எழுந்தமான ஒரு தரப்பினரைச் சந்திப்பதாக இருந்மையே. பொதுவாக இப்பெண்கள், தரவு சேகரிப்பாளர்களுடன் உரையாடி பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை அணுகுவது குறித்த அவர்களின் அபிப்பிராயங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு விரும்பவில்லை. இந்த ஆய்வின் நோக்கத்துக்காக, நேர்காணல் வினாக்கொத்திலிருந்தான கண்டறிதல்கள், சேவை வழங்குநர்களுடன் பகிரப்பட்டு அவர்களின் முறையான கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.3.1 சுகாதாரச் சேவைகள்

பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் பெண்களின் உடல்சார், உணர்வுசார் மற்றும் உளவியல்சார் நல்வாழ்வின் மீது தீங்கு விளைவிக்கும் தாக்கங்களைக் கொண்டுள்ளன. ஆதலால், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் வைத்தியசாலைகளில் வழங்கப்படும் அவசியமான மருத்துவச் சிகிச்சையையும் தோதான உளசமூகச் சேவைகளையும் பெற்றுக்கொள்வது முக்கியமாக உள்ளது. அவர்களுள் பெரும்பாலானோர் உரிமை மீறலொன்றின் அடிப்படையின்மீது ஏதேனும் சட்ட நடவடிக்கையை எடுப்பதில்லை. சமூகக் களங்கம் பற்றிய பயமும் அவர்களின் பிள்ளைகளின் எதிர்காலமும், திருமணம் மூலம் சேர்ந்து வாழ்பவர்கள் மீதான அக்கறையும் இதற்குப் பெரும்பாலும் காரணமாக உள்ளது. சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இவ்விருப்பமின்மை காரணமாக இந்த உயிர்தப்பிவாழ்வோர் மருத்துவச் சிகிச்சையையும் பெற்றுக்கொள்வதில்லை. இது, எதிர்காலத்தில் உடல்சார் மற்றும் உணர்வுசார் அச்சுறுத்தல்கள் தொடர்பிலான மேலதிக உடல்நலச் சிக்கல்களை விளைவிக்கும். இச்சூழற்சியானது, தீவிரப்படுத்தப்பட்ட வன்முறை பெரும்பாலும் மீள இடம்பெறுவதற்கு இட்டுச்செல்வதுடன், அத்தகைய உரிமை மீறல்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைத் துஷ்பிரயோகங்களும் தொடர்ந்திருப்பதற்குப் பொறுப்பாகவுள்ள தவறிழைப்பவரின்பால் குற்றப்பொறுப்பு இல்லாதிருப்பதனையும் உறுதிப்படுத்துகின்றது.

## 2.3.2 மருத்துவச் சட்டச் சேவைகள்

இலங்கையில் மருத்துவச் சட்டச் சேவைகள் உயிர்தப்பிவாழ்வோரின் மீதான பரிசோதனை ஒன்றுக்கு ஏற்பாடு செய்கின்றது. எவ்வாறாயினும், முன்வைக்கப்பட்ட மருத்துவச் சான்றினைப் பொருட்படுத்தாது, பாலியல் தாக்குதலுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட தவறிழைத்தவருக்கு உண்மையில் தண்டனைத் தீர்ப்பளித்தல் குற்றவியல் புலனாய்வு

முறைமையில் அரிதாகவுள்ளது.[16] சுகாதார அமைச்சு (MOH) மற்றும் வேறு இயைபான நிறுவனங்களிலிருந்தான குழுவினரின் ஒத்துழைப்புடன் செயற்பட்டு, இலங்கை அரசாங்கம் இலவச மருத்துவச்சட்டச் சேவைகளை வழங்குகின்றது. இந்த மருத்துவச்சட்டச் சேவைகள் அரசாங்கப் போதனா வைத்தியசாலைகள், பொது வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகளினால் வழங்கப்படுகின்றன. சிறியளவிலான வைத்தியசாலைகள் இச்சேவைகளைப் பெறுவதற்கென உயிர்தப்பிவாழும் ஒருவரை/நோயாளி ஒருவரை பொது வைத்தியசாலைக்கு இடமாற்றுகின்றன.

மருத்துவச்சட்டச் சேவைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரை நேர்காணல் செய்கின்ற, அல்லது மரணமடைந்த தனிநபரை உயிரியல்சார் மற்றும் சட்டமருத்துவஞ்சார் சான்றைச் சேகரிப்பதற்காகப் பரிசோதனை செய்யும் ஒரேயொரு துறையாக உள்ளதுடன், அவை குற்றவியல் தவறுகளுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்காக சட்ட நீதிமன்றம் ஒன்றுக்கு அபிப்பிராய அறிக்கை ஒன்றையும் வழங்குகின்றன.

"மருத்துவச்சட்ட அறிக்கை என்பது, மருத்துவ நிபுணர்களுக்குக் கண்டறிதல்கள், நோயறிதல், முற்கணிப்பு மற்றும் அபிப்பிராயம் கொடுக்கின்றதும் சட்ட நோக்கங்களுக்காகப் பரிந்து கேட்கப்படுகின்றதுமான ஒரு நோயாளியின் அல்லது இறந்த உடலின் நிலைமை பற்றிய அறிக்கையொன்றாக உள்ளது. ஒரு மருத்துவப் பதிவேடானது, மருத்துவ அல்லது அறுவை மருத்துவ நடவடிக்கைமுறை ஒன்றை நடாத்துகின்றபோது அல்லது அதன் ஆலோசனைப் பரிசோதனை ஒன்றின் பின்னர் நோயாளி ஒருவர் சம்பந்தமாக ஒரு மருத்துவ அல்லது சுகாதாரத் தொழிலரினால் செய்யப்பட்ட ஏதேனும் பதிவேடாகக் காணப்படுகின்றது. மருத்துவச் சட்ட அறிக்கையொன்றை எழுதுதல் ஒரு நுட்பமான பணியாகக் காணப்படுகின்றது. இது சரியாகச் செய்யப்படின், அது நீதிநலனுக்குச் சேவையாற்றுவதுடன் அதனை எழுதிய அத்தொழிலர் நீதிமன்றத்தில் அவசியமற்ற முறையில் தோன்றுவதற்கான சந்தர்ப்பங்களின் எண்ணிக்கையையும் வரையறுக்கும். ஒரு நோயாளி தொடர்பாக ஏதேனும் மருத்துவ ஆவணம் மருத்துவச் சான்றாக நீதிமன்றத்தில் சாத்தியமான முறையில் தேவைப்படலாம் என்பதை வலியுறுத்த வேண்டியதும் முக்கியமாகும். நல்ல முறையில் வைத்திருக்கப்பட்ட பதிவேடுகளின் முக்கியத்துவத்தை இது அடிக்கோடிட்டுக் காண்பிக்கின்றது".[17]

மருத்துவச்சட்ட அலுவலர்களும், சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த வழக்குரைஞரும் குற்றச்செயல்களுக்கு எதிராகக் குற்றவழக்கைத் தொடுப்பதற்கான

---

16 Gooneratne, Induwara (2010), Delivering a Forensic Expert Testimony for the Defense: Relevance, Hesitations and Reservations Amongst Professionals in Sri Lanka, *Sri Lankan Journal of Forensic Medicine Science and Law*, Vol. 1, No. 2, pg. 1.

17 http://www.dundee.ac.uk/forensicmedicine/Crimes_against_Women_and_Children/B5-Reports_Evidence.pdf (accessed 24/09/14)

நடைமுறையைத் தொடங்குவதற்குரிய முக்கிய ஆளணியினராக உள்ளனர்.[18] குறைந்தபட்சத் தேவைப்பாட்டை எதிர்கொள்வதற்கென மருத்துவச்சட்டச் சேவைகள் பற்றி மருத்துவ அலுவலர்களுக்குப் பயிற்சியளிப்பதன் மூலம் சுகாதார அமைச்சு மாற்று ஒழுங்கேற்பாடுகளைச் செய்கின்ற போதிலும், அது இன்னமும் திருப்திகரமற்ற மட்டத்திலேயே உள்ளது. உதாரணமாக, பரிசோதனை உபகரண வசதிகள் உட்பட, முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப அறிவும் திறன்களும் இல்லாதிருக்கின்றன.[19] மட்டக்களப்பு மாவட்டத்தில் போதனா வைத்தியசாலையில் நிரந்தரமான சட்டமருத்துவ அலுவலர்கள் எவருமில்லை. அத்துடன், இம்மாவட்டத்தின் வேறு பிரிவுகளிலுள்ள ஏனைய பொது மற்றும் ஆதார வைத்தியசாலைகளிலும் மருத்துவச்சட்ட அலுவலர்கள் எவருமில்லை. மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையில் வசதிகள் பற்றாக்குறையும், உரிய நேரத்திலும் வினைத்திறனான முறையிலும் சேவைகளை வழங்குவதற்கான அலுவலர்களின் பற்றாக்குறையும் நிலவுகின்றன. அத்துடன் பல்துறைநெறிசார் தொழில்வாண்மையாளர்களைக் கொண்ட குழுவினரும் இங்கு காணப்படவில்லை.

“பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகத்திலிருந்து உயிர்தப்பிவாழ்வோரை மருத்துவச்சட்ட நோக்கங்களுக்காகப் பரிசோதனை செய்தல், அறிக்கையிடுதல் மற்றும் முகாமை செய்தல் பற்றிய தேசிய வழிகாட்டு நெறிகள்”[20] எனத் தலைப்பிடப்பட்ட தேசிய வழிகாட்டுநெறிகள் சார்ந்த ஒரு மரபொழுங்கு ஆவணம் உள்ளது. இலங்கையில் பாலியல் தாக்குதலிலிருந்து / பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் பரிசோதனை செய்வதற்கான இவ்வாவணம், நடைமுறையில் மிக முக்கிய தேவைப்பாடுகளுள் ஒன்றாகவுள்ள உயிர்தப்பிவாழ்கின்ற ஒருவரின் மருத்துவச்சட்டப் பரிசோதனையிலுள்ள குற்றவியல் புலனாய்வுகள் பற்றிய நடவடிக்கைமுறை ஒன்றைக் குறிப்பீடு செய்கின்றது. எவ்வாறாயினும், மட்டக்களப்பு மாவட்ட வைத்தியசாலையிலேனும் எத்தனை மருத்துவத் தொழில்வாண்மையாளர்கள் இவ்வழிகாட்டு நெறிகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை நிச்சயித்துக்கொள்வது ஆய்வாளருக்குப் பாரிய சவாலாக இருந்தது.

18 Gooneratne, Induwara (2010), Delivering a Forensic Expert Testimony for the Defense: Relevance, Hesitations and Reservations Amongst Professionals in Sri Lanka, *Sri Lankan Journal of Forensic Medicine Science and Law*, Vol. 1, No. 2, pg. 1.

19 Hulathduwa, S.R. (2010), Some Common Pit-falls in the Practice of Forensic Medicine in Sri Lanka: A Review of International Literature, *Sri Lanka Journal of Forensic Medicine, Science & Law*, Vol. 1, No. 1, pg. 20.

20 Edirisinghe, Anuruddhi and Handun Wijewardena et al (2014), National Guidelines on Examination, Reporting and Management of Sexually Abused Survivors for Medico-Legal Purposes*, The College of Forensic Pathologists of Sri Lanka*, pg. 3.

## 2.3.2.1. பாலியல் தாக்குதலிலிருந்து/வன்புணர்விலிருந்து உயிர்தப்பி வாழ்வோரைப் பரிசோதனை செய்வதற்கான மரபொழுங்கு

சட்டமருத்துவ நோயியல் வல்லுநர் கல்லூரியானது, இலங்கையில் பாலியல் தாக்குதலிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் பரிசோதனை செய்வதற்கான மரபொழுங்குகளைத் தயாரித்துள்ளது. ஆலோசக சட்டமருத்துவ அலுவலர்களுக்கும் மருத்துவ அலுவலர்களுக்கும் மருத்துவச்சட்ட அலுவலர்களுக்கும் வன்புணர்வு விடயங்களின் பரிசோதனை பற்றிய நடவடிக்கைமுறை, செயன்முறை மற்றும் ஒழுக்கவியல் பற்றி அறியச்செய்வித்தல் அதிமுக்கியமாக உள்ளது. இத்துறையில் ஈடுபட்டுள்ள சகல தொழில்வாண்மையாளர்களுக்கும் இவை பணிப்பாணைக்கு உட்பட்டவையாக உள்ளன.

இலங்கைச் சூழலில், சமூகம் சார்ந்த அச்சமும் நீதிமுறையின் மீதான நம்பிக்கையின்மையும் காரணமாக, பெண்கள், தாம் அனுபவித்துள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை அத்துடன்/அல்லது எவ்வகையினதுமான பாலியல் வன்முறை பற்றிய சம்பவங்களை வெளிவிடுவதற்கு விரும்புவதில்லை. ஆதலால், பரிசோதனையின் முதலாவது படியானது தனிநபரின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்வதாகும். அதன் பின்னர் மாத்திரமே பரிசோதனை நிறைவேற்றப்படுதல் வேண்டும். இதற்காக, ஏதேனும் புலனாய்வுக்கு, பரிசோதனைக்கு அத்துடன்/அல்லது சட்டமருத்துவச் சான்றின் சேகரிப்புக்கென குறித்த மரபொழுங்கானது, பணிப்பாணைக்குட்பட்டது (mandatory) என்பதுடன் அது ஒரு சட்ட நீதிமன்றத்திற்குத் திடமான அபிப்பிராய அறிக்கையாகவும் அமைகின்றது. இம்மரபொழுங்கு, சுகாதாரக் கவனிப்புக்கான உரிமை, மனித கௌரவத்துக்கான உரிமை, பாரபட்சமின்மைக்கான உரிமை, தகவலுக்கான உரிமை, சுயமாகத் தீர்மானம் எடுப்பதற்கான உரிமை, அந்தரங்கத்தன்மைக்கான உரிமை மற்றும் இரகசியத்தன்மைக்கான உரிமை போன்ற பெண்கள் உரிமைகளினதும் மனித உரிமைகளினதும் கண்ணோட்டத்தைக் கவனத்திற்கொண்டுள்ளது.[21]

இவற்றுக்கு மேலதிகமாக, சட்டமருத்துவ நோயியலுக்கான இம்மரபொழுங்கு, ஆவணப்படுத்தல் நோக்கங்களுக்காக ஒரு சீரான துறைச்சொல்லை (terminology) வரையறுத்துள்ளதுடன், முன்னாள் உயிர்தப்பிவாழ்வோர் (ex-survivors), தவறிழைத்தோர், பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து மற்றும் பாலியல் வன்முறையிலிருந்து / பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பி வாழ்வோர், சுகாதாரப் பணியாளர்கள், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள், சிறுவர்கள் என்போருக்கான சகல மருத்துவச்சட்டச் சேவைகளையும், சட்டமருத்துவத்திலுள்ள விசேட நிபுணர்களையும், தர மருத்துவ அலுவலர்களையும் மற்றும் அரசாங்க மருத்துவ அலுவலர்களையும் உள்ளடக்குகின்றது.

21 Ibid, pg. 4.

### 2.3.3 பொலிஸ் சேவைகள்

பொலிஸ் சேவைகளும் அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படுகின்றன. பெண்கள் மற்றும் சிறுவர்களைப் பாதிக்கின்ற பிரச்சினைகளுக்கு நேரடியாக பதிலிறுப்பதற்கு ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடம் தாபிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 14 பிரிவுகள் காணப்படுவதுடன், ஒவ்வொரு பிரிவிலும் பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடம் தாபிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் முறைப்பாடுகளைப்பெற்று தோதான சட்டங்களின் அடிப்படையில் வழக்குகளைக் கோப்பிடுகின்றனர். இக்குறிப்பிட்ட கருமபீடங்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் தொடர்புபட்ட சம்பவங்களுக்குப் பதிலிறுப்பதற்கென எப்போதும் பெண் பொலிஸ் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் அநேகமான பொலிஸ் நிலையங்களில் அவ்வாறு காணப்படுவதில்லை. இக்குறிப்பிட்ட கருமபீடத்திலிருந்து சேவைகளை அணுகுகின்ற பெண்களுக்கு இது மிகப்பெரிய சவாலாக உள்ளது. ஏனெனில் ஓர் ஆண் அலுவலருடன் தமது பிரச்சினைகளின் விபரங்களைப் பகிர்வது அவர்களுக்கு அசௌகரியமாக அல்லது பாதுகாப்பற்றதாக இருக்கும். இக்கருமங்கள் பற்றி ஒரு பெண் அலுவலருடன் கதைப்பதற்கே அவர்கள் எப்போதும் விரும்புவர். மொழித்தடைகள் இதனைவிடக் கூடுதலான சவாலாகத் தொடர்ந்திருக்கின்றன. இம்மாவட்டத்தில் பொலிஸ் அலுவலர்களுள் அநேகமானோர் தமிழ்மொழியில் உரையாடாததன் விளைவாக முறைப்பாடுகள் சிங்கள மொழியில் மட்டுமே பதியப்படுகின்றன.

“பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடங்கள் பாலியல் தவறுகளைக் கையாள்வதில் பயிற்சிபெற்ற பெண் அலுவலர்கள் உட்பட போதிய அதிகாரங்களையும் சமமான தகுநிலையையும் வசதிகளையும்கொண்ட பால்நிலைசார் கூருணர்வுடைய அலுவலர்கள் மூலம் வலுப்படுத்தப்படுதல் வேண்டும். பொலிஸ் அலுவலர்கள் எவ்விடப்பரப்பில் தொழில்புரிகின்றனரோ அவ்விடப்பரப்பின் மொழியைப் பேசுதல் வேண்டும்.[22] பெண்கள் மற்றும் சிறுவர் கருமபீடங்கள் குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளைக் கோப்பிடுகின்ற அதேவேளை, அவைபற்றிய புள்ளிவிபரங்கள் பகிரங்கமான முறையில் கிடைகக்கக்கூடியனவாகக் காணப்படவில்லை.”[23]

பொலிஸ் அலுவலர்களுள் பெரும்பாலானோர் ஆணாதிக்க மனப்பாங்கைக் கொண்டிருப்பதுடன், அவர்கள் மாறா உருப்படிவநிலையிலான பால்நிலை நடைமுறைகளையும் பேணுகின்றனர். நாம் ஆய்வுசெய்த ஒருசில பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் பெண்களின் உரிமைகள் மீதான கண்ணோட்டத்துடன்கூடிய ஈடுபாட்டுடனும் அமைந்தொழுகுகையுடனும் கையாளப்பட்டன. பெண்கள் பொலிஸ் சேவைகளை அணுகியபோது அவர்களுக்கு அதிகமான சவால்களை

22 Report of the Leader of the Opposition’s Commission on the Prevention of Violence Against Women and the Girl Child, pg. 41.

23 Ibid, pg. 58.

இது ஏற்படுத்தியது. பொலிஸ் அலுவலர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறை அசம்பாவிதங்களைக் கையாளும்போது பாரதூரமான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாகப் பேச்சுவார்த்தையின் மூலம் குடும்பத்தில் இணக்கத்தைச் செய்வதற்கே பெரும்பாலும் எத்தனிக்கின்றனர். ஆண் கட்டமைப்புக்களினதும் அதிகாரத்தினதும் படிமுறைநிலையினுள் இந்தப்புரிந்துணர்வும் விழிப்புணர்வும் இல்லாமை காரணமாக பெண்கள், பொலிஸாருக்கு சம்பவங்களை அறிக்கையிடுவதற்குப் பெரும்பாலும் அசௌகரியமுள்ளவர்களாகவும் விருப்பமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். "பொலிஸாரின் வகிபாகம் பரீட்சிக்கப்படவேண்டிய தேவை உள்ளது. அநேகமான சந்தர்ப்பங்களில் தரப்பினர்களை ஒன்றுசேர்த்து இணக்கமுறையான வகிபாகத்தை அவர்கள் வகிக்கின்றனர் அல்லது பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்குத் தரப்பினர்களிடையே மத்தியஸ்தம் வகிக்கின்றனர்"[24]

"சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கான பணியகம் எனத் தலைப்பிடப்பட்ட பிரிவொன்றும் பொலிஸில் காணப்படுகின்றது. பெண்கள் மற்றும் சிறுவர்மீது இழைக்கப்பட்ட எல்லாக் குற்றச்செயல்களுக்கும் எதிராக வெவ்வேறு நடவடிக்கைகளை எடுக்கும் பணி இப்பணியகத்துக்குக் குறித்தளிக்கப்படுகின்றது. இது உடல்சார் வன்முறைகளிலிருந்து பாலியல் துஷ்பிரயோகம்வரை நீடிக்கும். அவர்களின் முறைப்பாடுகள் பெண் பொலிஸ் அலுவலர்களினால் பதியப்படுவதற்கான வசதிகளும் அவர்களுக்குண்டு. அதுவும், அவர்களின் சுயமரியாதையைப் பாதிக்கும் நாகரிகமற்ற ஆட்களினாலான இழிவுபடுத்தும் வார்த்தைகளிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும்பொருட்டு பொதுமக்களின் பார்வைக்கு அப்பாற்பட்ட ஓரிடத்தில் அவ்வாறு செய்யப்படும். நாட்டிலுள்ள எல்லா பொலிஸ் நிலையங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி விசேடமான முறையில் தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்கள் இலங்கைபூராவும் இச்சேவைகளைப் புரிவதற்கென இப்பணியகத்தினால் பயிற்சியளிக்கப்பட்டுள்ளனர்."[25]

### 2.3.4 சட்ட உதவிச் சேவைகள்

தண்டனைச் சட்டக்கோவையினதும் குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தினதும் (2005) ஏற்பாட்டினூடாகச் சட்ட உதவிச் சேவைகள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் பதிலிறுக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் பதிலிறுப்பதற்கான ஒட்டுமொத்த சட்ட உதவி வசதிகள் சாதாரண மட்டத்தில் உள்ளன. "சட்ட உதவிச் சேவைகள், பால்நிலை, வயது மற்றும் இனச்சமநிலைகளைக் காண்பித்து நன்கு கட்டமைக்கப்பட்டு பணியாட்தொகுதியினர் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது மிக அதிகமான சட்ட உதவிசார் செயலாற்றல் எல்லையைக் கொழும்பு பெறுகின்றதாக புவியியல்சார் கணிப்பீடு காண்பிக்கின்றது.

24 Gomez, Shyamala (February 2005), A Study on Gender Based Violence in the Batticaloa District, Care International – Sri Lanka, pg. 23.

25 https://www.police.lk/index.php/police-history

ஏனைய நன்கு சேவையாற்றப்பட்ட மாவட்டங்களாக அம்பாறை, மட்டக்களப்பு, புத்தளம், அநுராதபுரம், பதுளை, அம்பாந்தோட்டை, மாத்தறை, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன. கம்பஹா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் குறைந்தளவிலான சேவைகள் புரியப்படுவதுடன், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சேவை வழங்குநர்கள் எவரும் தொழிற்படவில்லை.''[26]

இச்சட்ட உதவி வசதிகள் சட்ட உதவி ஆணைக்குழுவினால் வழங்கப்படுவதுடன், இச்சேவைகளுக்கு எந்தவொரு கட்டணமும் அறவிடப்படுவதில்லை. கட்சிக்காரரினது அக்கறையின் அடிப்படையில் வெளியிலிருந்தான சட்டத்தரணிகளும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை வழக்குகளுக்குத் தோன்றுகின்றனர். எவ்வாறாயினும், இச்சேவைகள் வரையறுக்கப்பட்ட கடமைப்பொறுப்புடன் வழங்கப்படுகின்றதெனக் கருதப்பட்டது. சில நிறுவனங்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்கின்ற பெண்களுக்கு மிக உதவியாக உள்ள இலவச சட்ட உதவிச் சேவைகளை வழங்குகின்றன. துரதிஷ்டவசமாக, தவறிழைப்பவர்களுள் பலர் வழக்குகளில் வெற்றியீட்டுவதற்கென குற்றவியல் சட்டத்தரணிகளை ஈடுபடுத்துவதற்குத் தமது அதிகாரத்தையும் பணத்தையும் பயன்படுத்துகின்றனர். கடந்த காலங்களில் இச்செயன்முறையில் சட்டச்சான்று அழிக்கப்பட்டு அல்லது தள்ளுபடி செய்யப்பட்டு பல பெண்கள் இக்குற்றச்செயல்களுக்கான குற்றத்தீர்ப்பைப் பெறுவதற்கு இயலாதிருந்துள்ளனர். ஆதலால் நீதிமுறைமையில் நம்பிக்கையில்லாத காரணத்தினால் பெண்கள் பொதுவாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு விரும்புவதில்லை. ''சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஏனைய நிறுவனங்களுக்குப் பெரும் எண்ணிக்கையிலான ஆற்றுப்படுத்தல்களைத் தேவைப்படுத்துதல்; (தமிழ் தோற்றுவாயைக்கொண்ட பெண்கள் நீதிமன்றத்துக்குச் செல்லத் தயங்குகின்றனர் எனச் சொல்லப்படுகின்ற) மட்டக்களப்பில் போன்று, அல்லது (முஸ்லிம் தோற்றுவாயைக்கொண்ட பெண்கள், குடும்பப் பிரச்சினைகளைக் கையாளுகின்ற ஆணாதிக்கங்கொண்ட காதி நீதிமன்றங்களுக்குச் செல்வதற்கான நம்பிக்கையைக் கொண்டிராத) அம்பாறையில் போன்று, சமூக கலாசாரப் பொதுநெறிகள்; அல்லது சர்வோதய சட்டச் சேவைகள் இயக்கத்தின் விடயத்தில் போன்று நிறுவனஞ்சார் அணுகுகை; இது சட்ட அதிகாரமளித்தலைக் கவனக்குவிவாகக் கொண்டு, முறைசார் நீதிமன்ற முறைமையின் மீது நம்பியிராமல் சமூகப் பிணக்குகளைத் தீர்த்துவைத்தலை மேம்படுத்துவதற்கு எத்தனிக்கின்றது.''[27] இந்த ஆய்வின் போது மட்டக்களப்பிலுள்ள

26 The Asia Foundation, UNDP - Equal Access to Justice Project, UNHCR and Ministry of Constitutional Affairs and National Integration, Ministry of Justice and Law Reform. (2009), The Legal Aid Sector in Sri Lanka - Searching for Sustainable Solutions: A Mapping of Legal Aid Services in Sri Lanka, The Asia Foundation and UNDP, pg. 2.

27 The Asia Foundation, UNDP - Equal Access to Justice Project, UNHCR and Ministry of Constitutional Affairs and National Integration, Ministry of Justice and Law Reform (2009), The Legal Aid Sector in Sri Lanka - Searching for Sustainable Solutions: A Mapping of Legal Aid Services in Sri Lanka, The Asia Foundation and UNDP, pg. 40.

கவனக்குவிவுக் குழுக்களுள் ஒன்று, 'ஆட்கவர்தல் வழக்குகளுக்காகச் சட்ட உதவிச் சேவைகளை அணுகுவதற்கான சாத்தியக்கூறைக்' குறிப்பிட்டது."[28]

### 2.3.4.1. வன்புணர்வு பற்றி இலங்கைச் சட்டம் கூறுவதென்ன?

தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 363 இல் வன்புணர்வின் சட்ட வரைவிலக்கணம் பின்வருமாறு கூறப்படுகின்றது,

"குறிப்பிட்ட ஐந்து நிலைமைகளில் ஒரு பெண்ணுடனான பாலியல் புணர்ச்சியாக வன்புணர்வு: (1) சம்மதமின்றிய பாலியல் புணர்ச்சி; (2) பெண்ணொருவர் சட்டமுறையான அல்லது சட்டமுறையற்ற தடுப்புக்காவலில் இருக்குமிடத்து சம்மதத்துடனான அல்லது பயமுறுத்தல், அச்சுறுத்தல் அல்லது வலோற்காரத்தினூடாகச் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்குமிடத்தான பாலியல் புணர்ச்சி; (3) பெண்ணொருவர் சித்தசுவாதீனமற்றவராக இருக்கும்போது அல்லது அவ்வாணினால் அல்லது வேறெவரேனும் ஆளினால் ஏற்படுத்தப்பட்ட குடிவெறி நிலையில் இருக்கும்போது சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிலையிலான பாலியல் புணர்ச்சி; (4) அப்பெண் அவ்வாணுடன் திருமணம் செய்துள்ளார் என நம்புவதன் காரணமாக அவள் சம்மதித்துள்ள நிலையிலான பாலியல் புணர்ச்சி; (5) பெண்ணொருவர் குற்றஞ்சாட்டப்பட்ட ஆணின் மனைவியாக, அவள் 12 வயதுக்கு மேற்பட்டவராக மற்றும் அவர் குற்றஞ்சாட்டப்பட்டவரிலிருந்து நீதிமுறையில் பிரிந்து வாழாதவராக இருந்தாலொழிய, அப்பெண் 16 வயதுக்குக் குறைந்தவராக இருப்பின், சம்மதத்துடனான அல்லது சம்மதமற்ற பாலியல் புணர்ச்சி."[29]

இலங்கைச் சட்டத்தின் கீழ், வன்புணர்வு என்பது யோனியில் உட்செலுத்தப்பட்டிருத்தல் என்பதாக மட்டுமே வரைவிலக்கணம் கூறப்படுவதுடன், வன்புணர்வு என்ற பிரிவின்கீழ் குற்றஞ்சாட்டப்படவும் முடியும்;[30] ஏனைய வகையான பாலியல் வன்முறைகளுக்கு தண்டனைச்சட்டக் கோவையின் திருத்தத்தில் குற்றவியல் தவறுகளின் கீழ் குற்றஞ்சாட்டப்பட முடியும். பழிக்குட்படுத்தப்பட்டோரைப் பாதுகாப்பதற்கு ஏனைய நாடுகளின் சட்டவாக்கங்களில் பல ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியனவாக உள்ளன. முறையிலாப் புணர்ச்சியானது, இலங்கையிலும்[31] அதேபோன்று ஏனைய நாடுகளிலும், குறிப்பாக அயர்லாந்தில், பாரதூரமானவொரு குற்றச்செயலாக உள்ளது.[32]

---

28 Ibid, pg. 58.

29 (http://www.impowr.org/content/current-legal-framework-rape-and-sexual-assault-sri-lanka#sthash.IgjlGWhV .pdf (accessed 23/09/14).

30 Wanasundera, Leelangi (March 2000), Country Report on Violence Against Women in Sri Lanka, *Centre for Women's Research,* pg. 10.

31 Wanasundera, Leelangi (March 2000), Country Report on Violence Against Women in Sri Lanka*,* *Centre for Women's Research*, pg. 8.

32 The Law on Sexual Offences: A Discussion Paper (May 1998) *Department of Justice, Equality and Law Reform, Government of* Ireland, pg. 21.

### 2.3.4.2 பாலியல் தாக்குதலுக்கு எதிராக / பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு எதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கான சட்ட ஏற்பாடுகள்

தண்டனைச்சட்டக் கோவைப் பிரிவிலும் குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச் சட்டத்தின் கீழும் வன்புணர்வு வழக்குகளுக்கான அரச சட்டத்தின்கீழ் இடைக்காலக்கட்டளையைப் பெற்று இலங்கையில் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடொன்று காணப்படுகின்றது. வன்புணர்வு ஒரு குற்றவியல் தவறாகக் காணப்படுவதுடன், தண்டனைச் சட்டக்கோவையின் 363ஆம் பிரிவின் கீழ் அது குற்றஞ்சாட்டவும்படுகின்றது.[33]

பெண்ணிலைவாதிகள் பாலியல் தாக்குதலின்மீது வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்டுள்ளனர்; இதற்கு பெண்களுக்கான காரணகாரியத் தொடர்புக்குரிய அக்கறையிலும் நல்வாழ்விலும் மற்றும் அது பெண்களுக்கு அதிகாரமளிப்பதை எவ்வாறு நேரடியாகப் பாதிக்கின்றது என்ற அடிப்படையிலும் மாத்திரமே வரைவிலக்கணம் கூறப்படுகின்றது. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையேயான அதிகார வேறுபாடுகளின் அடிப்படைக் காரணிகளில் பெண்களுக்கெதிரான வன்முறை வேரூன்றியுள்ளது.[34] அத்தகைய மீறுகைகளுக்கெதிரான குற்றவழக்குத்தொடுப்பை சட்டமும், சமவாயங்களும், பிரகடனங்களும் ஆதரித்தபோதிலும், நடைமுறை மற்றும் ஒரு குறிப்பிட்ட நாட்டின் விடுபாட்டுரிமை என்பவற்றைப் பொறுத்தவரை ஒருசில வரையறைகள் உள்ளன.[35] எனினும், வன்புணர்வுக்கு / பாலியல் தாக்குதலுக்கு மீள வரைவிலக்கணம் கூறுவதற்குப் பெண்ணிலைவாதிகளின் கண்ணோட்டங்கள் குறிப்பிடத்தக்க முறையில் பங்களித்துள்ளன.

பாலியல் வன்முறையிலிருந்து / பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர், அவர்களுக்கான நீதியை நிலைநாட்டுவதற்கு வெற்றிகரமான குற்றவழக்குத் தொடுப்பைப் பெற்றுக்கொள்வதில் அதிக சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். பாலியல் வன்முறை பற்றிய புலனாய்வொன்றை நடாத்துவதிலும் தவறாளர்களுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பது தொடர்பிலும் பல சவால்கள் உள்ளன. இச்சவால்களை வெற்றிகொள்வதற்கான பதிலிறுத்தல்கள் கவனத்திற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், சம்பவங்களை அறிக்கையிடுவதற்கு ஊக்கமிழந்தோராக இருப்போரினால் அனுபவிக்கப்பட்ட இடையூறுகளும் தடைகளும் கவனிக்கப்படுதலும் வேண்டும்.

---

33 Gooneratne, Induwara (2010) Delivering a Forensic Expert Testimony for the Defense: Relevance, Hesitations and Reservations Amongst Professionals in Sri Lanka, *Sri Lankan Journal of Forensic Medicine Science and Law*, Vol. 1, No. 2, pg. 1.

34 Wanasundera, Leelangi (March 2000) Country Report on Violence Against Women in Sri Lanka, *Centre for Women's Research*, pg. 13.

35 Ibid, pg. 9.

பாலியல் வன்முறையானது, தேசிய மற்றும் சர்வதேச சட்டத்தின்கீழ் ஒரு குற்றச்செயலாக உள்ளது. எவ்வாறாயினும் அவற்றுள் சிலவற்றுக்கே வெற்றிகரமான விளக்கங்கள் (successful trials) நிச்சயமாக உள்ளன; அத்துடன் கென்யாவில் பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குப் பதிலிறுக்கும் பணி பொறுப்பிக்கப்பட்ட எதிரெதிர்த் துறைசார் அக்கறைகொண்டுள்ளோர் பற்றி பத்திரமொன்று வெளியிடப்பட்டது. அதில் வெளிப்படுத்திக் காட்டப்பட்டவாறு, இக்குற்றவழக்குகளின் விளைவுகள் சான்றளிக்கின்ற உயிர்தப்பிவாழ்பவருக்கு அப்பாற்செல்கின்ற சட்ட, வரலாற்றுமுறையான, உளசமூக மற்றும் பாதுகாப்புச் சிக்கல்களைக் கொண்டிருக்க முடியும். அதேபோன்று பின்வரும் குறிப்பீடுகளில் பாலியல் தாக்குதல் குற்றச்செயல்களையும் வெற்றிகரமான குற்றவழக்குகளுக்கான மருத்துவச்சட்ட பதிலிறுத்தல்களையும் விளித்துரைக்கின்ற ஒருசில வெளியீடுகள் மட்டுமே காணப்படுகின்றன.[36]

### 2.3.5 உளசமூக சேவைகள்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவுவதற்கு உளசமூக சேவைகள் மிக முக்கியமாக உள்ளன. வீட்டில், பொது இடமொன்றில், வேலைச்சூழலில் அல்லது அவர்களது நண்பர்களின் அல்லது உறவினர்களின் வீடுகளிலாயினுஞ்சரி, எல்லா இடங்களிலும் மன அழுத்த உணர்ச்சிகளையும் அசௌகரிய உணர்வையும் அவர்கள் அடிக்கடி அனுபவிக்கின்றனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் இணைந்து செயற்படுகின்ற பல்துறைநெறிசார் குழுவினரை எப்பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் உளச்சுகாதாரத்தைப் பரிசீலனை செய்கின்றவரும் அவரின் மனநிலை பற்றிய கூற்றொன்றை வழங்குகின்றவருமான உளநல மருத்துவர் ஒருவரைக் கொண்டுள்ள உளச்சுகாதாரக் கூறை (Mental Health Unit) வைத்தியசாலைகள் கொண்டுள்ளன. இச்சேவையும் பல்துறைநெறிசார் குழுவினரின் வேலைவசதியின் பாகமாகவுள்ளது. ஆனால் வைத்தியசாலைகளுள் பெரும்பாலானவை அத்தகையவொரு குழுவினரைக் கொண்டிருப்பதில்லை. வெவ்வேறு வகையிலான உயிர்தப்பிவாழ்வோரின் நடத்தைகளை இனங்காணக்கூடியதாக இருக்கின்றபோதிலும் தனிநபர், கட்டாயமாக உளநல மருத்துவரிடம் மாத்திரமே ஆற்றுப்படுத்தப்படுகின்றார். சான்றை நிரூபிப்பதற்காக எடுக்கப்படவேண்டிய மேலதிக நடவடிக்கைகளை விளித்துரைக்காது, அறிக்கை நோக்கங்களுக்காக அபிப்பிராயமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கென அல்லது உயிர்தப்பிவாழ்வோரின்

36 Seelinger, Kim Thuy, Helene Silverberg and Robin Mejia (May 2011), The Investigation and Prosecution of Sexual Violence and Accountability Project, Working Paper Series, *Human Rights Center, University of California, Berkeley Law School and Human Rights Center*, Kenya, pg. 33.

சிகிச்சை தொடர்பான அக்கறைப்புள்ளியிலிருந்து அவர்கள் சிலவேளைகளில் உளநல மருத்துவரொருவரிடம் ஆற்றுப்படுத்தவும்படுகின்றனர்.

## 2.4 மேலதிகச் சேவைகள் - மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நிவாரண சகோதரிகள், நன்னடத்தை அலுவலர்கள், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம், உளவளத்துணையாளர்கள்

பெண்களுக்கெதிரான வன்முறை பற்றிய பிரச்சினைகளை விளித்துரைக்கும் கடமைப்பொறுப்புடன் அரசாங்கமானது கொள்கை, திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அமைச்சின்கீழ் இலங்கை பெண்கள் பணியகத்தை தாபித்தது. பெண்கள் உரிமைகளின் இடையீடுகளை உள்ளகப்படுத்திய வேறுபல கூறுகள் இதனைப் பின்பற்றின. மகளிர் விவகார அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு என்பன, அவ்வமைச்சுக்களின் சேவைகளை கிழக்கு மாகாணத்தில் கண்காணித்த அபிவிருத்தி, புனர்வாழ்வாழ்வு மற்றும் மீள்நிர்மாண அமைச்சின்கீழ் ஆரம்பத்தில் பணியாற்றின. அதனைத்தொடர்ந்து கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு, சமூக சேவைகள் மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சுடன் ஒன்றிணைக்கப்பட்டது. 2006ஆம் ஆண்டில் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் வலுவூட்டல் அமைச்சு தாபிக்கப்பட்டது. அத்துடன் மேலதிகமாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்குப் பதிலிறுப்பதற்கு ஏனைய பல்வேறு சேவைகள் நிறுவப்பட்டன. அரசாங்கமானது, மகளிர் அபிவிருத்தி அலுவலர்களையும் நிவாரண சகோதரிகளையும் நன்னடத்தை அலுவலர்களையும் உளவளத்துணையாளர்களையும் நியமித்துள்ளதுடன், வைத்தியசாலையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடங்களையும் நிறுவியுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடங்கள் என்ற கருத்தேற்பு அரசசார்பற்ற நிறுவனங்களினால் தொடக்கிவைக்கப்பட்ட அதேவேளை, பெண்கள் மற்றும் சிறுவர்களின் பாதுகாப்பை ஏற்பாடு செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்ட ‘மித்துரு பியச’ திட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் தற்போது இந்த முன்மாதிரி ஏற்றங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் ‘மித்துரு பியச’ அல்லது ‘நட்பு நிலையம்’ எனவும் மறுபெயரிடப்பட்டுள்ளது.

மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் நிவாரண சகோதரிகள், பெண்களின் பிரச்சினைகளைக் கையாள்வதற்கும் பெண்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் என முக்கியமாக நியமிக்கப்பட்டனர். இவ்வலுவலர்களினால் வழங்கப்பட்ட சேவைகள் பிரதேச செயலகத்தின்கீழ் வருகின்றன. அவர்களின் முக்கிய அக்கறையும் பொறுப்பெல்லையும் பெண்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதாக இருக்கின்றது. எனினும் அவர்கள் பெண்களின் பிரச்சினைகளை

விளித்துரைத்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கு அவசியமான பதிலிறுத்தல்களை வழங்குதலும் வேண்டும்.

இந்த அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சேவைகளைத் தவிர, மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்குப் பதிலிறுப்பதும் சேவைகளை வழங்குகின்றதுமான அரசசார்பற்ற துறைகளும் உள்ளன. சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் சமூகமட்ட நிறுவனங்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளில் சம்பந்தப்பட்டுள்ளதுடன், அவை உளவளத்துணை, புகலிடம், அவசரகால உதவி (உணவு, உடை, உணவுசாராப் பொருட்கள், பிரயாணப்படிகள் முதலியன) மற்றும் இலவசச் சட்ட சேவைகள் என்பவற்றை வழங்குவதனூடாக அரசாங்க நிறுவனங்களுக்கு உதவுகின்றன.

உயிர்தப்பிவாழ்வோரின் விடயம் தொடர்பில் குற்றவழக்குத் தொடுப்பதற்காக அவர்களுக்கு உதவி வழங்குவதன் மூலம், புகலிட வசதிகளை வழங்குவதன் மூலம் சுயதொழில் செயற்பாடுகளை, வாழ்வாதார உதவியை மற்றும் உளசமூக உளவளத்துணைச் சேவைகளை தொடர்வதன் மூலம் ஏனைய சேவை வழங்குநர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுக்கு பதிலிறுக்கின்றனர்.

வன்புணர்வுச் சம்பவங்கள் பற்றி சேவை வழங்குநர் மூலமான விரிவான விபரங்கள், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்குரிய தனிவேறான கவனிப்புக்கூறுகளுக்கான நிறுவனஞ்சார் பதிலிறுத்தல்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளையும் வன்புணர்வுச் சம்பவங்களையும் மதிப்பீடு செய்வதற்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்பன உள்ளடங்கலாக, பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் மீதான பல இயைபான ஆவணங்களை ஆய்வாளர் கண்டறிந்தார். பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் பொலிஸாரின் இடையீட்டையும் வேறு மருத்துவ, சட்ட மற்றும் உளசமூக உதவிச் சேவைகளையும் தேவைப்படுத்துகின்றன. அரசாங்கமானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் தொடர்பில் குற்றவழக்குத் தொடுப்பதற்காக ஒருசில மருத்துவச்சட்ட சேவைகளையும், சட்ட, உளசமூக, உளவளத்துணை மற்றும் வாழ்வாதாரம் போன்ற வேறு உதவிகளையும் தாபித்துள்ளது. எவ்வாறாயினும் இந்த ஆவணங்களுள் எவையும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான பதிலிறுத்தல்கள் தொடர்பிலான சேவை வழங்குகைகளைக் கூறவில்லை. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான சேவை வழங்குகையை அணுகுவதற்கான இடைவெளிகளை அடையாளங்காணுதல் என்ற விடயத்துடன் இணைந்துள்ளதும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைத்துறையின் பயனுறுதன்மையை உருவரைந்து, இற்றைவரை நடாத்தப்பட்டதுமான எவையேனும் ஆவணங்களைக் கண்டறிவதற்கு ஆய்வாளர் இயலாதவராகவும் இருந்தார்.

இந்த ஆய்வுக்கற்றல் காலப்பகுதியின்போது மருத்துவ மற்றும் மருத்துவச்சட்ட, சட்டஉதவி மற்றும் உளவளத்துணைத் துறைகளிலான வசதிகள் கிடைக்கக்கூடியனவாக்கப்பட்டன. பாலியல் தாக்குதலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையும் பற்றிய சம்பவங்கள் தொடர்பில் குற்றவழக்குத் தொடுப்பதற்கென மகளிர் அபிவிருத்தி அலுவலர்களினாலும் சமூகசேவை அலுவலர்களினாலும் பொலிஸாரினாலும் மேலதிக வசதிகள் வழங்கப்பட்டன. மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆலோசக சட்டமருத்துவ அலுவலர்களும் பரிசோதனை வசதிகளும் கிடைக்கக்கூடியனவாக இருந்தமையும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் குற்றவழக்குத்தொடுப்பதில் பொலிஸ் துறையினரின் ஈடுபாடும் பால்நிலைச் சமத்துவமின்மை மீதான அவர்களின் மனப்பாங்குகளும், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், சமூகசேவை அலுவலர்கள் அத்துடன் உளவளத்துணையாளர்கள் போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் புனர்வாழ்வளிப்பதற்கென நியமிக்கப்பட்ட ஏனைய அலுவலர்களும் இவ்வசதிகளினுள் உள்ளடக்கப்பட்டனர்.

— அத்தியாயம் 3 —

# தரவுப் பகுப்பாய்வு மற்றும் பொருள்கோடல்

## 3.1 மாதிரிகள் பற்றிய மீள்பார்வை

இந்த ஆய்வுக்காக, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குநர்கள் பலரும், இச்சேவைத் துறைகளை மதிப்பீடு செய்த பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் பலரும் எழுமாறாக நேர்காணல் செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக 122 உயிர்தப்பிவாழ்வோர் நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டு, மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளின் வழங்குகை முறைமைகளை மதிப்பீடு செய்வதில் நிலவுகின்ற இடைவெளிகளை இனங்காணும் பொருட்டு, அவர்களின் அனுபவங்களும் அபிப்பிராயங்களும் சேகரிக்கப்பட்டிருந்தன. ஆய்வுக்கான வினாக்கொத்துக்கு பதிலளித்த 106 பேருள், 16 பேர் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளை மதிப்பிடுதல் குறித்த தங்களுடைய அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கு விரும்பவில்லை. அதேவேளை சிலர், சேவை வழங்குநர்களை அணுகியிருந்தனர். அத்தகைய சேவைகள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளுடன் நேரடியான தொடர்பைக் கொண்டிராமையே அவர்கள் அத்தகைய சேவைகளை நாடியமைக்கான காரணமாக அமைகின்றது. பல பெண்கள், சமூக ரீதியிலான களங்கம் பற்றிய அச்சம் மற்றும் தமது எதிர்காலம் குறித்த அக்கறை காரணமாக, தங்களுக்கு ஏற்பட்ட உரிமை மீறல்கள் பற்றிய விபரங்கள் குறித்துக் கதைப்பதற்கு இன்னும் தயக்கமாகவே உள்ளனர் என்பதை இது சித்தரிக்கின்றது.

சேவை வழங்குநர்களுக்கிடையேயான ஒத்துழைப்பும் புரிந்துணர்வும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு மிகப் பயனுறுதியானதும் வினைத்திறனானதுமான உதவியை வழங்குவதற்கான முக்கிய அம்சங்களாக உள்ளன. குறிப்பாக, ஒரு சேவை வழங்குநருக்குக் கொடுக்கப்பட்ட அவரது பணியாற்றுகைசார் பணிப்பாணைகளினதும் வரையறைகளினதும் தன்மையின் காரணமாக, அச்சேவை வழங்குரினால் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து

உயிர்தப்பிவாழ்வோருக்குரிய உதவியை வழங்குவதில் தேவைப்படுத்தப்பட்ட எல்லா விடயங்களையும் பூர்த்திசெய்ய முடியாது. இவ்வாறுள்ளபடியினால், அவை பல சேவை வழங்குநர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

மொத்தமாக பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பி வாழ்வோரான 106 பேரின் பதிலளிப்புக்களுள், ஒரு பெண் மாத்திரம் அவரது சொந்த வதிவிடமல்லாத வேறு அமைவிடம் ஒன்றில் வைத்து நேர்காணல் செய்யப்பட்டார். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமைகளை மதிப்பீடு செய்யும்போது, அவர்கள் தமது வேதனைமிகு அனுபவங்களைத் தரவு சேகரிப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான பாதுகாப்பானதும், காப்பேற்பாடுள்ளதும் மற்றும் பரிச்சயமானதுமான சூழலொன்றின் அவசியம் காணப்படுவதனை இது காட்டுகின்றது. இதற்கு மேலதிகமாக அவர்கள், தங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அத்துடன்/அல்லது உறவினர்கள் முன்னிலையில் பாதுகாப்பையும் ஆதரவையும் கண்டுகொண்டனர்.

எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்கின்ற ஒருவர், சமூக ரீதியிலான களங்கம் மற்றும் அவருடைய சொந்தக் குடும்ப உறுப்பினர்களிடமிருந்து எதிர்காலத்தில் எழக்கூடிய மேலதிக பிரச்சினைகள் என்பவற்றுக்குப் பயந்து, அவருடைய சொந்த வீட்டிலிருந்து அப்பாலமைந்துள்ள இடத்தில் தரவு சேகரிப்பாளரைச் சந்திப்பதற்கு விரும்பியமை விதிவிலக்கான விடயமாக அமைந்தது. அவரின் குடும்பத்தினர், உண்மையில் அம்பலப்படுத்தப்பட்ட விடயத்தை அறிந்துள்ளபோதிலும், அவரைச் சந்திப்பதற்கெனத் தமது வீட்டுக்குப் பிறர் வருவதிலுள்ள பதற்றத்தை வெளிப்படுத்தியுள்ளனர். குறித்த அசம்பாவிதம் இப்போது முடிவடைந்து போய்விடும் என அவர்கள் விரும்புவதுடன், மீண்டும் அதைப்பற்றிக் கதைப்பதற்கான காரணத்தையும் கண்டுகொள்ளவில்லை. இந்த அசம்பாவிதத்தை இன்னுமொரு முறை மேலெழச் செய்வதில் வேறு பிரச்சினைகள் எழக்கூடுமென அவர்கள் கருதுவதுடன், அதன்மூலம் அப்பெண் மீண்டுமொரு தடவை ஆழமான மனக்காயத்திற்கும் மன அழுத்தத்திற்கும் உள்ளகலாம் என்ற நிகழ்வு குறித்துத் தமக்குள்ள கவலையையும் வெளிப்படுத்தினர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்கின்ற இன்னுமொருவர், அச்சம் மற்றும் குறித்த முடிவில் செல்வாக்குச் செலுத்துகின்ற வேறு காரணிகள் காரணமாக, அவருடைய பெயரைப் பகிர்ந்துகொள்வதற்குக்கூட விரும்பவில்லை. ஆணாதிக்கமானது சமூகத்தில் ஆழ வேரூன்றியுள்ளதுடன், பெண்கள், கீழ்மைப்படுத்தப்பட்ட நிலையொன்றுக்குத் தொடர்ச்சியாக உட்பட்டுள்ளனர். எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள ஏனைய அனைவரும் தமது பெயர்களையும் விபரங்களையும் வெளிப்படையாகப் பகிர்ந்துகொண்டதுடன், தமது வாழ்வு மற்றும் எதிர்காலம் பற்றிய திசைநோக்கு மீதான அக்கறையையும் காண்பித்தனர்.

மொத்த எண்ணிக்கையிலான நேர்காணல்களுள், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள 35 பேர் சுகாதார சேவைகளை அணுகியுள்ளனர், 87 பேர் பொலிஸ் சேவைகளை அணுகியுள்ளனர், 23 பேர் சமூக மட்ட நிறுவனங்களினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் தொடர்புகொள்ளப்பட்டு நலனுதவி அளிக்கப்பட்டுள்ளனர், 20 பேர் சட்ட உதவியை அணுகியுள்ளனர், 25 பேர் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் சேவைகளைப் பெற்றுள்ளனர், 8 பேர் நன்னடத்தை அலுவலர்களின் உதவியைப் பெற்றுள்ளனர் அத்துடன் 17 பேர் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களினால் உதவியளிக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்களுள் 7 பேர் மத்தியஸ்த சபையிடமிருந்தான சேவைகளையும், 27 பேர் காதி நீதிமன்றங்களிடமிருந்தான சேவைகளையும் அணுகியுள்ளதுடன், ஒரேயொருவர் பாதுகாப்பு இல்லமொன்றில் புகலிட சேவைகளை அணுகிப் பெற்றுள்ளார்.

15 வயதுடைய இளம் நபரொருவர் பற்றிய சிறுவர் துஷ்பிரயோக அசம்பாவிதமொன்று ஆவணப்படுத்தப்பட்டிருந்தது. அதில், சுகாதாரத் துறை, பொலிஸ் துறை, நன்னடத்தை அலுவலர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர், அரசசார்பற்ற நிறுவனம் மற்றும் பாதுகாப்பு இல்ல வசதி என சகலரும் ஈடுபட்டு அவசியமான ஆதரவை வழங்கினர். வீட்டினுள் 3 பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களும், வீட்டுக்கு வெளியே அத்தகைய ஒரு சம்பவமும் நடைபெற்றுள்ளன. பாலியல் தொந்தரவு பற்றிய ஒரு அசம்பாவிதம் வீதியோரத்தில் இடம்பெற்றுள்ள அதேவேளை, அத்தகைய வேறு 4 சம்பவங்கள் வீட்டினுள்ளும், இன்னுமொரு சம்பவம் வெளிநாடொன்றில் வைத்தும் இடம்பெற்றுள்ளது. அத்துடன், 2 வன்புணர்வு அசம்பாவிதங்கள் வீட்டுக்கு வெளியே நடைபெற்றுள்ளன.

பின்வரும் பகுப்பாய்வானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளைத் தரமுயர்த்துவதற்கும், எதிர்காலத்தில் தேசியளவில் கொள்கை மட்டத்திலான மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்துவதற்கும் தேவையாகவுள்ள முக்கிய கண்டறிதல்களை ஆய்வாளருக்கு வழங்கியுள்ளது.

### 3.1.1 மாதிரிப் பிரிப்பீடு

**அட்டவணை 1.1 : வயதை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

106 சாத்தியமான கேள்விக்கொத்துக்கள் பெறப்பட்டதுடன் அவற்றின் மாதிரிப் பிரிப்பீட்டை பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| அசம்பாவிதத்தின் போதான வயது | நிகழ்வெண் | % |
|---|---|---|
| 15-நவம்பர் | 4 | 4% |
| 16-20 | 11 | 10% |
| 21-25 | 26 | 25% |
| 26-30 | 21 | 20% |
| 31-35 | 16 | 15% |
| 36-40 | 16 | 15% |
| 41-45 | 7 | 7% |
| 46-50 | 4 | 4% |
| மதிப்பிடப்படாதவை | 1 | 1% |
| மொத்தம் | 106 | 100% |

11 முதல் 48 வயதுக்கு இடைப்பட்ட வயதினர்களும் அவர்களுள் 1/4 பகுதியினரும் அசம்பாவிதத்தின்போது 21 முதல் 25 வயதுக்கு இடைப்பட்ட வயதுக் குழுவில் இருந்தனர். மேலும் அவர்களுள் 20 சதவீதமானோர் 26 முதல் 30 வயதுக்கு இடைப்பட்ட வயதுகளில் இருந்தனர்.

**அட்டவணை 1.2 : அசம்பாவிதத்தை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

| அசம்பாவிதத்தின் வகை | நிகழ்வெண் | % |
|---|---|---|
| சிறுவர் துஷ்பிரயோகம் | 1 | 1% |
| குடும்ப வன்முறை | 92 | 87% |
| பாரதூரமான பாலியல் துஷ்பிரயோகம் | 4 | 4% |
| வன்புணர்வு | 2 | 2% |
| பாலியல் தொந்தரவு | 6 | 6% |
| குறித்துரைக்கப்படாதவை | 1 | 1% |
| மொத்தம் | 106 | 100% |

அளிக்கப்பட்ட தரவுகளுக்கிணங்க, ஒரு சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவம், 2 வன்புணர்வுச் சம்பவங்கள் மற்றும் 10 பாலியல் தொந்தரவுச் சம்பவங்கள் என்ற விதிவிலக்குடன், மற்றெல்லாச் சம்பவங்களும் குடும்ப வன்முறைத் தன்மையுடையனவாக இருந்தன. குடும்ப

வன்முறைச் செயல் தடுப்புச் சட்டம் எனும் சட்டமொன்றை இலங்கை கொண்டுள்ளபோதிலும், உண்மையில் 20 சம்பவங்களுக்கு மாத்திரமே சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் பெரும்பான்மையானோர், தாம் நீதி முறைமை தொடர்பில் மகிழ்ச்சியடையக்கூடிய நிலையில் காணப்படவில்லை என்றும், ஒட்டுமொத்தச் சட்டச் செயன்முறையில் நம்பிக்கையின்றி இருந்ததாகவும் குறிப்பிட்டனர்.

**அட்டவணை 1.3 : அசம்பாவிதம் நிகழ்ந்த இடத்தை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

| அசம்பாவிதம் நிகழ்ந்த இடம் | நிகழ்வெண் | % |
|---|---|---|
| வெளிநாடு | 1 | 1% |
| வீடு | 101 | 95% |
| வீட்டுக்கு வெளியில் | 2 | 2% |
| வீதி | 2 | 2% |
| மொத்தம் | 106 | 100% |

வீதியிலும், தமது வீடுகளுக்கு வெளியிலும் 4 பெண்கள் அசம்பாவிதங்களுக்குள்ளான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் ஒருவர் வெளிநாடொன்றில் அத்தகைய அசம்பாவிதத்துக்கு உள்ளாகியுள்ளார். பெண்களும் பெண்பிள்ளைகளும், தாம் வசிக்கின்ற இடங்களிலேயே காப்பும் பாதுகாப்பும் இல்லாதவர்களாக உள்ளனர் என்பதற்கு இது சான்றாக அமைகின்றது.

**அட்டவணை 1.4 : பெறப்பட்ட சேவைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

| பெறப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை | நிகழ்வெண் | % |
|---|---|---|
| 1 | 27 | 25% |
| 2 | 24 | 23% |
| 3 | 37 | 35% |
| 4 | 13 | 12% |
| 5 | 1 | 1% |
| 6 | 1 | 1% |
| 7 | 3 | 3% |
| மொத்தம் | 106 | 100% |

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மக்களுள் பெரும்பான்மையானோர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சேவைகளைப் பெற்றுள்ளதுடன், சராசரியாக குறைந்தபட்சம் 3 சேவைகள்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினால் பெறப்பட்டுள்ளன. 11 பொதுவான சேவைகள் ஆய்வு முழுவதும் அணுகப்பட்டிருந்தன.

**அட்டவணை 1.5 : அசம்பாவிதம் நிகழ்ந்த ஆண்டை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

| அசம்பாவிதம் நிகழ்ந்த ஆண்டு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| 1999 | 1 | 1% |
| 2004 | 1 | 1% |
| 2005 | 2 | 2% |
| 2006 | 1 | 1% |
| 2007 | 1 | 1% |
| 2011 | 2 | 2% |
| 2012 | 3 | 3% |
| 2013 | 2 | 2% |
| 2014 | 7 | 7% |
| 2015 | 11 | 10% |
| 2016 | 22 | 21% |
| 2017 | 51 | 48% |
| குறித்துரைக்கப்படாதவை | 2 | 2% |
| மொத்தம் | 106 | 100% |

நேர்காணல் செய்யப்பட்டவர்களுள் அநேகமானோர் மிக அண்மைக்காலங்களில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு முகங்கொடுத்து உயிர்தப்பிவாழ்வோர் என்பதுடன், இவர்களுள் பெரும்பான்மையானோர் (69%) 2016 முதல் 2017 வரையான காலப்பகுதியில் அத்தகைய அசம்பாவிதங்களுக்கு முகங்கொடுத்தவர்களாகக் காணப்பட்டனர். ஆய்வு நடாத்தப்பட்டபோதான காலப்பகுதியிலும் அதனை அண்மித்த காலப்பகுதியிலும் அதிகளவிலான சேவைகள் அணுகப்பட்டிருந்தன என்பதை இது வெளிப்படுத்துகின்றது. தற்போதைய பணிப்பாணைகள், செயன்முறைகள் மற்றும் நடவடிக்கைமுறைகள் என்பன இச்சேவை வழங்குநர்களிடத்தில் ஏலவே நிலைப்படுத்தப்பட்டிருந்தன என்பதனால் இச்சேவைகளைப் பெற்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள சகலருக்கும் இவை பெரும்பாலும் ஒரே மாதிரியானவையாகவே இருந்திருக்கக்கூடும்.

**அட்டவணை 1.6 : பெறப்பட்ட சேவைகளின் வகைகளை அடிப்படையாகக்கொண்ட மாதிரிப் பிரிப்பீடு**

| சேவைகளின்/வழங்குநர்களின் வகை | பெறப்பட்ட எண்ணிக்கை | % |
|---|---|---|
| பொலிஸ் | 87 | 82% |
| சுகாதார சேவைகள் | 35 | 33% |
| காதி நீதிமன்றம் | 27 | 25% |
| மகளிர் அபிவிருத்தி அலுவலர் | 25 | 24% |
| அரசசார்பற்ற நிறுவனங்களின் / சமூக அடிப்படையிலான நிறுவனங்களின் உதவி | 23 | 22% |
| சட்ட சேவைகள் | 20 | 19% |
| மத்தியஸ்த சபை | 20 | 19% |
| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் | 17 | 16% |
| நன்னடத்தை அலுவலர் | 8 | 8% |
| சமூக சேவை அலுவலர் | 7 | 7% |
| பாதுகாப்பு இல்லம் / புகலிட இல்லம் | 1 | 1% |

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் பெரும்பாலானோர் (82%) பொலிஸாரிடமிருந்தான சேவைகளையே பெற்றுள்ளனர் என்பதுடன் ஏனைய சேவைகள் குறைந்துசெல்கின்ற வரிசையொழுங்கிலேயே அணுகப்பட்டுள்ளன என்பதை மேலுள்ள அட்டவணை காட்டுகின்றது.

பதிலளித்தவர்களுள் 64 சதவீதமானோர், வன்முறைச் செயலைப் புரிந்தவர் தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர்களாகவே இருந்தனர் என உறுதிப்படுத்தினர். அது அவர்களுடன் சேர்ந்துவாழும் துணையாகவோ அல்லது நெருங்கிய உறவினராகவோ இருக்கலாம். 3 சதவீதமானோர் தொழிலுடன் தொடர்புடையவர்களாகக் காணப்பட்டதுடன் 33 சதவீதமானோர் யாரென பதிலளிக்கவில்லை. பதிலளித்தவர்கள், தவறிழைத்தவர் பற்றி பதிலளிக்கையில், குறித்த தனிநபர் தகவல்களை வழங்குவதில் செல்வாக்குச் செலுத்தினார் என 65 சதவீதமானோர் உறுதிப்படுத்தியதுடன், குற்றவழக்குத்தொடுப்பதில் அவர் செல்வாக்குச் செலுத்தினார் என 51 சதவீதமானோர் உறுதிப்படுத்தி இருந்தனர்.

## 3.2. சுகாதார சேவைகள்

பதிலளித்தவர்களுள் 35 பேர் (33%) சுகாதார சேவைகளைப் பெற்றனர் என்பதுடன் பெரும்பாலும் அவர்கள் அனைவருக்கும் அச்சேவைகள் அவர்களுடைய அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள வைத்தியசாலைகளின் மூலமே வழங்கப்பட்டன.

கீழுள்ளவை, சுகாதாரச் சேவைகளைப் பெற்றவர்களாகவிருந்து பதிலளித்தவர்களினால் வழங்கப்பட்ட அபிப்பிராயங்களை அடிப்படையாகக்கொண்டவை என்பதைப் பின்வரும் பதில்கள் விபரிக்கின்றன. எவ்வாறாயினும், கையாளப்பட்ட சம்பவங்களின் வகைகள் தொடர்பில் நோக்கும்போது வைத்தியசாலைகளில் வழங்கப்பட்ட சேவைகள் மாறுபடுகின்றன.

**அட்டவணை 2.1 : சுகாதார சேவை வழங்குநர்களுடனான ஒட்டுமொத்தத் திருப்திகரத்தன்மை**

| திருப்தி மட்டம் | நிகழ்வெண் | % |
|---|---|---|
| சாதாரணமானது | 9 | 26% |
| நன்று | 19 | 54% |
| மிக நன்று | 6 | 17% |
| திருப்தியில்லை | 1 | 3% |
| மொத்தம் | 35 | 100% |

பதிலளித்தவர்களுள் பெரும்பாலானோர், சுகாதாரச் சேவைத் துறையில் தாம் பெற்ற சிகிச்சை நன்றாக அல்லது மிக நன்றாக இருந்ததென உணர்ந்ததாகக் குறிப்பிட்டனர். சுகாதாரச் சேவைகள் பற்றிய சில பண்புக்கூறுகள் பின்வரும் அட்டவணையில் சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.1 : சுகாதாரச் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| சேவை வழங்குநரின் பண்புக்கூறு | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 31 | 89% | 4 | 11% | 35 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 19 | 54% | 14 | 40% | 33 | 94% |
| பெண்கள் மற்றும் சிறுவர் பற்றிய பொலிஸ் கருமபீடத்துக்கு அறிக்கையிடுவதற்கான நெறிப்படுத்துகை வழங்கப்பட்டமை | 24 | 69% | 10 | 29% | 34 | 97% |
| சரியான மருத்துவக் கூறை அணுகுவதற்கு வழிகாட்டல் வழங்கப்பட்டமை | 24 | 69% | 7 | 20% | 31 | 89% |
| மருத்துவப் பரிசோதனையை நடாத்துவதற்கான சம்மதம் நாடப்பட்டமை | 26 | 74% | 4 | 11% | 30 | 86% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சிகிச்சை பற்றிய எழுத்திலான ஆவணம் வழங்கப்பட்டமை | 10 | 29% | 18 | 51% | 28 | 80% |
| பரிசோதனையின்போது சௌகரியத்தை உணர்ந்தமை | 15 | 43% | 1 | 3% | 16 | 46% |
| பரிசோதனைக்கு பெண் பணியாட் தொகுதியினர் சமுகமளித்தமை | 16 | 46% | 0 | 0% | 16 | 46% |
| பரிசோதனையின்போது விரும்பிய மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ள இயலுமாக இருந்தமை | 16 | 46% | 0 | 0% | 16 | 46% |
| பின்தொடருகைகளுக்காக முறையான தகவல்கள் வழங்கப்பட்டமை | 12 | 34% | 7 | 20% | 19 | 54% |
| சட்டச் சேவைகளை அணுகுவதற்கு முறையான வழிகாட்டல் வழங்கப்பட்டமை | 14 | 40% | 7 | 20% | 21 | 60% |
| சேவைகளை அணுகுவதற்கான முறைமைகள் நிலைப்படுத்தப்பட்டிருந்தமை | 10 | 29% | 9 | 26% | 19 | 54% |

சரியான மருத்துவக் கூறை அணுகுவதற்கான வழிகாட்டல் வழங்கப்படுகின்றமை மற்றும் உயிர்தப்பிவாழ்வோரின் சம்மதம் சிகிச்சையளிப்புக்காகப் பெறப்படுகின்றமை போன்றே, மரியாதையுடன் நடாத்தப்படுகின்றமையும் பொலிஸ் நிலையங்களிலுள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய கருமபீடத்தை அணுகுவதற்கான நெறிப்படுத்துகை வழங்கப்பட்டமையும் பாராட்டப்பட்டன. இரகசியத்தன்மையைப் பாதுகாத்தலும் சிகிச்சை தொடர்பிலான எழுத்துமூல ஆவணமொன்றைப் பெற்றுக்கொள்ளலும் என்பதே பதிலளித்தவர்களுள் பெரும்பாலானவர்களிடையே காணப்பட்ட முக்கிய அக்கறையாக இருந்தது. பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோர் (54%) சிகிச்சையின்/சுகாதார சேவைகளின்போது அவர்களுக்கிருந்த சௌகரிய மட்டம் தொடர்பாக பதிலளிக்கவில்லை. எவ்வாறாயினும், பரிசோதனையின்போது தமது சொந்த மொழியில் உரையாடுவதற்கு இயலுமாக இருந்தமையையும் பெண் பணியாட்தொகுதியிலிருந்து ஒருவரின் பிரசன்னம் கிடைக்கக்கூடியதாக இருந்தமையையும் அவர்கள் பாராட்டுவதாகக் குறிப்பிட்டனர். அட்டவணையில் கடைசியாகவுள்ள உரைகற்களுக்குக் குறைந்தளவிலான பதில்கள் அளிக்கப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. இதற்கான காரணம் யாதெனில், சேவைகளைப் பெறுவதற்குத் தகவுடையோராக அமையாத உயிர்தப்பிவாழ்வோருக்கு அவ்வினாக்கள் பொருத்தமற்றவையாகக் காணப்பட்டமையாகும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு சுகாதார சேவைகள் பற்றியுள்ள விழிப்புணர்வைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை 2.1.2 : சுகாதாரச் சேவைகள் மீதான விழிப்புணர்வு பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| உயிர்தப்பிவாழ்வோரின் பார்வையில் சுகாதாரச் சேவைப் பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மருத்துவச்சட்டச் சேவைகளின் கிடைக்கக்கூடியதன்மை பற்றிய விழிப்புணர்வு | 10 | 29% | 22 | 63% | 32 | 91% |
| பரிசோதனைக்காகச் செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய விழிப்புணர்வு | 3 | 9% | 16 | 46% | 19 | 54% |
| விதித்துரைக்கப்பட்ட மருந்துகள் மற்றும் அவற்றின் பக்கவிளைவுகள் பற்றிய விழிப்புணர்வு | 11 | 31% | 20 | 57% | 31 | 89% |
| வழங்கப்பட்ட மருந்துகளைப் பற்றி மருத்துவரிடம் தெளிவுகளைப் பெற்றுக்கொள்ளல் | 10 | 29% | 20 | 57% | 30 | 86% |
| பரிசோதனையின்/சிகிச்சையின் போது தகவல்களைக் கேட்டுப் பெறுவதற்கான உரிமை பற்றிய விழிப்புணர்வு | 14 | 40% | 17 | 49% | 31 | 89% |
| வைத்தியசாலையிலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் குறித்த விழிப்புணர்வு | 7 | 20% | 21 | 60% | 28 | 80% |
| வைத்தியசாலையிலுள்ள சட்ட அலகு பற்றிய விழிப்புணர்வு | 5 | 14% | 21 | 60% | 26 | 74% |

மேலுள்ள அட்டவணை, பதிலளித்தவர்களுள் அதிகமானோர் இச்சேவைகள் பற்றியும் அவர்களுக்குள்ள உரிமைகள் பற்றியும் அறிந்திராதுள்ளபடியினால், சுகாதாரச் சேவைகள் தொடர்பிலான விழிப்புணர்வு மட்டங்கள் மேம்படுத்தப்படவேண்டிய தேவை உள்ளதைத் தெளிவாகக் காட்டுகின்றது. சுகாதாரச் சேவை வழங்குநர்கள் இப்பண்புக்கூறை மேம்படுத்தவேண்டிய தேவை உள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் பெரும்பான்மையானோர், தாம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, வைத்தியசாலையிலுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை

பற்றிய கருமபீடத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுரை, உளவளத்துணைச் சேவைகள், மேலதிக சேவைகளுக்கான ஆற்றுப்படுத்தல்கள் மற்றும் அவசர உதவிசார் ஆற்றுப்படுத்துகைகளுக்கான ஏற்பாடு என சகலவற்றையும் பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரமே, அத்தகைய கருமபீடத்தைப் பற்றி அறிந்துகொண்டனர்.

## 3.3. பொலிஸ் சேவைகள்

பதிலளித்தவர்களுள் 87 பேர் (82%) பொலிஸாரின் சேவைகளைப் பெற்றுள்ளனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்கின்ற இவர்கள், பொலிஸாருடன் இடைவினையாற்றுகையில் பெற்றுக்கொண்ட நடத்துமுறை பற்றிய உணர்வுகள் கீழே சாராம்சப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1 : பொலிஸ் சேவைகள்**

| நடத்துமுறை பற்றிய உணர்வு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| குறைவு | 14 | 16% |
| சாதாரணம் | 28 | 32% |
| நன்று | 36 | 41% |
| மிக நன்று | 10 | 11% |
| மொத்தம் | 88 | 100% |

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் பெரும்பான்மையானோர், பொலிஸ் சேவைகளிலிருந்து சாதாரணமான அல்லது திருப்திகரமான மட்டத்திலமைந்த நடத்துமுறையொன்றைக் கொண்டிருந்தனர் என்பதையே ஒட்டுமொத்தமாக இவ்வட்டவணை காட்டுகின்றது. 16 சதவீதமானோர், தாம் மோசமான சேவையை அனுபவித்ததாக உணர்ந்துள்ளதுடன், 11 சதவீதமானோர் மிகச்சிறந்த சேவைகளைப் பெற்றுள்ளனர். பொலிஸ் சேவைகள் பற்றிய சில பண்புக்கூறுகள் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1.1 : பொலிஸ் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| பொலிஸ் சேவை பற்றிய பண்புக்கூறு | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 64 | 74% | 22 | 25% | 86 | 99% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 44 | 51% | 42 | 48% | 86 | 99% |
| முறைப்பாட்டு இலக்கத்தை வழங்குதல் | 60 | 69% | 27 | 31% | 87 | 100% |
| அசம்பாவிம் பற்றி விளக்கிக் கூறுவதற்குப் போதிய நேரத்தை அனுமதித்தமை | 67 | 77% | 19 | 22% | 86 | 99% |
| சட்ட உத்தியோகத்தருக்கான / சட்ட நடவடிக்கைக்கான மிகச்சரியான நெறிப்படுத்துகை | 50 | 57% | 34 | 39% | 84 | 97% |
| முறையான புலனாய்வு இடம்பெற்றமை | 50 | 57% | 36 | 41% | 86 | 99% |
| பெண்கள் மற்றும் சிறுவர் பற்றிய கருமபீடத்துக்கு அறிக்கையிடும்போதான சௌகரியம் | 48 | 55% | 22 | 25% | 70 | 80% |
| பெண் பொலிஸ் அலுவலரின் பிரசன்னம் | 53 | 61% | 25 | 29% | 78 | 90% |
| அறிக்கையிடுவதற்கென தனிவேறான இடத்துக்கான ஏற்பாடு | 44 | 51% | 30 | 34% | 74 | 85% |
| பால்நிலை சமத்துவம் தொடர்பில் அலுவலருக்குள்ள மனப்பாங்கு | 38 | 44% | 35 | 40% | 73 | 84% |
| விரும்பிய மொழியில் அறிக்கையிடுவதற்கான இயலுமை | 69 | 79% | 5 | 6% | 74 | 85% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தமிழ்மொழி பேசுகின்ற அலுவலர்களின் பிரசன்னம் | 74 | 85% | 3 | 3% | 77 | 89% |
| முறைப்பாட்டைத் தமிழ்மொழியில் பதிவு செய்வதற்கான இயலுமை | 67 | 77% | 6 | 7% | 73 | 84% |
| முறைப்பாட்டுடன் இணைக்கப்பட்ட விண்ணப்பம் | 17 | 20% | 7 | 8% | 24 | 28% |
| அறிக்கையிடுவதற்கான / விளித்துரைப்பதற்கான முறைமைகள் நிலைப்படுத்தப்பட்டிருந்தமை | 34 | 39% | 32 | 37% | 66 | 76% |

அசம்பாவிம் பற்றி விளக்கிக் கூறுவதற்குப் போதிய நேரத்தை அனுமதித்தமை, பெண் பொலிஸ் அலுவலரொருவரின் பிரசன்னம், அலுவலர்களிடம் காணப்பட்ட மரியாதை மற்றும் கண்டபடி தீர்ப்பளிக்காத மனப்பாங்கு, முறைப்பாட்டு இலக்கமொன்றை வழங்குதல் அத்துடன் தமிழ்மொழியில் உரையாடுவதற்கும் முறைப்பாட்டைப் பதிவு செய்வதற்குமான இயலுமை என்பன பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினால் அதிகம் பாராட்டப்பட்ட பண்புக்கூறுகளாக இருந்தன. பால்நிலைச் சமத்துவம் பற்றி அலுவலர்களுக்குள்ள மனப்பாங்குகள் என்பது, பெரிதும் முன்னேற்றப்படவேண்டிய தேவையைக் கொண்டுள்ள விடயப்பரப்பாக உள்ளது. பேச்சுவார்த்தைகளுக்கூடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தல், நெருக்கடியான சம்பவங்களுக்கு உடனடி நடவடிக்கை எடுத்தல், சிக்கலான சம்பவங்களை சட்டச் செயன்முறையொன்றுக்கூடாக நெறிப்படுத்துதல் மற்றும் பெண்களின் உரிமைகள் பற்றிப் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு / சமூக சேவை நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தல்களைச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரினால் அதிகம் பாராட்டப்பட்ட நடவடிக்கைகளாக இருந்தன. அதேவேளை, தவறிழைத்தவரைத் தொடர்புகொள்ளுமாறு பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைக் கோருதல் மற்றும் குறைந்தளவிலான வெளிப்படைத்தன்மையுடன் தவறிழைத்தவர் மீதான பக்கச்சார்பு பற்றிய சந்தேகம் ஆகிய செயற்பாடுகள், பொலிஸாரினால் நிறைவேற்றப்பட்ட வரவேற்கப்படமுடியாத செயற்பாடுகளாக இருந்தன. 98 சதவீதத்தினராகவுள்ள பதிலளித்தவர்களுக்கிடையே, 60 சதவீதமானோர் பொலிஸாரிடமிருந்து முறைப்பாட்டு இலக்கமொன்றையும் வேறு விபரங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது பற்றி ஏலவே அறிந்திருந்தனர். அதேவேளை, எஞ்சிய 38 சதவீதமானோர் அவ்வாறு பெற்றுக்கொள்வது அவசியமானதும் முக்கியமானதுமாகும் என்பது பற்றி அறிந்திருக்கவில்லை.

## 3.4. பெண்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களினால்/சமூக சேவை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சேவைகள்

பதிலளித்தவர்களுள் 23 பேர் (22%) அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்து / சமூக சேவை நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுள்ளனர். பெறப்பட்ட நடத்துமுறை பற்றிய அவர்களின் பதில்கள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1 : பெண்களின் உரிமைகளுக்காகப் பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவனங்களினால்/சமூக சேவை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சேவைகள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| குறைவு | 1 | 4% |
| சாதாரணம் | 2 | 9% |
| நன்று | 8 | 35% |
| மிக நன்று | 12 | 52% |
| மொத்தம் | **23** | **100%** |

அரசசார்பற்ற நிறுவனம் / சமூக சேவை நிறுவனம் சார்ந்த துறையில் பணியாற்றுகின்ற நபர்களினால் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள்

**அட்டவணை 4.1.1 : அரசசார்பற்ற நிறுவனங்களினது / சமூக சேவை நிறுவனங்களினது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| அரசசார்பற்ற நிறுவனங்களின் / சமூக சேவை நிறுவனங்களின் சேவை பற்றிய பண்புக்கூறு | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 22 | 96% | 1 | 4% | 23 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 21 | 91% | 2 | 9% | 23 | 100% |
| சேவைகளுக்கு வழிகாட்டுவதற்கான / அவற்றை அணுகுவதற்கான முறைமை ஒன்று நிலைப்படுத்தப்பட்டுள்ளமை | 19 | 83% | 3 | 13% | 22 | 96% |
| உள ஆதரவு / உளவளத்துணை சேவைகள் வழங்கப்பட்டமை | 15 | 65% | 5 | 22% | 20 | 87% |
| அடுத்த படிமுறையைத் தொடர்வதற்கான வழிகாட்டல் வழங்கப்பட்டமை | 18 | 78% | 3 | 13% | 21 | 91% |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பாதுகாப்பானதும் சௌகரியமானதும் திருப்திகரமானதுமான சேவைகள் வழங்கப்பட்டமை | 19 | 83% | 2 | 9% | 21 | 91% |
| குடும்பத்துடனும் சமூகத்துடனும் ஒன்றிணைப்பதற்கெனப் பாதுகாக்கப்பட்டமை / உதவியளிக்கப்பட்டமை | 12 | 52% | 7 | 30% | 19 | 83% |
| வழக்கு நடவடிக்கைகள் பற்றிய சேவைகள் தவிர்ந்த வேறு சேவைகள் (வாழ்வாதாரம் முதலியன) வழங்கப்பட்டமை | 13 | 57% | 8 | 35% | 21 | 91% |
| தோதான சேவைகள் வழங்கப்பட்டமை | 17 | 74% | 3 | 13% | 20 | 87% |

அரசசார்பற்ற நிறுவனங்களினால் / சமூக சேவை நிறுவனங்களினால் வழங்கப்பட்ட அதிகமான பண்புக்கூறுகள் பதிலளித்தவர்களினால் வரவேற்கப்பட்டன. எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் பாதுகாப்பும் உதவியும் அளித்தல், அவர்களுடைய குடும்பங்களுடனும் சமூகத்துடனும் அவர்களை மீள ஒன்றிணைத்தல் மற்றும் வழக்கு நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு உதவியை அவர்களுக்கு வழங்குதல் ஆகியன தொடர்பில் இன்னமும் அதிகளவிலான முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன. அரசசார்பற்ற நிறுவனங்கள் / சமூக சேவை நிறுவனங்கள், குறிப்பிட்ட சேவைகளை வழங்குவதில் சிறப்புத்தேர்ச்சியைக் கொண்டுள்ளமையினால், பொலிஸ் மற்றும் சுகாதார சேவைகள் உள்ளடங்கலான வேறு அக்கறைகொண்டுள்ளோர்கள், அவர்களுடன் இணைந்து பணியாற்றுதலானது அவசியமாக அமைகின்றது. அத்துடன் இவ்வணுகுமுறை உயிர்தப்பிவாழ்வோரினால் மிகவும் பாராட்டப்பட்டது.

## 3.5. சட்டச் சேவைகள்

பதிலளித்தவர்களுள் 20 பேர் (19%), சட்டச் சேவைகளைப் பெற்றனர் என்பதுடன், நடத்துமுறை பற்றிய அவர்களின் ஒட்டுமொத்தமான திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.1 : சட்டச் சேவைகள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| சாதாரணம் | 3 | 15% |
| நன்று | 13 | 65% |
| மிக நன்று | 4 | 20% |
| மொத்தம் | 20 | 100% |

கீழுள்ள அட்டவணையில் சட்டச் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1.1 : சட்டச் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| சட்டச் சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 20 | 100% | 0 | 0% | 20 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 15 | 75% | 5 | 25% | 20 | 100% |
| வழக்கைச் செயன்முறைப் படுத்துவதற்குப் போதியளவு தகவல்கள் வழங்கப்பட்டமை | 13 | 65% | 7 | 35% | 20 | 100% |
| சட்டத்தரணிகளுக்கு / வழக்குரைஞர்களுக்கு வழக்கைப் பற்றிய எழுத்திலான தகவல்கள் வழங்கப்பட்டமை | 8 | 40% | 11 | 55% | 19 | 95% |
| நீதிமன்ற விபரங்கள் பற்றிய எழுத்திலான பிரதி வழங்கப்பட்டமை | 11 | 55% | 8 | 40% | 19 | 95% |
| எழுத்திலான வழக்கு விபரங்கள் வழங்கப்பட்டமை | 9 | 45% | 10 | 50% | 19 | 95% |
| வழக்கைப் பற்றிய தகவல்களை சட்டத்தரணி வழங்கியமை | 11 | 55% | 6 | 30% | 17 | 85% |
| சட்டத்தரணி, கட்சிக்காரரை வழக்குக்காகத் தயார்படுத்தியமை | 11 | 55% | 6 | 30% | 17 | 85% |
| வழக்கு விளக்கங்களின்போது சௌகரியம் காணப்பட்டமை | 13 | 65% | 3 | 15% | 16 | 80% |
| வழக்கைப் பற்றியதும், அவ்வழக்கு எச்சட்டத்தின் கீழ் கோப்பிடப்பட்டுள்ளது என்பது பற்றியதுமான தகவல்கள் வழங்கப்பட்டமை | 4 | 20% | 12 | 60% | 16 | 80% |
| வழக்கு நடவடிக்கைகளுக்கான சம்மதம் பெறப்பட்டமை | 16 | 80% | 1 | 5% | 17 | 85% |

பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோரிடம் வழக்கு நடவடிக்கைகளுக்கான சம்மதம் பெறப்பட்டமை, அவர்கள் மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை, அவர்களுடைய இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்டமை மற்றும் வழக்கைச் செயன்முறைப்படுத்துவதற்கென வழக்கு பற்றிய தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டமை போன்ற விடயங்கள், வழக்கு விளக்கங்களின்போது அவர்களைச் சௌகரியமடையச் செய்துள்ளன. அதேவேளை, வழக்குகளின் குறிப்பான சட்டம் மற்றும் வழக்காடுகின்ற சட்டத்தரணி / வழக்குரைஞர் தொடர்பான தகவல்கள் போன்ற, வழக்கு விபரங்களை வழங்குவதில் சில வெளிப்படையற்ற தன்மைகள் இருப்பதாகவும் தோன்றுகின்றன. 15 சதவீதமான சேவைநாடிகள் தங்களுக்கான சட்டத்தரணிகளைத் தாங்களே பெற்றுக்கொண்டனர். பொலிஸாரும் அரசசார்பற்ற நிறுவனங்கள் / சமூக சேவை நிறுவனங்களும் சேர்ந்து 40 சதவீதமான வழக்குகளுக்கு சட்டத்தரணி ஒருவரை ஏற்பாடு செய்திருந்தன. வழக்காடுவதற்கான சட்டத்தரணி ஒருவரை ஏற்பாடு செய்துகொடுக்கும் உதவியை வழங்குவதில், உறவினர்கள் 10 சதவீதமும், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருடபீடம் 5 சதவீதமும், கிராம உத்தியோகத்தர் அலுவலகம் 5 சதவீதமும் மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் 5 சதவீதமும் பங்களிப்புச் செய்திருந்தனர்.

## 3.6. மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்

பதிலளித்தவர்களுள் 25 பேர் (24%), மகளிர் அபிவிருத்தி அலுவலர்களிடமிருந்தான சேவைகளைப் பெற்றனர் என்பதுடன், அவ்வலுவலர்களுடன் தொடர்புபட்டுச் செயற்படும் பொழுது பெற்றுக்கொண்ட நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.1: மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| சாதாரணம் | 2 | 8% |
| நன்று | 15 | 60% |
| மிக நன்று | 7 | 28% |
| குறித்துரைக்கப்படவில்லை | 1 | 4% |
| மொத்தம் | 25 | 100% |

மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1.1: மகளிர் அபிவிருத்தி அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| மகளிர் அபிவிருத்தி அலுவலர்களது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 25 | 100% | 0 | 0% | 25 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 23 | 92% | 2 | 8% | 25 | 100% |
| நலன்புரி/ஏனைய வாழ்வாதார உதவி வழங்கப்பட்டமை | 23 | 92% | 2 | 8% | 25 | 100% |
| பிரச்சினைக்கான நெறிப்படுத்துகை/வழிகாட்டல்/ ஆற்றுப்படுத்துகைகள் வழங்கப்பட்டமை | 16 | 64% | 9 | 36% | 25 | 100% |

பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோரால் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் சேவைகள் வரவேற்கப்பட்டன. பதிலளித்தவர்களுள் 68 சதவீதமானோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குப் பதிலிறுப்பதிலான சேவைகளை வழங்குவதில் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் வகிபாகத்தைப் பற்றித் தாம் ஏலவே அறிந்திருந்ததாகவும், அவர்களுள் 28 சதவீதமானோர் மாத்திரம், அவ்வாறு தாம் அறிந்திருக்கவில்லை என்றும் சுட்டிக்காட்டினர். பதிலளித்தவர்களுள் சொற்ப அளவிலானோர் மாத்திரம் (10 சதவீதத்துக்கும் குறைவானோர்), நிவாரணப்பொருட்கள் மற்றும் பிள்ளைகளின் பாடசாலைக் கல்விக்கான உதவி போன்ற அவசரகால உதவிகளைப் பெற்றனர். எவ்வாறாயினும், இவ்வுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட அறிவுரை, நெறிப்படுத்துகை மற்றும் ஆற்றுப்படுத்துகைகள் என்பன பதிலளித்தவர்களினால் அதிகளவில் பாராட்டப்பட்டன.

## 3.7. நன்னடத்தை அலுவலர்கள்

பதிலளித்தவர்களுள் 8 பேர் (8%), தாம் நன்னடத்தை அலுவலர்களிடமிருந்தான சேவைகளைப் பெற்றமையை உறுதிப்படுத்தியதுடன், அவர்கள் பெற்றுக்கொண்ட நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.1 : நன்னடத்தை அலுவலர்கள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| சாதாரணம் | 2 | 25% |
| நன்று | 4 | 50% |
| மிக நன்று | 2 | 25% |
| மொத்தம் | 8 | 100% |

நன்னடத்தை அலுவலர்களின் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 7.1.1 : நன்னடத்தை அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| நன்னடத்தை அலுவலர்களது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 7 | 88% | 1 | 12% | 8 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 7 | 88% | 1 | 12% | 8 | 100% |
| வழக்கை நடாத்துவதற்கான நெறிப்படுத்துகை வழங்கப்பட்டமை | 4 | 50% | 1 | 13% | 5 | 63% |
| சேவைநாடிக்கு எழுத்திலான குறிப்புக்கள் வழங்கப்பட்டமை | 4 | 50% | 2 | 25% | 6 | 75% |

குறிப்பாக இரகசியத்தன்மையைப் பாதுகாத்தல் மற்றும் சேவைநாடிக்கு உரிய மரியாதை வழங்கப்படுதல் ஆகிய விடயங்களில் அக்கறையை வெளிப்படுத்தியமைக்காக நன்னடத்தை அலுவலர்களின் சேவைகள் பொதுவாகப் பாராட்டப்பட்டன. அவ்வலுவலர்களிடமிருந்து உதவி பெற்றவர்களாகக் காணப்படுகின்ற பதிலளித்தவர்களுக்கு இடையே 38 சதவீதமானோர் மாத்திரம் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளை விளித்துரைப்பதில் நன்னடத்தை அலுவலர்களின் வகிபாகம் குறித்து அறிந்திருந்தனர். ஆனால் அவர்களுள் பெரும்பான்மையானோர், அவ்வலுவலர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நேரம் வரை, அவ்வாறு அறிந்திருக்கவில்லை. வழக்கு நடவடிக்கைமுறைகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டலும் நெறிப்படுத்துகையும் வழங்கப்படுதல் மற்றும் எழுத்திலான குறிப்புக்கள் வழங்கப்படுதல் ஆகிய இரு விடயங்களும் சேவை வழங்குகையின் பயனுறுதன்மைக்காக முன்னேற்றம் காணப்படவேண்டியுள்ள சில முக்கிய பண்புக்கூறுகளாகும்.

## 3.8. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் / பிரதேச / மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள்

பதிலளித்தவர்களுள் 17 பேர் (16%), சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களிடமிருந்து அல்லது சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுள்ளனர். இத்தகைய அலுவலர்களிடமிருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 8.1: சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் / பிரதேச / மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்கள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| குறைவு | 1 | 6% |
| சாதாரணம் | 3 | 18% |
| நன்று | 8 | 47% |
| மிக நன்று | 5 | 29% |
| மொத்தம் | 17 | 100% |

சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 8.1.1 : சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 15 | 88% | 2 | 12% | 17 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 13 | 76% | 4 | 24% | 17 | 100% |
| குற்றவழக்குத்தொடுப்புக்கு ஆதரவு வழங்கப்பட்டமை | 10 | 59% | 4 | 24% | 14 | 82% |
| பின்தொடருகைக்காக எழுத்திலான ஆவணம் வழங்கப்பட்டமை | 6 | 35% | 7 | 41% | 13 | 76% |

இரகசியத்தன்மையைப் பாதுகாத்துக்கொண்டு, மரியாதையையும் தீர்ப்பளிக்காத மனப்பாங்கையும் வழங்குவதற்காக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்

வெளிக்காட்டிய கடமைப்பொறுப்பானது ஒட்டுமொத்தமாக பதிலளித்த சகலரினாலும் வரவேற்கப்பட்டது. குற்றவழக்குத்தொடுப்புக்கான ஆதரவு வழங்குதல் மற்றும் பின்தொடருகைகளுக்காக எழுத்திலான ஆவணம் வழங்குதல் ஆகிய விடயங்களைப் பொறுத்தமட்டில், அவை இன்னும் அதிகளவிலான மேம்படுத்துகைகளைத் தேவைப்படுத்தி நிற்கின்றன. பதிலளித்தவர்களுள் 10 சதவீதத்துக்கும் குறைவானோர், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களிடமிருந்து ஏதேனும் பொருள்வகையினதான உதவியைப் பெற்றுள்ளனர். எவ்வாறாயினும், பாடசாலைக் கல்வியைத் தொடர்தல், வழக்கு பற்றிய அறிவுரை மற்றும் அவர்களின் பிள்ளைகளுடைய உளவியல்சார் உளவளத்துணை என்பவற்றுக்காகப் பெற்ற உதவிகளை பதிலளித்தவர்களுள் 59 சதவீதமானோர் பாராட்டினர். பதிலளித்தவர்களிடையே 71 சதவீதமானோர், வழக்குச் செயன்முறைகளில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் வகிபாகத்தைப் பற்றி அறிந்திருந்தனர். எனினும் எஞ்சியோர், தாம் அவ்வலுவலர்களை அணுகிய அத்தகைய நேரம் வரை, அவ்வாறு அறிந்திருக்கவில்லை.

## 3.9. சமூக சேவை அலுவலர்கள்

பதிலளித்தவர்களுள் 7 பேர் (7%), சமூக சேவை அலுவலர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுள்ளனர். சேவை வழங்குகையின்போது அத்தகைய நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 9.1 : சமூக சேவை அலுவலர்கள்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| நன்று | 6 | 86% |
| மிக நன்று | 1 | 14% |
| மொத்தம் | 7 | 100% |

சமூக சேவை அலுவலர்களின் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 9.1.1: சமூக சேவை அலுவலர்களது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| சமூக சேவை அலுவலர்களது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 7 | 100% | 0 | 0% | 7 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 6 | 86% | 1 | 14% | 7 | 100% |
| வழக்கு நடவடிக்கைகளுக்கான உதவி வழங்கப்பட்டமை | 5 | 71% | 2 | 29% | 7 | 100% |
| பின்தொடருகைகளுக்காக எழுத்திலான ஆவணம் வழங்கப்பட்டமை | 5 | 71% | 2 | 29% | 7 | 100% |

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு மரியாதையையும் தீர்ப்பளிக்காத மனப்பாங்கொன்றையும் வெளிப்படுத்திய சமூக சேவை அலுவலர்களின் கடமைப்பொறுப்பானது, பதிலளித்தவர்களினால் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதேபோன்று, சேவை வழங்குகையின் ஏனைய பண்புக்கூறுகளும் அவர்களினால் வரவேற்கப்பட்டன. பதிலளித்தவர்களுள் ஒருவர் மாத்திரம் (14%) ஒரு சமூக சேவை அலுவலரிடமிருந்து பொருள்வகையினதான உதவியைப் பெற்றுள்ள அதேவேளை, ஏனைய 3 பேர் அறிவுரை மற்றும் ஆற்றுப்படுத்துகை சார்ந்த உதவியைப் பெற்றுள்ளனர். பதிலளித்தவர்களுள் 86 சதவீதமானோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான பதிலிறுத்தற் செயற்பாடுகளில் சமூக சேவை அலுவலர்களின் வகிபாகத்தைப் பற்றி ஏலவே அறிந்திருந்தனர். எனினும் எஞ்சிய 14 சதவீதமானோர், தாம் அவ்வலுவலர்களை அணுகிய அத்தகைய நேரம் வரை, அதுபற்றி அறிந்திருக்கவில்லை.

## 3.10. மத்தியஸ்த சபை

பதிலளித்தவர்களுள் 20 பேர் (19%), தாம் எதிர்நோக்கிய பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளுக்காக மத்தியஸ்த சபையின் சேவைகளைப் பெற்றுள்ளனர். குறித்த சபையின் நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 10.1 : மத்தியஸ்த சபை**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| குறைவு | 1 | 5% |
| சாதாரணம் | 6 | 30% |
| நன்று | 9 | 45% |
| மிக நன்று | 4 | 20% |
| மொத்தம் | 20 | 100% |

மத்தியஸ்த சபையின் சேவைகள் பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 10.1.1 : மத்தியஸ்த சபையினது சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| மத்தியஸ்த சபையினது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 18 | 90% | 2 | 10% | 20 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 10 | 50% | 10 | 50% | 20 | 100% |
| குற்றவழக்குத்தொடுப்புக்கு ஆதரவு வழங்கப்பட்டமை | 10 | 50% | 7 | 35% | 17 | 85% |
| பின்தொடருகைகளுக்காக எழுத்திலான ஆவணம் வழங்கப்பட்டமை | 9 | 45% | 6 | 30% | 15 | 75% |
| பிரச்சினையைக் கையாள்வதில் காணப்பட்ட சௌகரியம் | 13 | 65% | 7 | 35% | 20 | 100% |

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்படுவதற்காகக் காணப்பட்ட கடமைப்பொறுப்பானது, பதிலளித்தவர்களினால் பெரிதும் வரவேற்கப்பட்டன. குறிப்பாக இரகசியத்தன்மையின் பாதுகாப்பும், பின்தொடருகைகளுக்காக எழுத்திலான ஆவணம் வழங்கப்படுகின்றமையும் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்கான ஆதரவு வழங்கப்படுகின்றமையும் போன்ற ஏனைய பண்புக்கூறுகள், மிக அதிகளவிலான மேம்படுத்துகையைத் தேவைப்படுத்தி நிற்கின்றன. வழக்கு விசாரணைகள், நட்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிப்படுத்துகை மற்றும் வழக்குச் செயன்முறைகளின் மேம்பாட்டுக்கான அறிவுரை என்பன மத்தியஸ்த சபையிடமிருந்து பெறப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத சேவைகளாகக் காணப்பட்டன. பதிலளித்தவர்களுள் 60 சதவீதமானோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு பதிலிறுப்பதில் மத்தியஸ்த சபையின் வகிபாகத்தைப் பற்றி ஏலவே அறிந்திருந்தனர்.

எனினும் 35 சதவீதமானோர் அதுபற்றி அறிந்திருக்கவில்லை. பொது இடங்களில் வழக்கு விசாரணைகள் இடம்பெறுகின்றமையானது, பதிலளித்தவர்களுக்கிடையே காணப்பட்ட மிகவும் வரவேற்கமுடியாத செயற்பாடக அமைந்திருந்தது. விசாரணைக்கென எடுக்கப்படுகின்ற வேறு வழக்குகளைவிட பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய வழக்குகள் அதிகளவிலான கூருணர்வுத்தன்மையைக் கொண்டுள்ளபடியினால், பதிலளித்தவர்களுள் 35 சதவீதமானோர் இது குறித்து அசௌகரியங்களை உணர்வதாகத் தெரிவித்தனர். சில 20 சதவீதமான வழக்குகள், சான்றுகள் இல்லாமையின் காரணமாக மேற்கொண்டு தொடர்ந்து நடாத்தப்படவில்லை.

## 3.11. காதி நீதிமன்றம்

பதிலளித்தவர்களுள் 27 பேர் (25%), காதி நீதிமன்றங்களின் சேவைகளைப் பெற்றுள்ளனர். குறித்த நீதிமன்றத்தின் நடத்துமுறை பற்றிய அவர்களின் திருப்தி மட்டம் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை 11.1 : காதி நீதிமன்றம்**

| திருப்திகரத்தன்மையின் அளவு | நிகழ்வெண் | % |
|---|---|---|
| குறைவு | 7 | 26% |
| சாதாரணம் | 9 | 33% |
| நன்று | 10 | 37% |
| மிக நன்று | 1 | 4% |
| மொத்தம் | 27 | 100% |

காதி நீதிமன்றத்தின் சேவை வழங்குகை முறைமை பற்றிய வேறுசில பண்புக்கூறுகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 11.1.1 : காதி நீதிமன்றத்தின் சேவை வழங்குகையின் பயனுறுதன்மை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அளித்த பதில்கள்**

| காதி நீதிமன்றத்தினது சேவைகள் பற்றிய பண்புக்கூறுகள் | சாதகமான பதில் | % | சாதகமற்ற பதில் | % | மொத்த பதில் | % |
|---|---|---|---|---|---|---|
| மரியாதையுடனும் தீர்ப்பளிக்காத மனப்பாங்குடனும் நடாத்தப்பட்டமை | 18 | 67% | 9 | 33% | 27 | 100% |
| இரகசியத்தன்மையின் பாதுகாப்பு | 11 | 41% | 16 | 59% | 27 | 100% |
| வழக்கு நடவடிக்கைகளுக்கான ஆதரவு வழங்கப்பட்டமை | 12 | 44% | 13 | 48% | 25 | 93% |
| பின்தொடருகைகளுக்காக எழுத்திலான ஆவணம் வழங்கப்பட்டமை | 10 | 37% | 16 | 59% | 26 | 96% |
| பிரச்சினையைக் கையாள்வதில் காணப்பட்ட சௌகரியம் | 10 | 37% | 14 | 52% | 24 | 89% |

மரியாதை அளித்தல் மற்றும் தீர்ப்பளிக்காத மனப்பாங்கொன்றை வழங்குதல் என்பன பற்றிய காதி நீதிமன்றத்தின் கடமைப்பொறுப்பானது, பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோரால் (67%) வரவேற்கப்பட்டது. ஆனால், அதன் சேவை வழங்குகை தொடர்பில் காணப்படுகின்ற வேறு பண்புக்கூறுகள் மேம்படுத்தப்பட வேண்டியவையாக அமைந்துள்ளன. பதிலளித்தவர்களுள் 78 சதவீதமானோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கான பதிலிறுத்தற் செயற்பாடுகளில் காதி நீதிமன்றம் கொண்டுள்ள வகிபாகத்தைப் பற்றி அறிந்திருந்தனர். தனிப்பட்ட அறிவுரைகளை வழங்குதல் மற்றும் உளவியல்சார் உளவளத்துணைக்கான ஆற்றுப்படுத்துகைகள் என்பன இந்நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட கண்ணுக்குப் புலப்படாத சேவைகளாகக் காணப்பட்டன. கணவன்மாருக்குப் பக்கச்சார்பாகச் செயற்படுகின்றனர் என்ற சந்தேகம், முறையான பராமரிப்பு உடன்பாடுகள் பற்றித் தீர்மானிக்காது பிரிந்துவாழ்வதற்கான அல்லது விவாகரத்துக்கான முன்னுரிமையை அளித்தல், அந்தரங்கத்தன்மை இல்லாமை மற்றும் வழக்கு விசாரிக்கப்படும்போது அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடுதல் என்பன காதி நீதிமன்றத்தின் சேவை வழங்குகை மீது முன்வைக்கப்படுகின்ற முக்கிய விமர்சனங்களாகும்.

## 3.12. பாதுகாப்பு இல்லம் பற்றிய சேவையானது

பாதுகாப்பு இல்லம் பற்றிய சேவையானது, சிறுவர் துஷ்பிரயோகத்துக்குப் பலியான ஒரேயொரு நபரினால் மாத்திரமே அணுகப்பட்டதுடன், அச்சேவை திருப்திகரமானதாகவும் அமைந்திருந்தது.

## 3.13. வேறு தகவல்கள் / கண்டறிதல்கள்

**அட்டவணை 13.1 : பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் விருப்பங்கள்**

| விருப்பம் | நிகழ்வெண் | % |
|---|---|---|
| பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள ஏனையவர்களை செயலூக்கப்படுத்துவதற்கு விரும்புகின்றேன் | 72 | 68% |
| பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள ஏனையவர்களை செயலூக்கப்படுத்துவதற்கு விரும்பவில்லை | 10 | 9% |
| பதில் அளிக்கப்படவில்லை | 24 | 23% |
| மொத்தம் | 106 | 100% |

பதிலளித்தவர்களுள் 72 பேர் (68%), இயைபான அக்கறைகொண்டுள்ளோருக்குத் தமது அனுபவங்களை அறிக்கையிடுவதன் மூலம், அதேமாதிரியான பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகளைக் கொண்டுள்ள வேறு சமூகத்தவர்களை செயலூக்குவிப்பதற்கு விரும்பினர். எனினும் 10 பேர் (9%), அவ்வாறு ஏனையவர்களைச் செயலூக்குவிப்பதற்கு விரும்பவில்லை என்பதுடன் 24 பேர் (23%), கேள்விக்கு பதிலளிக்கவில்லை. ஏனையவர்களைச் செயலூக்கப்படுத்துவதற்காகக் கூறப்பட்ட முதன்மையான காரணம் யாதெனில், இச்சேவை வழங்குகை முறைமைகள் நீதியைப் பெற்றுக்கொள்வதற்கான உதவியொன்றாகத் தொழிற்படுவதுடன் அவர்களின் உயிர்வாழ்தலுக்குமானவை என்ற நம்பிக்கையாகும் எனக் குறிப்பிடப்பட்டது. அதேவேளை, ஏனையவர்களைச் செயலூக்கப்படுத்தக் கூடாது என்பதற்கு வழங்கப்பட்ட காரணங்களாக, குற்றவழக்குத் தொடுப்பதிலான தாமதங்கள் மற்றும் அசௌகரியத்தை ஏற்படுத்துகின்ற அனுபவங்கள் (குறிப்பாக காதி நீதிமன்றங்களில்) போன்றன அமைந்திருந்தன. நேர்காணலில் பதிலளித்தவர்களுள் பெரும்பான்மையானோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கும் சேவை வழங்குகை முறைமைகளுக்கும் மிகச்சிறந்த முறையில் உதவுவதற்கென பொலிஸ் சேவைகளிலும் காதி நீதிமன்றங்களிலும் மேற்கொள்ளப்படவேண்டிய மாற்றங்களை முன்மொழிந்தனர்.

## ஒட்டுமொத்த கண்டறிதல்கள்:

நேர்காணல் செய்யப்பட்ட 106 பேர்களுள், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள 105 பேர் சேவைகளை அணுகினர். உயிர்தப்பி வாழ்வோருள் பெரும்பான்மையானோர் தங்களுக்கேற்பட்ட அசம்பாவிதங்களை அறிக்கையிடுவதன் மூலம் சுட்டிக்காட்டியவாறு பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள் குறித்து நன்கறிந்திருந்தனர் என்பதையும், சேவை வழங்குகை மட்டத்தைப் பொறுத்தவரை அவர்கள் திருப்தியடைந்தனர் எனக் கூறியமையையும் ஒட்டுமொத்த நேர்காணல் செயன்முறையானது வெளிப்படுத்தியது. எவ்வாறாயினும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள குறித்தசில எண்ணிக்கையினர், பல துறைகளிலும் அவர்கள் பெற்றுக்கொண்ட சேவைகள் தொடர்பில் திருப்தியற்றவர்களாகக் காணப்பட்டனர். இது, குறித்த துறையொன்றிலான சேவை வழங்குகையின்மை அத்துடன்/ அல்லது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு மரியாதை வழங்கப்படாமை, அதேபோன்று பால்நிலைச் சமத்துவம் தொடர்பிலுள்ள மறைமுக மனப்பாங்குகள் மற்றும் சேவை வழங்குகைப் பொறிமுறைகளில் பொதிந்துள்ள நடத்தை மற்றும் பாரபட்ச நடைமுறைகள் போன்ற அவர்களின் தனிவேறான தேவைப்பாடுகளின் மீது முக்கியமாகத் தங்கியிருந்தது.

## — அத்தியாயம் 4 —

# நேர்காணல் வினாக்கொத்துக்களுக்கான பதிலிறுத்தல்களுக்குப் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களின் பின்னூட்டம்

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருடனான நேர்காணலின் மேல்நோக்குகைகள், அத்தகைய வன்முறை பற்றிய சேவை வழங்குகைக்கான அவர்களின் பதிலிறுத்தல்கள் தொடர்பில் அந்தந்தச் சேவைத் துறைகளுடன் பகிரப்பட்டன. பதிலிறுத்தல்கள் மற்றும் சேவைகள் பற்றிய அவர்களின் அபிப்பிராயங்களும் பின்னூட்டமும் கீழே நிரற்படுத்தப்பட்டுள்ளன.

**சுகாரதாரச் சேவை:** ஆய்வின் கண்டறிதல்கள் சாதகமானவை, சாதகமற்றவை மற்றும் பதிலற்றவை என மூன்று வகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. உயிர்தப்பிவாழ்பவர் பதிலளிக்காதிருப்பதற்கான உரிமையைக் கொண்டிருந்தார். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் தற்போது 'மித்துரு பியச' அல்லது 'நட்பு நிலையம்' என்பதாக மாற்றப்பட்டுள்ளது. உளச்சுகாதாரக் கூறு, பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு தனியுதவியல்லாமல் உதவிசார் சேவைகளை வழங்குகின்றது. பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கான நோக்கங்கள், ஆற்றுப்படுத்தல்கள் அத்துடன் / அல்லது உளவளத்துணை என்பவற்றை அடையாளம் காண்பதற்கு அது அடிப்படையில் பொறுப்பாக உள்ளது.

வைத்தியசாலை - பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம்: பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்திலிருந்து மூன்று அலுவலர்கள் மேற்குறிப்பிடப்பட்ட பகிர்வு அமர்வில் (sharing session) பங்குபற்றினர். தாம் பணியாற்றுகின்ற குறித்த கருமபீடங்களுக்கு வைத்தியசாலையினுள் எவ்வித உத்தியோகபூர்வ அங்கீகாரமும் இல்லையென்றும், அநேகமான தனிநபர்கள் கருமபீடத்தின் பணி பற்றி அறிந்திருக்கவில்லை என்றும் அவர்கள் அனைவரும்

கூறினர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்பவர் எவரும் அவர்களை எப்போதேனும் நேரடியாக அணுகியிருக்கவுமில்லை. ஆனால் மருத்துவர்கள், முக்கியமான சம்பவங்களை பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடங்களுக்கு ஆற்றுப்படுத்தினர். அக்கருமபீட அலுவலர் சமுகமளித்திருக்க வேண்டுமென உயிர்தப்பிவாழ்பவர் ஒருவர் கோரினால், பரிசோதனை மற்றும் சிகிச்சையின்போது மட்டுமே மருத்துவர் இதனை அனுமதிப்பார். அன்றேல் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீட அலுவலர்கள் உயிர்தப்பி வாழ்வோருக்கு மேற்கொண்டு உதவுவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இருக்கவில்லை. பொலிஸாரும் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் பற்றியும் உயிர்தப்பிவாழ்வோருக்கு அறிவிக்கின்றனர். பின்னர் குறித்த கருமபீட அலுவலர்கள் உயிர்தப்பிவாழ்வோருக்கு மேற்கொண்டு உதவுவதற்கென கள விஜயங்களை மேற்கொள்கின்றனர். எவ்வாறாயினும் பின்தொடர் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் சம்பவங்களைக் கண்காணிப்பதற்கும் முறையான பொறிமுறை எதுவும் இல்லையெனத் தோன்றுகின்றது. இது பயனுள்ள சேவை வழங்குகைக்குப் பாரிய சவாலாக அமைகின்றது. உயிர்தப்பிவாழ்வோர், பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் பற்றித் திருப்திப்படாமைக்கும் அதன் சேவைகள் தொடர்பில் நம்பிக்கையற்று இருக்கின்றமைக்கும் இது சாத்தியமானவொரு காரணமாக இருக்கலாம். இக்கருமபீட அலுவலர்களும் கள விஜயங்களை மேற்கொள்கின்றமை சிலவேளைகளில் சவால்களாக அமைகின்றன. அத்தகைய கள விஜயங்களை மேற்கொள்ளும் பெண்கள் தரவுகளைச் சேகரிப்பது மட்டுமன்றி, வைத்தியசாலையில் அமைந்துள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்திலிருந்து வந்து பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்குச் சேவைகளை வழங்குவதற்கென அங்குள்ளனர் என்பதை இத்தகைய உயிர்தப்பிவாழ்வோர் அறியாதிருக்கலாம்.

**அரசசார்பற்ற நிறுவனங்களும் சமூகமட்ட நிறுவனங்களும்:** நான்கு அலுவலர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். அரசசார்பற்ற நிறுவன அலுவலர்கள், அவதானிப்பாளராகச் செயலாற்றுவதற்குத் தமக்கு காதி நீதிமன்றத்தில் இடவசதி வழங்கப்பட்டுள்ளதெனக் கூறினர். காதிநீதிபதி, புலனாய்வு செய்வதற்கென அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு சம்பவங்களை அறிவிக்கின்றார். குறிப்பிட்ட சம்பவங்களுக்காக அரசசார்பற்ற நிறுவன அலுவலர்களின் அக்கறைகளையும் பெற்றுக்கொள்கின்றார். எவ்வாறாயினும் இச்செயன்முறை அனைத்துக் காதி நீதிமன்றங்களிலும் காணப்படவில்லை. அநேகமான காதி நீதிமன்றங்கள் பெண் உத்தியோகத்தர்களைச் சம்பந்தப்படுத்துவதில்லை. இதனால் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் தமது பிரச்சினைகளைப் போதியளவில் பகிர்ந்துகொள்வதற்குத் தமக்குப் பாதுகாப்பான இடமொன்றாக இந்நீதிமன்றத்தைப் பெரும்பாலும் உணர்வதில்லை. அரசசார்பற்ற நிறுவனங்களின் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை

அரசாங்கத்துறைகளுடன் ஒப்பிடுகையில் பொதுவாக உயர்ந்த மட்டத்தில் உள்ளது. ஆனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் உயிர்தப்பிவாழ்வோரின் குறித்த சில தேவைகளை விளித்துரைப்பதற்கான உரிய ஏற்பாடுகளைத் தொடர்ந்தும் கொண்டிருக்கவில்லை. அத்தகைய உயிர்தப்பிவாழ்வோருள் அநேக சதவீதத்தினர் தமது பொருளாதாரத் தேவைகளை அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அநேகமான அரசசார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாணைகள் வாழ்வாதார உதவிக்காக அல்லது சுய வருமான உதவிக்காகக் குறிப்பிட்ட முறையில் ஏற்பாடு செய்வதில்லை. இது தொடர்பாக பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் இந்த உதவி விடயங்களை வழங்குவதற்கு அத்தகைய சம்பவங்களை மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கும் சமூகசேவை அலுவலர்களுக்கும் ஆற்றுப்படுத்துகின்றன. இது வழமையாக நேரவிரயமுள்ள நடைமுறையாக உள்ளதுடன், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்யவும் மாட்டாது. அநேகமான அரசாங்க அலுவலர்களின் மனப்பாங்குகள் பால்நிலைசார் கூருணர்வைக் கொண்டிருக்கவில்லை. அதனால் இது தொடர்பில் ஒத்துழைப்புடன் பணியாற்றுவது அரசசார்பற்ற நிறுவன அலுவலர்களுக்குச் சவாலாக அமைந்தது.

நன்னடத்தை அலுவலர்: நன்னடத்தை அலுவலர்கள், தேவைக்கிணங்க பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உளவளத்துணையை வழங்குகின்றனர். சம்பவங்கள் சட்ட நடவடிக்கைக்காகச் சட்ட உதவி ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கெதிராகக் குற்றவழக்குத்தொடுப்பதில் சம்பந்தப்பட்டுமுள்ளனர். இனங்காணப்பட்ட தேவைகளின் அடிப்படையில் நன்னடத்தை அலுவலர்கள், தாம் மேற்கொண்ட சேவைகளுக்காக சம்பவ மாநாடுகளையும் சம்பவ ஆற்றுப்படுத்தல்களையும் நடாத்துகின்றனர். சிரேஷ்ட மட்டத்திலுள்ள நன்னடத்தை அலுவலர்கள் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களை முகாமை செய்வதற்கான நுட்பத்திறன்களைக் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் புதிதாக நியமிக்கப்பட்ட நன்னடத்தை அலுவலர்கள் அத்தகைய பயிற்சிகளைக் கொண்டிருப்பதில்லை. அவர்கள் தமது திறன்களை விருத்திசெய்துகொள்வதற்கான தேவையுள்ளது. உயிர்தப்பிவாழ்வோருக்கு நன்னடத்தை அலுவலர்களினால் எழுத்திலான ஆவணங்கள் வழங்கப்படாமையினால் சேவை வழங்குகை தொடர்பாக சகல சேவைநாடிகளின் தேவைகளையும் முழுமையாகத் திருப்தி செய்வதற்கு சில வேளைகளில் நன்னடத்தை அலுவலர்களுக்கு இயலாதுள்ளது.

**சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள்:** 15 சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் பகிர்வு அமர்வுகளுக்கு வருகைதந்தனர். அவர்களது சேவைகளின் மதிப்பீடொன்றாகக் கண்டறிதல்கள் அமைந்திருந்தன என்றும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் அத்தகைய சேவைகளின் வழங்குகையை

அணுகுவது தொடர்பில் அவர்களின் அனுபவங்களைக் கூறியுள்ளமைபற்றித் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டனர். இலகுவில் பாதிப்புறும் குடும்பங்களை அடையாளம் காணுதல், எவ்வகையினதுமான வன்முறைக்கெதிராகச் சிறுவர்களைத் தடுத்தலும் பாதுகாத்தலும் மற்றும் சிறுவர்களின் உரிமைகளை மேம்படுத்தல் போன்ற வகிபாகங்களை சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் கொண்டுள்ளனர். சிறுவர்கள் பற்றிய இடையீடுகள் (interventions) பெண்களையும் தொடர்புபடுத்தலாம். பெண்களுக்கெதிரான வன்முறைப் பிரச்சினைகளில் அநேகமாக சிறுவர்கள் மறைமுகமாகப் பாதிக்கப்படுகின்றமையினால் அவை தவிர்க்கப்படாது விளித்துரைக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பிரச்சினைகள், சிறுவர் உரிமைகளின் பாதுகாப்பினதும் மேம்படுத்துகையினதும் அத்துடன் நடைபெற்றுக்கொண்டிருக்கும் புனர்வாழ்வளித்தல் முயற்சிகளினதும் சார்பில் அமைகின்ற இடையீடொன்றுக்கு இன்றியமையாதவையாகக் காணப்படுகின்றன. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற வீடுகளுக்கான கள விஜயங்கள் குடும்பத்திலுள்ள பெண்களுக்கு மேலதிகப் பிரச்சினைகளை உருவாக்கியுள்ள சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன. இவை சிறுவர்களின் புனர்வாழ்வுக்காகத் தொடர்ச்சியான கண்காணிப்பை மேற்கொள்வதற்கான சவால்களாக அமைந்துள்ளன. சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் பணியானது, பல்வேறு சேவை வழங்குநர்களிடம் பிரச்சினைகளை அறிவித்து, அப்பிரச்சினைகளைக் கையாள்வதில் அவர்களின் உதவியைப் பரிந்துகேட்பதற்குத் தமது ஒருங்கிணைப்பையும் ஒத்துழைப்பையும் வழங்குவதனை உட்படுத்துகின்றது. எவ்வாறாயினும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் கண்ணோட்டத்திலிருந்து, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள் இரகசியத்தன்மையைக் கடைபிடிப்பதில்லை என்றும் அவர்களின் பிரச்சினைகளை ஏனைய அலுவலர்களுடன் பரந்தளவில் பகிர்ந்துகொள்கின்றனர் என்றும் தோன்றுகின்றது. இது பெரும்பாலும் பிணக்கொன்றைச் சவாலுக்குட்படுத்துவதாகவும் அவர்களின் பணிப்பாணைக்கு இணங்கிய வகிபாகமொன்றை வகிப்பது தொடர்பில் நேரவிரயமுள்ளதாகவும் இருந்துவந்துள்ளது. இப்பல்துறைசார் குழுவினரின் பணிப்பொறிமுறையினுள் உரிமைகளின் அடிப்படையிலான அணுகுகையுடன் சிறுவர்களின் பிரச்சினைகளை விளித்துரைப்பதற்கு அத்தகைய கருவி எதுவும் இல்லை. சம்பவ முகாமைக்கான கருவிகள் இருக்கின்றபோதிலும் அவை, சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் பணியை அவர்கள் பயனுற நிறைவேற்றுவதற்கு வழிகாட்டுவதில்லை. உதாரணமாக சிறுவர் துஷ்பிரயோக சம்பவமொன்றின்போது பாதுகாப்பு இல்ல வசதி தேவையாக உள்ளது. சம்பவ முகாமையினூடாக இதனை விளித்துரைக்க முடியும். எவ்வாறாயினும் அத்தகைய பாதுகாப்பு இல்லமெதுவும் இல்லை. அதேபோன்று சிறுவனொருவனுக்குப் பயனுள்ள புனர்வாழ்வளிப்புடன் தொடர்புபட்ட இவை போன்ற பல பிரச்சனைகள் உள்ளன.

**பொலிஸார்:** பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் பொலிஸாரின் சேவைகள் பற்றி நேர்மறையான அல்லது எதிர்மறையான கருத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால் அதிக வேலைப்பளு காரணமாகவும் பெண்கள் மற்றும் சிறுவர் பிரிவில் போதிய எண்ணிக்கையிலான அலுவலர்கள் இல்லாமை காரணமாகவும் இவ்விடயங்களைக் கையாள்வதில் பொலிஸாருக்குச் சவால்கள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் அலுவலர்களுக்குக் கூடுதலான வேலைப்பளு இருக்கின்றது. குடும்பப் பிணைப்பு என்ற அக்கறை காரணமாக உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்காமல் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், பேச்சுவார்த்தைக்கும் மத்தியஸ்தத்துக்குமான சாத்தியங்களை உச்சளவினதாக ஆக்குவதற்குப் பொலிஸார் சகல முயற்சிகளையும் மேற்கொள்கின்றனர். குடும்ப வன்முறைச்செயல் தடுப்புச்சட்டம், மிகத்தீவிரமான வன்முறைச் சம்பவங்களில் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. கணவனுக்கு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு, தமது வீடுகளையும் பிள்ளைகளையும் அணுகுவதனைத் தடைசெய்த அல்லது மட்டுப்படுத்திய வகையிலான பாதுகாப்புக் கட்டளை வழங்கப்பட்டபோது வன்முறை அதிகரித்ததென பொலிஸார் கூறினர். பொலிஸாரின் நடவடிக்கைமுறைகளுக்கிணங்க எல்லாச் சம்பவங்களும் பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும், குற்றவழக்குத் தொடுப்பிலும் நீதிமன்றங்களுக்கான விஜயங்களிலும் தொடர்புபட்டுள்ள இயைபான பொலிஸ் அலுவலர்களுக்கும் அறிக்கையிடப்படுதல் வேண்டும். சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களைப் போன்று, பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் பற்றிய தகவல்கள் பொலிஸ் நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலருக்கும் ஏனைய பொலிஸ் அலுவலர்களுக்கும் வழங்கப்படவேண்டிய தேவையுள்ளது. ஆனால் தனது இரகசியத்தன்மை மீறப்பட்டு தன்னுடைய சம்பவம் பற்றிய விபரங்கள் ஏனைய அலுவலர்களுடன் பகிரப்பட்டுள்ளதென உயிர்தப்பிவாழ்பவர் கருதலாம்.

பொலிஸ் நிலையங்களில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் கருமபீடத்துக்காக பெயர்குறிக்கப்பட்ட தனிவேறான இடம் என்பது பாரிய சவாலாக உள்ளது. ஏனெனில் பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் அத்தகையதோர் இடம் இல்லை. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் ஒரு முறைப்பாட்டைச் செய்யும்போது, பெண்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய கருமபீட அலுவலர்கள் அவ்விடத்துக்கு விஜயம்செய்து நிலைமையை மதிப்பீடு செய்வதற்கான வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. இந்நிலைமை சம்பவங்களுக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கான மேலதிக சவாலொன்றையும் உருவாக்குகின்றது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் மிகச்சிறிய பிரச்சினைகளுக்காகவும் அடிக்கடி முறைப்பாடுகளைச் செய்கின்றமையினால், அவர் இவ்விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதில்லை என பெண்கள் மற்றும் சிறுவர்கள் பற்றிய கருமபீட அலுவலர் ஒருவர் கூறினார். பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவத்தைக் கையாளும்போது இவ்வகையினதான

மனப்பாங்குகள் உயிர்தப்பிவாழ்வோருக்கு அவமரியாதையானதாகவும் முற்கூட்டித் தீர்ப்பளிப்பதாகவும் உள்ளன.

**காதி நீதிமன்றம்:** காதி நீதிமன்றத் தீர்ப்புக்களினால் ஒருபோதும் இரு தரப்பினரையும் திருப்திப்படுத்த முடியாது. உதாரணமாக மனைவியொருவர் விவாகரத்துக்காக வழக்குக்கோப்பிட்டு 25,000/- ரூபா நட்டஈட்டைக் கோரினால், காதி நீதிமன்றம் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரினதும் தேவைப்பாடுகள் பற்றிய விசாரணைப் பகுப்பாய்வொன்றை நடாத்தி அத்தேவைப்பாடுகளின் அடிப்படையிலான ஒரு தொகை பற்றி முடிவு செய்யும். இது ஒரு தரப்பினரைத் திருப்தி செய்யலாம். மறு தரப்பையல்ல. காதி நீதிபதிகள் சட்டத்தையும் ஒழுங்கையும் நடைமுறைப்படுத்துவதற்கான போதிய அதிகாரத்தைக் கொண்டிருப்பதில்லை. காதி நீதிமன்றங்கள் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கென நீதியமைச்சு அவற்றின் பணிப்பாணையை மீளாய்வுசெய்து புதிய கொள்கை மாற்றங்களைச் செய்தல் வேண்டும்.

**சட்ட உதவி ஆணைக்குழு:** முக்கியமாக கல்வியறிவற்ற தனிநபர்களே இன்றுவரை சட்ட உதவி ஆணைக்குழுவின் சேவைகளை அணுகியுள்ளனர் என்பதுடன், அதன் அலுவலர்கள் அத்தகையவர்களுக்கு நடவடிக்கைமுறைகளைப் பற்றி விளக்கிக்கூறியுமில்லை. உயிர்தப்பிவாழ்வோருள் அநேகமானோர் உரிய சட்டத்தையும் குறிப்பிட்ட சட்டங்களையும் போதியளவில் விளங்கிக்கொள்ளாமையினால் எச்சட்டத்தின் கீழ் வழக்குகள் கோப்பிடப்படுகின்றன என்பதை விளங்கிக்கொள்வது அவர்களுக்குச் சிரமமாக இருந்தது. சட்ட உதவி ஆணைக்குழு, வழக்குக்கான அடுத்த அழைப்புத் திகதியை உயிர்தப்பிவாழ்வோருக்கு வழமையாக அறிவிக்கின்றது. ஆனால் அதுபற்றிய இற்றைப்படுத்தல்களையோ அல்லது விபரமான வழக்குத் தகவல்களையோ மிக அரிதாகவே அவர்களுக்கு வழங்குகின்றது. சேவைநாடி, குறிப்பிட்ட கோரிக்கையொன்றைச் செய்தால் மாத்திரமே எழுத்து வடிவிலான விபரங்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படும். அன்றேல் வழக்கு விபரங்கள் எவையும் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

**மத்தியஸ்த சபை:** நேர்காணல் செய்யப்பட்ட பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் அரைவாசிப்பேர், இரகசியத்தன்மை ஒரு பிரச்சினையாக இருந்ததெனக் கூறினர். இரகசியத்தன்மையானது மத்தியஸ்தத்திற்கான பிரதான நன்னெறியாக உள்ளதென்றும் சகல உறுப்பினர்களும் அதுபற்றி விழிப்பாக உள்ளனர் என்றும் சபை உறுப்பினர் ஒருவர் உறுதியாகக் கூறினார். சம்பவம் பற்றிய கலந்துரையாடல்கள் பெரும்பாலும் பாடசாலைகளிலும் பொதுக்கட்டடங்களிலும் இடம்பெறுகின்றமையினால் மற்றவர்கள் அவதானம் செலுத்தி விபரங்களைக் கேட்டுக்கொண்டிருப்பதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இது இரகசியத்தன்மையைப் பேணுவதற்கான சவாலாக அமைகின்றது. காத்தான்குடி மத்தியஸ்த சபை உறுப்பினர்கள், மத்தியஸ்தத்தை நடாத்துவதற்காகத் தமக்கு தனிவேறான இடமொன்றுள்ளதாகக் கூறினர். ஆனால் ஏனைய மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் தமக்குத் தனிவேறான இடம் இருக்கவில்லை என்றும், பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக்

கையாளும்போது அந்தரங்கத்தன்மை தொடர்பிலான பிரச்சினைகள் இருந்தன என்றும் கூறினர். அடுத்த படிநிலைகளுக்காக சேவைநாடிகளுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதலும், பின்தொடர் நடவடிக்கைகளும், உதவியும் மிகச்சிறந்தவையாக இருந்தன என மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் கூறினர். சௌகரியம் பற்றிய பிரச்சினைகளின் மட்டங்கள் தெளிவாக இருக்கவில்லை. ஆம் அல்லது இல்லை என்ற பதிலைக்கொண்ட வினாவைக் கேட்பதற்குப் பதிலாக, உயிர்தப்பிவாழ்வோர் எவ்வகையான சௌகரிய மட்டத்தை உணர்ந்தனர் அல்லது உணரவில்லை எனக் கேட்கப்பட்டிருப்பின், சிறந்த முறையிலான புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருந்திருக்கும்.

**மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள்:** இக்கலந்துரையாடலுக்கு 14 மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் வருகை தந்தனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகைகளை அணுகுவதில், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் அனுபவம் குறித்து அவர்களினால் ஆவணப்படுத்தப்பட்டவை சரியானவை என மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் பகிர்ந்துகொண்டதுடன், கண்டறிதல்களையும் ஏற்றுக்கொண்டனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் தமக்கான சேவைகளை அணுகும்போது மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், வளப்பற்றாக்குறை, அவசரகால உதவிவசதிகளின்மை, வாழ்வாதார வசதிகளின்மை மற்றும் குறித்தசில சந்தர்ப்பங்களில் மிகையாகச் செயலாற்றுவதற்கான அதிகாரமின்மை போன்ற குறிப்பிட்ட சில சவால்களுக்கு முகங்கொடுத்தனர். அநேகமான பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு நிதியுதிவி எதிர்பார்க்கப்படுவதுடன், அவர்களின் பிரச்சினைகளுள் பல நிதிசார் பிரச்சினைகள் பற்றியனவாகவும் காணப்பட்டன. தமது பிரச்சினைகள் உடனடியாகத் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்றும், தமக்கு முறையான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் உயிர்தப்பிவாழ்வோர் எதிர்பார்க்கின்றனர். ஆனால் வழக்கமாக அத்ததைகய நிலைமை சம்பவங்களில் காணப்படுவதில்லை. தொடர்ச்சியான உதவிகள் தமக்கு வழங்கப்பட்டு தமது பிரச்சினைகள் எல்லாம் தீர்த்துவைக்கப்படும் என்ற ஓரளவு பிழையான கற்பிதத்துடனேயே உயிர்தப்பிவாழ்வோர் ஒவ்வொருவரும் சேவை வழங்குகை முறைமைகளை அணுகுகின்றனர். உண்மையில் இது அவ்வாறல்ல; அவ்வாறு இருக்கவும் முடியாது. மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் தமது பதவியின் வரையறைகளினுள் இவ்விடயங்களை ஒருங்கிணைக்கவும், ஆற்றுப்படுத்தவும், வசதிப்படுத்தவும் மற்றும் அவற்றுக்கு வழிகாட்டுதல் வழங்கவும் முடியும். பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கான குற்றவழக்குத்தொடுப்பில் மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் சம்பந்தப்பட்டிருக்க முடியாது. இறுதியாக, பரிந்துரையொன்று சேர்க்கப்பட வேண்டுமென ஒருசில தனிநபர்கள் கோரினர். அதாவது ஆதரவுதேவைப்படுகின்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவுவதற்கென உணவு, உடை, பிரயாணச் செலவுகள் மற்றும் உணவுசாராப் பொருட்கள் போன்ற அவசரகால உதவிகள், நிதிசார் மற்றும் வள ஆக்கக்கூறுகள் போன்றவற்றைக் குறித்தொதுக்குதல் வேண்டும் என்பதே அப்பரிந்துரையாகும்.

**சமூகசேவை அலுவலர்கள்:** சமூகசேவைத் துறையின்கீழ் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவியளிப்பதற்கான முறைமை எதுவுமில்லை. சமூகசேவை அலுவலர்களுக்குப் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதற்கும் அவற்றுக்குப் பதிலிறுப்பதற்குமான பணிப்பாணை இல்லாமையினால் அத்தகைய வன்முறைச் சம்பவங்கள், மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் நன்னடத்தை அலுவலர்கள் போன்ற இயைபான அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. சமூகசேவை அலுவலர்களுக்கான சுற்றறிக்கை மற்றும் பணிப்பாணை என்பவற்றின் அடிப்படையில் அவ்வலுவலர்கள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு (WHHs) மாத்திரம் வாழ்வாதாரம் மற்றும் சுயதொழில் செயற்பாடுகள் என்பவற்றுக்கான சேவைகளை வழங்க வேண்டும். மாறாக பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை. அச்சந்தர்ப்பங்களில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்பவரொருவர் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பத்தலைவியாகப் பெயர் குறிக்கப்படுமிடத்து, புகலிட வசதியொன்றையும் உட்படுத்துகின்ற உதவியொன்றை வழங்குவதற்கான சாத்தியம் காணப்படலாம். சமூகசேவை அலுவலர்கள் திருகோணமலையில் புகலிட இல்லமொன்றை நிர்வகிக்கின்றனர். அது, தற்போது திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களுக்குமானதாகக் காணப்படுகின்றது. ஆனால் இன்றுவரை பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் எவரும் இச்சேவையை அணுகியதில்லை.

## ஒட்டுமொத்தப் பின்னூட்டத்தின் சாராம்சம்:

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பி வாழ்வோருள் அநேகமானோரினது அக்கறை யாதெனில், பலதுறைகள், குறித்த திருப்திமட்டத்துக்கும் அவற்றின் நியதி நிபந்தனைகளுக்கும் இணங்க சேவைகளை வழங்கியுள்ளன என்பதாகும். எனினும் இதனைத்தவிர அவசியமான குறித்தசில முடிவுகளை எடுப்பதற்கு அலுவலர்களுக்கு அதிகாரமில்லை. இது, ஒட்டுமொத்தச் சேவை வழங்குகையுடன் அவர்களின் திருப்திமட்டத்தையும் பாதித்தது. மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், நன்னடத்தை அலுவலர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்கள், சமூகசேவை அலுவலர்கள், மத்தியஸ்த சபைகள் மற்றும் காதி நீதிமன்றங்கள் போன்ற சேவை வழங்குநர்களின் அக்கறையானது, அவர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் 'பெறுநர்'களாகக் (receivers) கருதுகின்றமையாகும். கூடுதலாக இது இரு தரப்பினர்களுக்குமிடையே புரிந்துணர்வின்மையை விளைவிக்கின்ற தொடர்பாடல் பிரச்சினையாக இருக்கலாம்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் அநேகமானோர் தமது கொள்கைகளையும் நடவடிக்கைமுறைகளையும் புரிந்துகொள்வதற்கான திறன்களை

அல்லது ஆற்றலைக் கொண்டிருப்பதில்லையென சேவை வழங்குநர்கள் கற்பிதம் கொள்கின்றனர். குறிப்பாக சட்ட உதவி ஆணைக்குழு, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு நடவடிக்கைமுறையின் விளக்கத்தை எளிமையாக்குவதற்கு அல்லது தொடர்பாடலுக்கான மாற்றுவழிகளைக் கண்டுபிடிப்பதற்கு முயற்சியெடுப்பதாகத் தெரியவில்லை. சேவை வழங்குநர் தம்மை நல்ல முறையில் நடாத்தவில்லையென பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருள் சிலர் கருதியதாகச் சொல்லப்பட்டதை அவர்கள் புறக்கணித்தனர். தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ், விபரமான தகவல்களையும், பொதுமக்கள் எவ்வகையான சேவைகளுக்கு உரித்துடையவர்களாக உள்ளனர் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளனர். குறிப்பாக சுகாதார சேவைகளை அணுகும்போது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் எவ்வகையான சிகிச்சை பரிந்துரைக்கப்படுகின்றதென்பதையும், பரிசோதனை நடவடிக்கைமுறை முதலியவற்றின் விபரங்களையும் அறிந்துகொள்வதற்கான உரிமையைக் கொண்டிருக்கின்றனர். சேவைநாடியின் தகவலுக்கான உரிமைபற்றி அலுவலர்கள் நன்கு அறியத்தரப்பட்டோராக இருத்தல் வேண்டும். அவர்களின் சேவைகளை அணுகுவோர், நடவடிக்கைமுறைகள் பற்றி முழுமையாக அறிவிக்கப்படுதலை உறுதிப்படுத்துதலும் அத்துடன், தெளிவான விளக்கத்துக்காக எளிமையான முறையில் விபரங்களை விளக்குவதற்கான போதிய நேரம் அவர்களுக்கு வழங்கப்படுவதை அனுமதித்தலும் வேண்டும்.

இரகசியத்தன்மையானது, பாரியதொரு பிரச்சினையாக எழுப்பப்பட்டது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்பவர் ஒருவர், சம்பவமொன்றை அறிக்கையிடும்போது, குறிப்பாக பொலிஸ் துறையில், ஏனைய அலுவலர்களின் உதவியைப் பெறுவதற்கென பொலிஸார் அவர்களுடன் கலந்தாலோசிக்க நேரிடலாம். அவர்களின் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவிப்பது பெரும்பாலும் கட்டாயமானதாகவும் இருக்கும். எவ்வாறாயினும் உயிர்தப்பிவாழ்பவரின் கருத்தில் அலுவலரின்பால் இரகசியத்தன்மையைப் பேணாமையாக இந்நடவடிக்கைகள் காணப்படுகின்றன. ஏனைய சேவைத்துறைகள், குறிப்பாக மத்தியஸ்த சபையின் விடயத்தில், அது விசாரணைகளை நடாத்துவதற்காகப் போதிய இடவசதியைக் கொண்டிருப்பதில்லை. இரகசியத்தன்மை என்பது தமது பிரதான நன்னெறியொன்றாக இருந்தபோதிலும், உண்மையில் விசாரணைகளைப் பொது இடமொன்றில்தான் நிறைவேற்றினோம் என மத்தியஸ்தர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார்.

சிலருக்கு, விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ்பேசும் பொலிஸ் அலுவலர்களுக்கு, அதிகரித்த வேலைப்பளு ஒரு பிரச்சினையாகக் காணப்பட்டது. சட்டமருத்துவ அலுவலர்கள் போன்ற ஏனைய சேவை வழங்குநர்களுக்கு எழுதுவினைஞர் பணியாட்தொகுதியினரின் உதவி இல்லாதிருக்கின்றது. அவர்களுக்கும் வழமைக்கு மாறான பாரிய வேலைப்பளு உள்ளது.

இரு தரப்பினருக்கும் நம்பிக்கையானது பாரியதொரு மட்டுப்பாடாக உள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் தமது உடனடித்தேவைகள் எதிர்கொள்ளப்பட்டு தொடர்ச்சியான உதவிகள் வழங்கப்படவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். மாறாக, சேவை வழங்குநர்களுக்கு அத்தகைய உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரமே உண்டு. பாரிய வேலைப்பளு காரணமாக இது, தாமதங்களையும் சிலவேளைகளில் நிலைமையொன்றைப் புறக்கணிப்பதையும் விளைவிக்கும். தேவைகள் எதிர்கொள்ளப்படாதபோதும், ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் தொடர்பிலான நம்பிக்கையை உயிர்தப்பிவாழ்வோர் இழக்கின்றபோதும் அவர்கள் பெரும்பாலும் ஏனைய சேவைத்துறைகளை அணுகுவதற்கு விரும்புவதில்லை. மனப்பாங்குசார் மாற்றங்களும் சேவை வழங்குநரின் வழங்குகை முறைமையினுள் இடம்பெறுதல் வேண்டும். சேவை வழங்குநர்கள், தாம் சேவைகளைக் ‘கொடுப்பவர்’ (giver) என்றும் உயிர்தப்பி வாழ்வோர், அச்சேவைகளைப் ‘பெறுபவர்’ (receiver) என்றும் அறிந்துள்ளவிடத்து, அதிகாரப் படிநிலைமுறைகள் பற்றிய பிரச்சினைகள் கவனக்குறைவான முறையில் நடைமுறையில் இருக்கும். பெண்களின் உரிமைகள் சார்ந்த கண்ணோட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்பவர் ஒருவருக்கு உதவியளிக்கும்போது அக்கறையின்மையும் விழிப்புணர்வின்மையும் காணப்படும் என்பதுடன், அதன் காரணமாக மாறா உருப்படிவ நிலையிலான பால்நிலைசார் நடைமுறைகள் தொடர்ந்தும் வலுவுறுத்தப்படுகின்றன.

சேவை வழங்குநர்கள் பலரிடையே ஒருங்கிணைப்பின்மை, கண்காணிப்பின்மை மற்றும் பின்தொடர் நடைமுறைகளின்மை என்பன காணப்படுகின்றன. இத்தாமதங்களும் கவனக்குறைவுகளும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் வாழ்வில் மேற்கொள்ளப்பட்ட பிரச்சினைகளையும், சில சம்பவங்களைப் பொறுத்தவரை கொலை அல்லது தற்கொலை விளைவிக்கின்ற வகையில் அதிகரித்துவரும் நம்பிக்கையின்மையையும் தோற்றுவிப்பதன்மூலம் அவர்களின் பிரச்சினைகளை அதிகரிக்கச் செய்யவும்கூடும். சேவை வழங்குகைத் துறையானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு உதவியளிப்பதற்குப் பல்வேறு பல்துறைநெறிசார் சேவைகளை அதனூடே ஒருங்கிணைக்கின்ற முறைமையொன்றைக் கொண்டிருப்பதில்லை. அதற்குப்பதிலாக, உயிர்தப்பிவாழ்வோர் முன்னைய சேவைத்துறையிலிருந்து ஏதேனும் உதவி அல்லது வழிகாட்டலின்றி, பல்சேவை வழங்குநர்களை நேரடியாக அணுகுதல் வேண்டும். தனிப்பட்ட முறையில் பல்வேறு சேவை வழங்குநர்களைச் சந்தித்தலானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு வீண்சுமையாகவும் சோர்வேற்படுத்துவதாகவும் உள்ளது. இவர்கள் இதன்காரணமாக சேவைகளை அணுகாதுவிடலாம்.

## — அத்தியாயம் 5 —

# முடிவுரையும் பரிந்துரைகளும்

### 5.1 முடிவுரை

பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவையின் பயனுறுதன்மையையும் இடைவெளிகளையும் இனங்காண்பதற்கென, அச்சேவைகளுக்கான பதிலிறுத்தல்களில் பெண்கள் உரிமைகளின் நடைமுறைசார் மற்றும் ஒழுக்கவியல்சார் கவனக்குவிவுடன் இந்த ஆய்வுக் கற்றல் நடாத்தப்பட்டது. ஆகவே இவ்வாய்வானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் பார்வையில் அத்தகைய வன்முறை பற்றிய சேவை வழங்குகையிலுள்ள இடைவெளிகளையும், அவர்களின் அபிப்பிராயங்களையும் பதிலிறுத்தல்களையும் சேகரிப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. அதற்கென, அந்தந்த சேவைத்துறைகளுடனான அவர்களின் பின்னூட்டம் பற்றிய கலந்துரையாடலினால் பின்தொடரப்பட்டு, அடையாளம் காணவேண்டி இருந்தது. இந்த வடிவமைப்பின் அடிப்படையில், ஆய்வானது பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருடனும் அத்தகைய வன்முறை பற்றிய சேவை வழங்குநர்களுடனும் நடாத்தப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளைத் தரமுயர்த்துவதற்கும், தேசிய மட்டத்தில் கொள்கை உருவாக்கத்தையும் கொள்கைசார் மாற்றங்களையும் முன்னெடுத்துச் செல்வதற்குமான பரிந்துரைகளைப் பகிர முடியும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகளிலுள்ள இடைவெளிகளையும் பலவீனங்களையும் பக்கச்சார்பற்ற முறையில் அடையாளம் காண்பதற்கென அச்சேவைகளை அணுகுவது தொடர்பில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் அக்கறைகளும் அபிப்பிராயங்களும் அனுபவங்களும் அந்தந்தச் சேவைத்துறைகளுடன் பகிரப்பட்டு, அவர்களின் பின்னூட்டங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன. பக்கச்சார்பைத் தவிர்ப்பதற்கென ஆய்வுக் கற்றலின் கண்டறிதல்கள் அந்தந்த சேவை வழங்குநர்களுடன் பகிரப்பட்டு அவர்களின் பின்னூட்டமும் அபிப்பிராயங்களும் இந்த ஆய்வாவணத்தினுள் தொகுக்கப்பட்டன. இவ்வாய்வு முழுவதும் சேவை வழங்குநர்களின் மனப்பாங்குகள், நடத்தை, தொழில்நுட்பத் திறன்கள்

மற்றும் பால்நிலைச் சமத்துவம் பற்றிய அறிவு போன்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வசதிகள் தொடர்பில் காணப்படுகின்ற உள்ளபடியான நிலைமை ஆழமாக மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன் அச்சேவைகள் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான பயனுள்ள மற்றும் வினைத்திறனான சேவை வழங்குகையை நிறைவேற்றுவதனை இயலச்செய்விப்பதற்கு, பால்நிலைச் சமத்துவ அக்கறைகளின்மீதான போதிய திறன்களின் விருத்தியும் பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென கவனிக்கப்பட்டது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான பதிலிறுத்தல்கள் தொடர்பாக அண்மைய ஆண்டுகளில் சுகாதாரச் சேவைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டது. பதிலளித்தவர்களுள் ஏறத்தாழ 71 சதவீதத்தினர், சுகாதாரத் துறையிலுள்ள இச்சேவைகள் பற்றித் திருப்தியடைந்தனர். எவ்வாறாயினும் பதிலளித்தோர்களுள் 26 சதவீதத்தினர் அதுகுறித்துத் திருப்தியடையவில்லை. வலுவான சமூகநலன்புரி முறைமை பற்றிய நீண்டகால வரலாற்றைக்கொண்டுள்ள ஒரு நாட்டில் இது, எதிர்மறையானதொரு குறிகாட்டியாக உள்ளது. ஒட்டுமொத்தச் சுகாதார சேவையும் திருப்திகரமான மட்டத்தில் இருக்கும் அதேவேளை சுகாதாரச்சேவையின் பல்வேறு அம்சங்கள் குறைபாடுடைய நிலைமையில் காணப்படுகின்றன. உதாரணமாக நோயைக் கண்டறிதல் பற்றிய தகவல்களும் விதித்துரைக்கப்பட்ட மருந்துகளின் விபரங்களும் தெளிவற்றனவாக உள்ளமையால் இவை உயிர்தப்பிவாழ்பவர் ஒருவரின் தகவலுக்கான உரிமையை மீறுவதாக உள்ளன.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கும் சேவை வழங்குநர்களுக்குமிடையே பகிரப்பட்ட போதியளவற்ற தகவல்களுக்கிடையில் பாரிய இடைவெளிகள் அவதானிக்கப்பட்டன. சேவை வழங்குநர்களின் மனப்பாங்குகளும் அணுகுமுறைகளும் திருப்திகரமற்ற மட்டத்தில் காணப்பட்டன. உதாரணமாக குறிப்பிட்டவொரு மருந்து அல்லது அதன் பக்கவிளைவுகள் பற்றி உயிர்தப்பிவாழ்வோருள் பலருக்குக் குறைந்தளவான அறிவே இருந்தமையால் எந்த மருந்துகள் விதித்துரைக்கப்பட்டனவென மருத்துவர்களிடமிருந்து தெளிவைப் பெற்றுக்கொள்வது சிரமமாக இருந்தது. அத்துடன் பரிசோதனை நடைமுறை பற்றிய விளக்கமொன்று எப்போதேனும் இருப்பின், அதுவும் அரிதாகவே இருந்தது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாளும்போது இவையெல்லாம் பாரதூரமான அக்கறைகளாகக் காணப்படுகின்றன.

பதிலளிப்பவர்களுள் 60 சதவீதத்தினர் வைத்தியசாலையில் அமைந்துள்ள பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடம் மற்றும் சட்ட அலகு பற்றி அறிந்திருக்கவில்லை. 63 சதவீதத்தினர் மருத்துவச்சட்டச் சேவை பற்றி அறிந்திருக்கவில்லை. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு வைத்தியசாலைகளிலுள்ள தோதான சேவைகளை

அணுகுவதற்குக் குறைந்தளவு நெறிப்படுத்துகையும் வழிகாட்டலும் வழங்கப்பட்டுள்ளன என்பதையே இது சுட்டிக்காட்டுகின்றது. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு போதியளவில் உதவுவதற்கு முறையான பொறிமுறைகள் வரையறுத்துக்கூறப்படவில்லை என அத்தகைய வன்முறை பற்றிய கருமபீட அலுவலர்கள் கூறினர். பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்துக்கும் பொலிஸ் அலுவலர்களுக்கும் மருத்துவர்கள் சம்பவங்களை ஆற்றுப்படுத்துகின்றனர். அத்துடன் மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் கள விஜயங்களுக்கான சம்பவங்களை அறிவிக்கின்றனர். எவ்வாறாயினும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்காக வேறெந்தத் தொடர்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. சேவை வழங்குநர்களுக்கிடையே தொடர்பாடலும் தகவல் பகிர்வும் இல்லாததன் காரணமாக சம்பவப் பின்தொடர் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் சவால்களாக அமைந்துள்ளன. வைத்தியசாலைகளில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடத்துக்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரம் இல்லை. இது, அக்கருமபீடத்தினால் பயனுள்ள மற்றும் வினைத்திறனான சேவை வழங்கப்படுவதற்கான மிகப்பெரிய தடைகளுள் ஒன்றாக உள்ளது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள 106 பேர்களுள், அத்தகைய வன்முறைச் சம்பவங்களில் பொலிஸாரினால் இரகசியத்தன்மை பேணப்படுதல் திருப்திகரமற்ற மட்டத்தில் உள்ளதென்றும், இத்துறையில் முன்னேற்றம் தேவையாக உள்ளதென்றும் 42 பேர் பதிலளித்தனர். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்வதற்கு விரும்பாமைக்கு இதுவொரு முக்கிய காரணமாகவுள்ளது. எவ்வாறாயினும் பதிலளித்தவர்களுள் 14 பேர் மாத்திரமே பொலிஸாரின் சேவைகள் குறைபாடுடையதாகக் காணப்படுகின்றதெனக் கூறினர். அதேவேளை, பதிலளித்தவர்களுள் 74 பேர் பொலிஸ ாரின் சேவைகளுடன் பொதுவாகத் திருப்திப்பட்டனர். யுத்தத்துக்குப் பின்னரான சூழலில் பொலிஸாரின் சேவைகள் பெருமளவு முன்னேற்றமடைந்துள்ளன என்பதை இவ்வெண்ணிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் வலுவுறுத்துவதனை உறுதிப்படுத்துவதன் மூலம் இது தன்னளவிலேயே ஒரு பாரிய அடைவாகக் கருதப்படலாம். பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர், தாம் பொலிஸாரிடமிருந்து அணுகிப்பெற்ற சேவைகள் பயனுள்ளவையாக இருந்தனவென்றும், ஆய்வின் கருதுகோளுக்கு எதிர்மாறாகவுள்ள வினைத்திறனான முறையில் தொழிற்படுகின்றனவென்றும் கூறினர்.

பதிலளித்தவர்களுள் 79 சதவீதத்தினர் தமது சொந்த மொழியில் அறிக்கைகளைக் கோப்பிடுவதற்கான இயலுமைபற்றித் திருப்திப்பட்டனர். அத்துடன் பதிலளித்தவர்களுள் 85 சதவீதத்தினர் தமிழ்பேசும் அலுவலர்கள் இருந்தமைபற்றித் திருப்திப்பட்டனர். இது நாட்டில் சமாதானத்தினதும் நல்லிணக்கத்தினதும் ஒட்டுமொத்தச் செயன்முறையின்

பாகமொன்றாக அமைந்துள்ள உரிமைகளினதும் உள்ளகப்படுத்தலினதும் முன்னேற்றம் பற்றிய குறிகாட்டிகளைக் காண்பிக்கின்றது. முறைப்பாடொன்றின் இலக்கம் மற்றும் சம்பவமொன்றை விளக்குவதற்கு குறித்தொதுக்கப்பட்ட போதிய நேரம் என்பன பற்றி அறிவிக்கப்படுகின்றமை போன்ற, சேவைகளின் குறித்த சில ஏற்பாடுகள் காணப்பட்டன. இதுபற்றி பதிலளித்தவர்களுள் 70 சதவீதத்தினர் திருப்திப்பட்டனர். எவ்வாறாயினும் முறைப்பாட்டு இலக்க விபரங்கள் பற்றி அறியாதிருந்தவர்களும் ஒரு பிரச்சினையை விளக்குவதற்கான நேரக்குறித்தொதுக்குகையுடன் திருப்தி அடையாதவர்களும் என குறித்த சில எண்ணிக்கையினர் இருந்தனர். இத்துறைகளில் பொலிஸ் சேவைகள் முன்னேற்றப்பட வேண்டிய தேவையுள்ளதை இது சுட்டிக்காட்டுகின்றது.

சம்பவங்களை அறிக்கையிடுகையில் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கென அந்தரங்க இடமொன்று எப்பொழுதும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். முறைப்பாடுகளைப் பெறுவதற்கும் விசாரணைகளை நடாத்துவதற்கும் என ஏற்பாடு செய்யப்பட்ட பொது இடம் பற்றி பதிலளித்தவர்களுள் அரைவாசிப்பேர் திருப்திப்பட்டனர். மிகுதி அரைவாசிப்பேர் அத்தகைய இடம்பற்றித் திருப்தியடையவில்லை. சில பொலிஸ் நிலையங்கள் இந்நோக்கத்துக்காகத் தனிவேறான இடமொன்றை குறித்தொதுக்கியுள்ளன. ஆனால் அநேகமான பொலிஸ் நிலையங்கள் அவ்வாறு செய்யவில்லை. எல்லாப் பொலிஸ் நிலையங்களிலும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு தனிவேறான அந்தரங்க இடமொன்று கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும். அதேபோன்று பால்நிலைச் சமத்துவத்தின் மீதான பொலிஸ் அலுவலர்களின் மனப்பாங்குகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. 38 சதவீதத்தினர் தற்போதைய மனப்பாங்குகளை ஏற்கின்றனர். எவ்வாறாயினும் இது ஒட்டுமொத்த சதவீதத்தின் அரைவாசிக்கும் குறைந்ததாகவுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாள்வதில் இது, ஒரு குறைபாடுடைய குறிகாட்டியாகவே உள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களும் சமூக அடிப்படையிலான நிறுவனங்களும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைப்பிரச்சினைகளுக்குப் பதிலிறுப்பதற்குப் பெருமளவு இயல்திறனைக் கொண்டுள்ளன. இந்நிறுவனங்கள் இரகசியத்தன்மையைப் பேணுவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளன; சேவைகளை அணுக வழிகாட்டுவதற்கான முறைமைகளை நிலைப்படுத்தி வைத்திருக்கின்றன; ஒழுக்கஞ்சார் உதவியையும் உளவளத்துணையையும் வழங்குவதற்கு இயன்றவையாகவுள்ளன; பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் மீதான பின்தொடர் நடவடிக்கையைத் தொடர்ச்சியாக வழங்குகின்றன; பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரை அவர்களின் குடும்பத்தினுள்ளும் சமூகத்தினுள்ளும் ஒன்றிணைக்கின்றன; மற்றும் வாழ்வாதார உதவிகள் போன்ற மேலதிக உதவிகளை வழங்குகின்றன. இத்துறைகள் உரிமைகள்

அடிப்படையிலான அணுகுமுறையுடன் மனித உரிமைகள் / பெண்களின் உரிமைகள் தொடர்பில் பணியாற்றுவதற்கு முறையான நுட்பத்திறன்களையும் ஈடுபாட்டையும் கொண்டுள்ளன.

பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு பயனுள்ள வகையில் பதிலிறுப்பதற்கு விளித்துரைக்கப்பட்டு, மாற்றப்பட வேண்டிய ஒருசில ஆக்கக்கூறுகளை சட்டச் சேவைகள் இன்னமும் கொண்டுள்ளன. உதாரணமாக தோதான எழுத்துமூல சம்பவ விபரங்கள், அச்சம்பவக் கோப்பு பற்றிய தகவல்கள் மற்றும் எச்சட்டத்தின்கீழ் வழக்கு கோப்பிடப்பட்டுள்ளது என்பவற்றுடன் சேர்த்து பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் பற்றிய எழுத்திலான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். பதிலளித்தவர்களுள் ஏறத்தாழ 50 - 60 சதவீதத்தினர் இது தொடர்பாக அவர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளுடன் திருப்திப்படவில்லை. இது பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவைகள் சட்டத்துறையில் பெருமளவில் முன்னேற்றப்பட வேண்டும் என்கின்ற ஒரு குறிகாட்டியாகும்.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்தல் அம்சங்கள் திருப்தியற்ற மட்டத்தில் இருக்கின்றபோதிலும், மகளிர் அபிவிருத்தி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட சேவைகள் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு பதிலிறுக்கையில் திருப்திகரமான மட்டத்தில் உள்ளவையாகத் தோன்றுகின்றன. இது, அவர்கள் நன்கு வழங்குகின்ற ஏனைய சேவைகளை அதிகளவில் பாதிக்கின்றது. முறையான வழிகாட்டலும் ஆற்றுப்படுத்தலுமின்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் தமது வாழ்க்கைமீது எதிர்மறையானதும் பாரதூரமானதுமான மாற்றுமுடிவொன்றை எடுக்கக்கூடும். அவர்களனைவருக்கும் முறையான வழிகாட்டலும் தோதான ஆற்றுப்படுத்தல்களும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவது மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் பொறுப்பாக உள்ளது. சேவை வழங்குகை பற்றி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் எதிர்பார்ப்பானது, அவர்களுக்கு உண்மையில் வழங்கமுடியுமானவற்றைப் பொறுத்தவரை, ஓரளவு யதார்த்தமற்றதாக உள்ளதென மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் பின்னூட்டம் கூறியது. தேவையானவிடத்து முடிவுகளை எடுப்பதற்கு மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டுள்ளனர். உயிர்தப்பிவாழ்வோர், மகளிர் அபிவிருத்தி அலுவலர்களின் சேவைகளுடன் தாம் திருப்தியடையவில்லையெனக் கருதக்கூடியமைக்கான காரணிகளாக, தாமதங்களும், நேரமட்டுப்பாடுகளும், பாரிய வேலைப்பளுக்களும் இருந்தமையைச் சுட்டிக்காட்டினர். பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகாட்டலையும் ஆற்றுப்படுத்தல்களையும் வழங்கும் பொருட்டு அவர்கள், சம்பவ மாநாடுகளை நடாத்தி வசதிப்படுத்துகின்றனர்

எனக் கூறப்பட்டது. அநேகமான மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், பெண்கள் உரிமைகள்சார் கண்ணோட்டத்தில் கூட்டங்களை நடாத்துவதில் போதிய பயிற்சியைக் கொண்டிராதிருக்கலாம் என்பதால் ஏனைய பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றமை அல்லது இயன்றளவுக்கு தற்போதைய பிரச்சினைகளைப் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் அக்கறை கருதி தீர்த்துவைக்கப்படாமை என்பன தவிர்க்க முடியாததாக உள்ளன.

சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுக்கான சேவைகளை வழங்குவது நன்னடத்தை அலுவலர்களினதும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களினதும் வகிபாகமாகும். துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளோருக்கான அவர்களின் சேவை வழங்குகையில், இந்த ஆழ்ந்த கடமைப்பொறுப்பும் சிறுவர்களின் நல்வாழ்வைப் பாதுகாத்தலிலான அக்கறையும் கட்டாயமானதாக உள்ளன. சிறுவர் துஷ்பிரயோகத்துக்குப் பலியான எவரினாலும் இது உயர்ந்தளவில் மெச்சப்படுகின்றது.

சிறுவர்களை, குறிப்பாக பெண்பிள்ளைகளை வன்முறையான தனிநபர் ஒருவரிடமிருந்து அல்லது ஒரு சூழலில் இருந்து தடுப்பதனையும் பாதுகாப்பதனையும் உறுதிப்படுத்தி, அவர்களின் பிரச்சினைகளை விளித்துரைப்பதற்கு ஏனைய சேவை வழங்குநர்களுடன் ஒருங்கிணைவதற்கும் ஒத்துழைப்பதற்கும், அத்துடன் அவர்களைக் குடும்ப உறுப்பினர்களுடன் சேர்ப்பதற்குமான பொறிமுறையொன்று தேவையாக உள்ளது. குடும்பத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் (VAW) இருந்துள்ள நிலைமைகளில், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் வகிபாகம் பெண்களுக்கெதிரான வன்முறைப் பிரச்சினைகளை விளித்ததுரைத்தலும் அத்துடன்/ அல்லது பதிலிறுக்கப்படுவதற்காக அப்பிரச்சினைகளை இயைபான அலுவலர்களுக்கு ஆற்றுப்படுத்துதலுமாக இருத்தல் வேண்டும். பெண்களுக்கெதிரான வன்முறைப் பிரச்சினைகளை விளித்துரைத்தலானது, தனது பிள்ளைக்குக் கூடுதலான பாதுகாப்பைப் போதியமுறையில் வழங்குவதற்குத் தாய்க்கு உதவும் என்பதுடன், இது சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும் தேவையாக உள்ளது. சிறுவர் துஷ்பிரயோகத்துக்குப் பலியாக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்குக் குறிப்பிட்ட சட்டங்கள் உள்ளமையினால் துஷ்பிரயோகம் பற்றிய சிறுவர்களின் பிரச்சினைகளை விளித்துரைத்தலானது மிகவும் நேரடித்தன்மையானதாக உள்ளது. எவ்வாறாயினும் பெண்களைப் பாதுகாப்பதற்குக் குறைந்தளவில் உறுதியான சட்ட நடவடிக்கை முறைகள் இருப்பதனாலும், சமூகத்திலுள்ள ஆணாதிக்கக் கட்டமைப்புக்கள் குறிப்பிட்ட சட்டங்களை இயற்றுவதற்குத் தடையாக இருப்பதனாலும் பெண்களுக்கெதிரான வன்முறையை விளித்துரைக்கும்போது அது கூடுதலான சவால்களைக் கொண்டதாக அமைகின்றது. ஆகவே கூட்டாக பெண்களினதும் சிறுவர்களினதும் பிரச்சினைகளை விளித்துரைப்பதற்கான கருவிகளையும் பொறிமுறைகளையும் மேம்படுத்துவதற்குக் கூடுதலாகப் பணியாற்ற வேண்டிய தேவை உள்ளது.

பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு சமூகசேவை அலுவலர்களினால் வழங்கப்பட்ட சேவைகளும் திருப்திகரமான மட்டத்தில் உள்ளன. பால்நிலைச் சமத்துவத்தின் மீதான இவ்வலுவலர்களின் மனப்பாங்குகளும், பயனுள்ள மற்றும் வினைத்திறனான உதவியையும் சேவைகளையும் வழங்குவதற்கான அவர்களின் ஈடுபாடும் முன்னேற்றமடைந்துள்ளமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

மத்தியஸ்தசபைச் சேவைத்துறையில் குறித்த சில திருப்தி மட்டங்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அதேவேளை, அவை வழங்கும் சேவைகள் தொடர்பில் வேறுசிலர் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. இரகசியத்தன்மையைப் பேணுவதற்குச் சவாலாகவுள்ள கூட்டங்கள் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் நடைபெறுவதனால் மத்தியஸ்த சபையானது, இடவசதி இல்லாமைபற்றி அக்கறை கொண்டுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்காக தனிவேறான இடம் தேவைப்படுகின்றது. ஆனால் இன்றுவரை இது செயல்முறையில் இருக்கவில்லை. மேலும் கூருணர்வுடைய ஒரு முறையிலும் பால்நிலைச்சமத்துவத்துக்கான அக்கறையுடனும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாளும்போது, முறையான திறன்கள் பற்றிய பயிற்சியின்மையைச் சுட்டிக்காட்டி, மத்தியஸ்தசபையின் இரகசியத்தன்மை சார்ந்த நடைமுறைகளை பதிலளித்தவர்களுள் அரைவாசிப்பேர் கேள்விக்குட்படுத்தினர்.

காதி நீதிமன்றங்களினால் வழங்கப்பட்ட சேவைகள் முழுமையாக திருப்திகரமானதொரு மட்டத்தில் இல்லை. காதி நீதிமன்றங்களில் பொறுப்புள்ள பதவிகளில் உள்ளோர் பால்நிலைச் சமத்துவ அக்கறைகளுக்கு கூருணர்வுடையோராக இருத்தல் தேவையாக உள்ளது. அவர்கள் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய ஒவ்வொரு வழக்கினதும் இரகசியத்தன்மையை உறுதிப்படுத்துதலும், அத்தகைய வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்பவருக்கு வழக்கு விபரங்கள் பற்றிய தகவல்களை வழங்குதலும், வழக்கு நடவடிக்கைகள் தொடர்பிலான பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துதலும் வேண்டும். பதிலளித்தவர்களுள் அரைவாசிப்பேர் தமது வழக்கு கையாளப்பட்ட முறை தொடர்பில் சாதகமற்ற பதிலைக்கூறியதுடன், அம்முறைமையை மீண்டும் அணுகுவதற்கும் அச்சம் கொண்டுள்ளனர். பால்நிலை அடிப்படையிலான வழக்குகளைக் கையாள்வதில் காதி நீதிமன்றங்கள் பற்றி இருந்துவருகின்ற தீவிர அக்கறைகளுக்கு இது ஒரு குறிகாட்டியாகும்.

சேவை வழங்குநர்கள் தமது சேவைகளை வழங்கும்போது தம்மிடமுள்ள கருத்துக்களையும் சவால்களையும் வெளிப்படுத்தினர். இத்துறையிலான சேவைகள் ஒட்டுமொத்தத்தில் குறைபாடுடையனவாகவும் திருப்தியற்றவையாகவும் அவர்களினால் நோக்கப்பட்டன என பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் கூறினர். எவ்வாறாயினும் சேவை வழங்குநர்கள், தாம் சிறந்த சேவைகளை வழங்குவதில் தமக்கு, வளங்களும் வசதிகளும் இல்லாமை போன்ற, அதிகமான சவால்கள்

உள்ளதாகக் கருதுகின்றனர். சில சேவை வழங்குநர்கள், சொற்பளவிலான மனிதவள உதவியுடன் அல்லது அதுவுமில்லாமல் பாரிய வேலைப்பளுக்களை எதிர்கொள்கின்றனர். திணைக்களங்களுக்கிடையே வளங்களைக் குறித்தொதுக்குவதில் பாரபட்சமான நடைமுறைகள் உள்ளனவென வேறுசிலர் கருதுகின்றனர்.

ஒருசில சேவைத்துறைகளுடன் பாதுகாப்பு இல்ல வசதிகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. தற்போது பாதுகாப்பு இல்லம் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் கொண்டுநடாத்தப்படுகின்றது. ஆனால் இது ஒரு நிரந்தரமான வசதியல்ல. ஆகவே பாதுகாப்பு இல்லத்துக்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டும்.

## 5.2 பரிந்துரைகள்

1. பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாளுகின்ற எல்லாச் சேவை வழங்குகைத் துறைகளிலுமுள்ள ஒவ்வோர் இயைபான அலுவலருக்கும் பால்நிலைசார் கூருணர்வு, பால்நிலைச் சமத்துவ நடைமுறைகள் மற்றும் அடிப்படை உளவளத்துணைத் திறன்கள் பற்றிய தொடர்ச்சியான பயிற்சிச் செயலமர்வுகள் அத்தியாவசியமாக உள்ளன. பெண்களினதும் சிறுவர்களினதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பெண்கள் உரிமைகள்சார்ந்த கண்ணோட்டமொன்று கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கும், இயைபான சட்டங்கள் மற்றும் சமவாயங்கள் பற்றிய விழிப்புணர்வை உள்ளடக்குவதற்கும் அலுவலர்களின் நுட்பத்திறன்களும் அறிவும் தரமுயர்த்தப்படுதல் வேண்டும்.

2. பால்நிலை அடிப்படையிலான வன்முறைக் குற்றச்செயல்களுக்கான மருத்துவச் சிகிச்சையையும் பரீட்சிப்பையும் வழங்குவதற்கு சுகாதாரச் சேவைக்கு மேலதிகத் தரமுயர்த்துதலும் போதிய வசதிகளும் தேவையாக உள்ளன. மாவட்டம் முழுவதுமுள்ள சகல வைத்தியசாலை வளாகத்தினுள் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய கருமபீடங்கள் முறைசார்ந்து அங்கீகரிக்கப்படுதல் தேவையாக உள்ளது. அந்தரங்கத்தன்மையும் இரகசியத்தன்மையும், விசேடமாக வன்புணர்வுசார் விடயங்களுக்காக, சுகாதாரச் சேவைத்துறையில் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும்.

3. உளநல மருத்துவக் கூறுகள் தமது சேவைகளைப்பெற்ற பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கான தொடர்ச்சியான விஜயங்களைப் பின்தொடருதலும் வேறு சேவைத்துறைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்களை தடம்தொடர்வதற்குத் தகுந்த முறைமையொன்றை நிலைப்படுத்தி வைத்தலும் தேவையாக உள்ளது.

4. பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் தகவலுக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கு சுகாதாரத்துறையிலுள்ள தேசிய கொள்கைமட்ட மாற்றங்கள் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். அரசாங்கமானது, அதன் சேவைகளைப்பற்றிக் கூடுதலாக பொதுமக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அத்தகைய வன்முறை பற்றிய கருமபீடங்கள் மற்றும் சட்ட அலகுகள் போன்ற மேலதிகச் சேவைகளை சமூகத்துக்காக உருவாக்குதல் வேண்டும்.

5. ஆதார வைத்தியசாலைகளில் மருத்துவச்சட்டக் கூறு ஒன்றை உள்ளடக்குவதற்கென மருத்துவச்சட்டச் சேவை வசதிகள் தரமுயர்த்தப்படுதலும், வைத்தியசாலைகளில் நிரந்தரமானவொரு சட்டமருத்துவ அலுவலரை நியமிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதலும் வேண்டும். சிங்கள மற்றும் தமிழ்மொழிகளிலான மொழிபெயர்ப்பு கிடைக்கக்கூடியதாக்கப்படுதல் வேண்டும். அத்துடன்/அல்லது இருமொழிகளையும் அறிந்த தனிநபர்கள் தொழிலுக்கமர்த்தப்படுதல் வேண்டும்.

6. சட்டச்சேவையானது, சட்டத்தரணியின் மற்றும் அரச சட்டவுரைஞரின் பெயர்கள், நடவடிக்கைமுறைகள், வழக்கு விபரங்கள் மற்றும் வழக்கானது எச்சட்டத்தின்கீழ் கோப்பிடப்படும் என்பன போன்ற விரிவான தகவல்களை பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பி வாழ்வோருக்கு வழங்குதல் வேண்டும்.

7. பல்துறைநெறிசார் சேவைத்துறைகளுடன் தொடர்பாடல்கள் சீராக்கப்படுதலும் ஆற்றுப்படுத்துகை முறைமை பலப்படுத்தப்படுதலும் வேண்டும். ஏனைய பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய மன்றங்களிலான பங்குபற்றுகை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். குறிப்பிட்ட விடயங்களைப் பரிசீலனை செய்வதற்கும், தகவல்களைப் பரப்புவதற்கும், துறைசார்ந்த புதிய அபிவிருத்திகளைப் பரிசீலனை செய்வதற்கும் 3 மாதங்களுக்கு ஒருதடவை சேவை வழங்குநர்களுக்கிடையே முன்கூட்டித் தீர்மானிக்கப்பட்ட பல்துறையினரின் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்காக ஒருங்கிணைப்புக் குழுவொன்று தேவையாக உள்ளது.

8. உயர் மட்டத்திலான இரகசியத் தன்மையை பேணுவதற்கென பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களைக் கையாளும்போது, குறிப்பாக பொலிஸாரின் சேவைகளிலும் மத்தியஸ்தசபைகளிலும், தனிவேறான அந்தரங்க இடமொன்று குறித்தொதுக்கப்படுதல் வேண்டும். பாரிய வேலைப்பளுக்களைப் போதிய முறையில் முகாமை செய்வதற்குப் பெண்கள் மற்றும் சிறுவர்கள் கருமபீடத்திலுள்ள அலுவலர்களுக்கு உதவுவதற்கென மேலதிக எழுதுவினைஞர் பணியாட்தொகுதியினர் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

9. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பொருள்வகையான உதவியையும், திருமணமாகாத கருத்தரித்த பெண்களுக்கான அவசரகால உதவியையும், பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரின் உடனடித்தேவைகளுக்கான அவசரகால உதவியையும் வழங்குவதற்கு விசேடமாக வாழ்வாதார உதவியினூடாக அவர்களின் நிதிசார் தேவைகளை விளித்துரைத்து நிதிகளைக் குறித்தொதுக்குதல். இலகுவான அணுகுகைக்காகவும் பெற்றோரினால் கைவிடப்பட்டுள்ள சிறுவர்களை உள்ளடக்கும் வகையிலும் பிறப்புச்சான்றிதழ் முறைமையை மீளாய்வு செய்தல். புலம்பெயர் தொழிலாளர்களுடைய பிள்ளைகளின் காப்பைப் பாதுகாப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்குமான பொறிமுறையொன்று தேவைப்படுகின்றது.

10. அவசியமான நடவடிக்கையை உடனடியாக எடுக்கக்கூடிய வகையில் சிறுவர் தொடர்பிலான மாற்றங்களை அவதானிப்பதற்கு நன்னடத்தை அலுவலர்களினாலும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களினாலும் தொடர்ச்சியான கண்காணிப்பும் பதிவேட்டுப் புத்தகமொன்றின் பேணுகையும் தேவைப்படுகின்றன. சிறுவர் துஷ்பிரயோக விடயங்களைக் கையாளும்போது நன்னடத்தை அலுவலர்களுக்கு முறையான வழிகாட்டலும் பயிற்சியளிப்பதற்கான அறிவும் தேவைப்படும். சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் சம்பவ முகாமை முறைமையானது, பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்களைப்பற்றிக் குறிப்பாக விளித்துரைப்பதற்குத் தோதான தொழில்நுட்பக் கருவிகளை உள்ளடக்கும் வகையில் மேலும் மேம்படுத்தப்படுதல் வேண்டும். பாலியல்சார் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் சிறுவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் பற்றிய கொள்கைகளின்மீது செல்வாக்குச் செலுத்துவதற்கு கூடுதலான ஆதரித்துவாதிடுதற்பணியும், ஆதரவுக்கோருகையும் நிறைவேற்றப்படுதல் வேண்டும். சமூகத்தினருக்கு அறிவூட்டுவதற்கும் உள்ளூர் மற்றும் பிராந்திய வலையமைப்புக்களில் அவர்களின் பங்குபற்றுதலையும் ஈடுபாட்டையும் அதிகரிப்பதற்கும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களின் அறிவும் திறன்களும் வெளிக்கள மட்டத்தில் பரப்பப்படுதல் வேண்டும். குடும்பத்தில் பெண்களுக்கெதிரான வன்முறைப் பிரச்சினைகளுடன் இணைந்த சிறுவர்களின் பிரச்சினையை விளித்துரைப்பதற்கான கருவிகளும் பொறிமுறைகளும் சிறுவர்களின் நல்வாழ்வையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தத் தேவையாக உள்ளன.

11. மத்தியஸ்த சபைக்கும், மத்தியஸ்தரின் வகிபாகத்தின் மீது நடாத்தப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகளுக்கும், அதன் உறுப்பினர்களுக்குத் தேவைப்பட்ட திறன் தொகுதிகளுக்கும், கூடுதலான பெண் உறுப்பினர்கள் ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் சமூக மட்டத்தில் பரப்பப்படுதல் வேண்டும். முறையான வழிகாட்டலும் ஒழுக்கவியல் பற்றிய அடிப்படை அறிவும், குறிப்பாக இரகசியத்தன்மையினதும் அந்தரங்கச் சந்திப்பிடத்தைக் குறித்தொதுக்குவதினதும்

முக்கியத்துவம் பற்றி எல்லா உறுப்பினர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்படுதல் வேண்டும்.

12. காதி நீதிமன்ற உறுப்பினர்களும் நீதிபதிகளும் பால்நிலைச் சமத்துவத்துக்கும் பெண்களின் உரிமைகள் பற்றிய மனப்பாங்குகளுக்கும் கூருணர்வுடையோராக இருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு நீதியமைச்சு இடையீடுசெய்து இத்துறைகளிலான பயிற்சிகளை முக்கிய முன்னுரிமையுடையனவாக்குதல் வேண்டும்.

13. மகளிர் விவகார அமைச்சு இயைபான நுட்பத் திறன்களில் பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்தி பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோரைப் பாதுகாத்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு மகளிர் அபிவிருத்தி அலுவலர்களையும் நிவாரண சகோதரிகளையும் கூருணர்வுள்ளோராக்குதல் வேண்டும். மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் ஆற்றுப்படுத்தல்களுக்கான பொறுப்பையும், நடைமுறைபூராவும் எதிர்காலத்திலும் படிப்படியாகப் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருக்கு வழிகாட்டுவதற்கான பொறுப்பையும் ஏற்றல் வேண்டும்.

14. அரசாங்க மற்றும் ஏனைய துறைகள், அரசசார்பற்ற நிறுவனங்களினதும் சமூக சேவை நிறுவனங்களினதும் முன்மாதிரியைக் கடைப்பிடித்தல் வேண்டும். பால்நிலை அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்களுக்கு பதிலிறுக்கும்போது செயலூக்கம், ஒழுக்கவியற் கோவைக்கான மதிப்பு, பால்நிலைசார் கூருணர்வு என்பவற்றைப் பயன்படுத்தியும், உரிமைகளின் அடிப்படையிலான அணுகுமுறையின் பாவனை மூலமும் இவை ஏலவே பயனுள்ளதும் வினைத்திறனானதுமான முறைமைகளை நிலைப்படுத்தி வைத்திருக்கின்றன.

15. மட்டக்களப்பு மாவட்டத்தில் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோராகவுள்ள பெண்களுக்கான நிரந்தர பாதுகாப்பு இல்லத்தை நிறுவுவதற்கு அரசாங்க நிறுவனமொன்று பொறுப்பாதல் வேண்டும். இப்பாதுகாப்பு இல்லம், உளசமூக உதவி, உளவளத்துணை, பால்நிலைச் சமத்துவப் பயிற்சி மற்றும் தலைமைத்துவம் முதலியவற்றை உள்ளடக்கும்.

16. சேவை வழங்குநர்களை அணுகிய பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோருடன், எதிரெதிர்ப் பகுப்பாய்வு உட்பட, எல்லாம் அடங்கிய ஆய்வொன்று எதிர்காலத்தில் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அத்தகைய உயிர்தப்பிவாழ்வோரின் உயர் மட்டத்திலான சௌகரியத்தையும் பங்குபற்றுதலையும் உறுதிப்படுத்துவதற்கு அவ்வாய்வானது உளவியலாளர்கள் / உளசமூக உளவளத்துணையாளர்கள் என்போரின் உதவியுடன் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

17. சமூகப்பணி மீதான தேசியக் கொள்கை திருத்தப்படுதல் வேண்டும். சிறுவர்கள், அங்கவீனமுற்றோர், முதியோர், பெண்கள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையிலிருந்து உயிர்தப்பிவாழ்வோர் என்போருக்குச் சேவைகள் வழங்குவதற்கான முறைமையொன்று, எல்லோருக்கும் உதவுவதற்கான பொது வழிவகையாக, சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் கொண்டுவரப்படுதல் வேண்டும். சமூக சேவை அலுவலர்களுக்கான பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய ஒருங்கிணைப்பு, உயிர்தப்பிவாழ்வோருக்கான அவர்களின் சேவையை/உதவியைக் கூட்டிணைப்புச் செய்வதற்கு மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும்.

18. மட்டக்களப்பு மாவட்டத்தில் நிரந்தரமான பாதுகாப்பு இல்ல வசதி அவசரத் தேவையாகக் காணப்படுகின்றது. சமூக சேவை அலுவலர்கள் திருகோணமலை மாவட்டத்தில் பாதுகாப்பு இல்ல வசதியை வழங்குகின்றபோதிலும் சேவை வழங்குநர்களும் ஏனையோரும் இது பற்றி அறிந்திருப்பதில்லை. ஆகவே, அதன் அமைவிடமும் சேவைகளும் பற்றி பொதுமக்களுக்கும் இயைபான துறைகளுக்கும் அறிவித்து எல்லாமடங்கிய விபரங்கள் அவர்களுக்குப் பரப்பப்படுதல் வேண்டும்.

# மேற்கோள் குறிப்புக்கள்

## புத்தகங்களும் கட்டுரைகளும்

Edirisinghe, Anuruddhi, and L.B.L. de Alwis, (January-April 2011) Medico-Legal Journal of Sri Lanka, *College of Forensic Pathologists of Sri Lanka*, Vol. 1, No. 1.

Edirisinghe, Anuruddhi and Handun Wijewardena et al (2014), National Guidelines on Examination, Reporting and Management of Sexually Abused Survivors for Medico-Legal Purposes, *The College of Forensic Pathologists of Sri Lanka*.

Gomez, Shyamala (February 2005), A Study on Gender Based Violence in the Batticaloa District, Care International – Sri Lanka.

Gooneratne, Induwara (2010), Delivering a Forensic Expert Testimony for the Defense: Relevance, Hesitations and Reservations Amongst Professionals in Sri Lanka, *Sri Lankan Journal of Forensic Medicine Science and Law*, Vol. 1, No. 2.

Harris, Lauren and Julie Freccero (May 2011), Sexual Violence: Medical and Psychosocial Support, A Working Paper of the Sexual Violence and Accountability Project, *Human Rights Center, University of California*, Berkeley.

Hulathduwa, S.R. (2010), Some Common Pit-falls in the Practice of Forensic Medicine in Sri Lanka: A Review of International Literature, *Sri Lanka Journal of Forensic Medicine, Science & Law*, Vol. 1, No. 1.

Jayasundere, Ramani (August 2009), Understanding Gendered Violence Against Women in Sri Lanka, A Background Paper , *Women Defining Peace.*

Kodikara, Chulani and Thiagi Piyadasa,(July,2012), An Exploratory Mapping of Domestic Violence Intervention Services in Sri Lanka: revised edition, *International Centre for Ethnic Studies (ICES) and Women Defining Peace (WDP)*.

Seelinger, Kim Thuy, Helene Silverberg and Robin Mejia (May 2011), The Investigation and Prosecution of Sexual Violence and Accountability Project, Working Paper Series , *Human Rights Center, University of California, Berkeley Law School and Human Rights Center*, Kenya.

Wanasundera, Leelangi (March 2000), Country Report on Violence Against Women in Sri Lanka*, Centre for Women's Research*.

## உத்தியோகபூர்வ அறிக்கைகளும் ஆவணங்களும்

Article 12 - Rights to Equality; Article 12(2) - All persons are equal before the law and are entitled to the equal protection of the law; Article 12(2) - No citizen shall be discriminated against on the grounds of race, religion, language, caste, sex, political opinion, place of birth or any one such grounds; Article 12(4) - Nothing in this article shall prevent special provision being made by law, subordinate legislation or executive action for the advancement of women, children or disabled persons.

The Asia Foundation, UNDP - Equal Access to Justice Project, UNHCR and Ministry of Constitutional Affairs and National Integration, Ministry of Justice and Law Reform (2009) The Legal Aid Sector in Sri Lanka - Searching for Sustainable Solutions: A Mapping of Legal Aid Services in Sri Lanka, The Asia Foundation and UNDP.

Challenges to Accountability for Human Rights Violations in Sri Lanka - A Discussion Paper (March 2017), International Commission of Jurists.

The Law on Sexual Offence: A Discussion Paper (1998), *Department of Justice, Equality and Law Reform, Government of Ireland*.

Living with Insecurity: Marginalisation and Sexual Violence Against Women in North and East (2013), *Sri Lanka Minority Rights Group International*.

Parliament of the Democratic and Socialist Republic of Sri Lanka, (July 19, 2002), Penal Code Amendment Act No. 12 of 2002, a *Supplement to Part II of the Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka*.

Report of the Leader of the Opposition's Commission on the Prevention of Violence Against Women and the Girl Child.

Violence and Disasters (2005), Department of Injuries and Violence Prevention, *World Health Organization,* Geneva, Switzerland.

## இணையத்தள மூலங்கள்

http://www.dundee.ac.uk/forensicmedicine/Crimes_against_Women_and_Children/B5-Reports_Evidence.pdf (accessed 24/09/14).

(http://www.impowr.org/content/current-legal-framework-rape-and-sexual-assault-sri-lanka#sthash.IgjlGWhV.pdf (accessed 23/09/14).

https://www.police.lk/index.php/police-history

http://www.health-genderviolence.org/training-programme-for-health-care-providers/facts-on-gbv/defining-gender-based-violence/21

http://restlessdevelopment.org/file/res-sa-men-and-boys-gbv-oct2014-pdf

இலங்கையில், அதிலும் குறிப்பாக அதன் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்டத்தில், பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் மீதான பல அக்கறைகள் இருந்து வருகின்றன என்பது இந்த ஆய்வுக் கற்றலின்போது உறுதியாகியுள்ளது. பால்நிலை அடிப்படையிலான வன்முறைப் பிரச்சினைகள் பற்றிய சேவைகளின் உந்துதலானது, அத்தகைய சேவைகளை வழங்குகின்ற குறித்தசில அமைப்புக்களினதும் அரசாங்க நிறுவனங்களினதும் குறிப்பிட்டவொரு அக்கறையாகக் காணப்படுகின்றது. அதேபோன்று, பால்நிலைச் சமத்துவம் பற்றி அத்தகைய சேவை வழங்குநர்களுக்குள்ள ஒட்டுமொத்த மனப்பாங்குகள் பொதுவானவையாக அமைந்துள்ளன. இந்த ஆய்வுக் கற்றலானது, பால்நிலை அடிப்படையிலான வன்முறை பற்றிய சேவை வழங்குகை முறைமைகள் மற்றும் பால்நிலைச் சமத்துவம் மீதான புலனுணர்தன்மை என்பன பற்றிய பண்பறி மதிப்பீடொன்றின் மீது *(qualitative assessment)* கவனக்குவிவைச் செலுத்தியுள்ளது.

ISBN 978-955-7170-01-5

9 789557 170015

**கிழக்கு சமூக அபிவிருத்தி மையம்**
#33, Railway Road, Oddamavady-01, Batticaloa, Sri Lanka
+94 652 258 320
esdf.srilanka@gmail.com
www.facebook.com/esdf.srilanka